
தர்மசக்கரம்

ACC-NO- 38679















துன்மதி ஸ்ரீ சித்திரை மீ சக்கரம் 30 ஆரம் 4

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

குருகுலத்தில் புதிய மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான அறிக்கை

இந்தப் பள்ளியில்4 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலும் உள்ளன. இதனுடைய தொடர்ச்சி 11, 12 வகுப்புக்கள் மதுரை ஜில்லா, திருவேடகம், விவேகானந்த மேல்நிலைப்பள்ளியில் அமைந்திருக்கின்றன. 8 ஆம் வகுப்பிலும் அதற்கு மேலான வகுப்புக்களிலும் புதிய மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. 4, 5, 6, 7ஆம் வகுப்புக்களில் மட்டும் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் மே மாதம் 30ஆம் தேதி காலை 9 மணிக்குள் மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். அப்பொழுது மாணவர்களை நேரில் பார்த்து, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றைப் பரிசோதித்து அவர்களுக்கு இடமளிக்கப்படும். மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்ப்பது இல்லை. பரீட்சைகள் மே மாதம் 30 ஆம் தேதி காலை 10-00 மணி முதல் முற்பகலிலும் பிற்பகலிலும் நடைபெறும். மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான முடிவுகள் அன்று மாலையிலும் இரவிலும் ஒவ்வொரு வகுப்பாக அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்பவேண்டியதில்லை. மாணவனை எடுத்துக் கொள்வதாக அறிவித்தவுடன் பொறுப்புத்தொகை ரூ 200ம், சாமான்கள்பொருட்டு ரூ 200ம் ஆக ரூபாய் 400முன்பணமாகச்செலுத்த ஆயத்தமாக இருக்கவேண்டும். இங்கு இடம்பெற்ற பிறகு, முன்பு படித்த பள்ளிக்கூடத்திலிருந்து பள்ளிக்கூட மாற்ற சர்டிபிகேட் வாங்கித் தந்தால் போதுமானது. உணவு, உடை, வாடகை, முட்டுவழி மற்றும் எல்லாச் செலவுகளுமாக வகுப்புக்கு ஏற்ப மாதம் ரூ. 150 முதல் ரூ. 175 வரை ஆகும். இலவசமாகவோ குறைந்த செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை. போதனமொழி தமிழ். மேலும் விவரம் வேண்டுவோர், 75 பைசா ஸ்டாம்பு அனுப்பிவைத்து "வித்யாவன குருகுல சட்டதிட்டங்கள்" என்ற சிறு புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளலாம்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்

மாணவ மாணவிகளுக்கு விடுதி வசதிகள்

மாணவர்களை மேல்நிலை வகுப்புக்களில் (11, 12) சேர்ப்பதற்கு:
விவேகானந்த மேல்நிலைப்பள்ளி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

மாணவர்களைக் குருகுலக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:
விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு-624 217, மதுரை மாவட்டம்.

குழந்தைகளை நர்ஸரியிலும், ஆரம்பப் பள்ளியிலும் (ஆண், பெண்) சேர்ப்பதற்கு:
ஸ்ரீ ஸாரதா பாலமந்திர், சேலம்-626 007.

மாணவிகளை உயர்நிலைப்பள்ளியில் சேர்ப்பதற்கு:
ஸ்ரீ ஸாரதா வித்யாலயா, சேலம்-636 004.

மாணவிகளைக் கல்லூரியில் சேர்ப்பதற்கு:
ஸ்ரீ ஸாரதா கல்லூரி, சேலம்-636 004.

என்ற விலாசங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளுங்கள்.

முத்தமிழ்ப் பணை
10.4.81

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30 | துன்மதி ௵ சித்திரை ௴ | ஆரம் 4

பொருளடக்கம்

வருட சந்தா: உள்நாடு ரூ. 12-00 வெளிநாடு ரூ. 25-00
தனி இதழ் ,, ரூ. 1-25 ,, ரூ. 2-25

அந்தர்யோக விவரங்கள்

சேலம் ஜில்லா—வனவாசியில் 19—4—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தவ இல்லம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சிவகளையில் 19—4—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நடுநிலைப்பள்ளி (சிவகளை)
நேரம்: காலை 10·00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமந் சுவாமி திவ்யானந்தர்

தஞ்சையில் 19—4—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்; வீர ராகவ மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்; ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

[தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க]

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—தேனியில் 22—4—81 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம், தியாகராஜ நகர்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**

உணவு வசதி: பகல் உணவிற்கு ரு. 1-50 செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

பெங்களூர் கண்டோன்மெண்டில் 3—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்

நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

தர்மபுரி ஜில்லா—காவேரிப்பட்டணத்தில் 4—5—81 திங்கட்கிழமை

இடம்: தபோவனம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

உணவு வசதி: நேரில் உணவுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வடஆர்காடு ஜில்லா—துரிஞ்சாபுரத்தில் 10—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: புஷ்பகிரி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

கோவை ஜில்லா—வையம்பாளையத்தில் 10—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுதந்திர உயர்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 10—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்**

நீலகிரி மாவட்டம்—குன்னூரில் 10—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் ஸ்ரீ சற்குரு இராஜயோக ஆசிரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஞானானந்தர்**

உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரு. 2-00 பணம் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்

வடஆர்காடு ஜில்லா—ஆம்பூரில் 17—5—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு நாகநாத சுவாமி ஆலய திருமண மண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

வடஆர்காடு ஜில்லா—குடியாத்தத்தில் 18—5—81 திங்கட்கிழமை

இடம்: வேதாந்தப் பாடசாலை

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30	துன்மதி ௵ சித்திரை ௴	ஆரம் 4

பிரார்த்தனை

रागादिदोषरहितं स्वजनानुरागं वैराग्यशान्तिनिलयं गिरिजासहायम् ।
माधुर्यधैर्यसुभगं गरलाभिरामं वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥

— व्यासः

ராகாதிதோஷரஹிதம் ஸ்வஜனானுராகம்
வைராக்ய சாந்திநிலயம் கிரிஜாஸஹாயம் ।
மாதுர்ய தைர்யஸுபகம் கரலாபிராமம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

— *வியாசர்*

விருப்பு வெறுப்பற்றவர். பக்தர்களுக்கு அனுக்ரஹ மூர்த்தி. பற்றின்மைக்கும் அமைதிக்கும் இருப்பிடம். மலைமகளுக்கு மணாளன். இனிமைக்கும், உறுதிப்பாட்டுக்கும் இருப்பிடம். அழகுக்கு உறைவிடம். இத்தகைய காசி விசுவநாதனை வணங்குவோம்.

கண்ஆரக் கண்டோர் கருப்பொருள் காணாமல்அருள்
விண்ணூடு இருந்தஇன்ப வெற்பே பராபரமே.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

ஒழுக்கம் எதிரியை நண்பனுக்குகிறது.

துன்பம் மனிதனைப் பண்படுத்துகிறது

மனத்தூய்மையே சாந்தத்தை வளர்க்கிறது.

அறிவு வளர்ச்சி ஆற்றலின் அழிவுக்கு ஈடு செய்யமாட்டாது.

தங்களைத் தாங்களே ஆளவல்லவர்க்கே குடியரசு சாத்தியமாகிறது.

அறிவின்மையே மனிதன் படும் துயரங்களுக்கெல்லாம் மூலகாரணமாகிறது.

பணிவிடை பண்ணுவதற்கும், பரநாட்டம் பூணுவதற்கும் வரையறை கிடையாது.

நன்னெறியைக் கடைப்பிடிப்பவன் இடைஞ்சல்களனைத்தையும் சமாளிக்க வல்லவனுகின்ருன்.

ஒழுக்கத்தில் நிலைத்திருப்பவனுக்கு இடுக்கண்களனைத்தையும் சமாளிக்கும் வல்லமை வருகிறது.

ஆற்றலின் அழிவைத் தொடர்ந்து கேடுகளனைத்தும் உருவெடுக்கின்றன; நல்லறிவும் பாழாகிறது.

பொருளற்ற உவகையும், மனச்சோர்வும் மனிதனுடைய முன்னேற்றத்துக்கு இடைஞ்சல்களாம்.

கடவுள் வேறு, சன்மார்க்கம் வேறு என்று சொல்லுபவர்கள் இரண்டையும் அறிந்து கொண்டவர்கள் அல்லர்.

நீரில் ஓடுகிற கப்பல் நிலத்தில் ஒன்றுக்கும் உதவாது. பொருந்தாத சூழ்நிலையில் மனிதன் எதையும் சாதிக்க முடியாது.

பிரபஞ்ச நாட்டம் மனிதனைத் துன்பத்தில் ஆழ்த்துகிறது; பரநாட்டமோ அவனைப் பேரின்பத்தின்கண் எடுத்துச் செல்லுகிறது.

தலைவன் பதவிக்குத் தகுதி வாய்ந்தவன் யாரைக் குறித்தும் குறைகூறுவதில்லை; யாரையும் உதவாதவன் என்று ஒதுக்குவதில்லை.

குழந்தையொன்று கவலைப்படுவதுமில்லை; ஆராய்ச்சி பண்ணுவதுமில்லை. அங்ஙனம் கடவுளைச் சார்ந்திருப்பவனுக்குக் கவலையுமில்லை; ஆராய வேண்டிய அவசியமுமில்லை.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் சிஷ்யர்களோடு உரையாடிக் கொண்டிருக்கிறார். அவர் இயம்பியதாவது: “பிரம்மஞானத்தை அடைவதற்குப் பாதைகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று ஞான மார்க்கம்; மற்றொன்று பக்தி மார்க்கம். பிரம்ம ஞானத்தை அடையப்பெற்றான பிறகு ஒரு சிலர் பக்தியிலேயே ஈடுபட்டவர்களாகவிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்வது உலகத்தவர்களுக்கு நன்னெறியைக் காட்டித் தருதல் பொருட்டேயாம். அவதார புருஷர் ஒருவர் பக்தர் போன்று வாழ்ந்து வருவது மற்றவர்களுக்கு நல்வாழ்வைக் காட்டித் தருவதற்காகவே.

“சரீரம் எடுத்திருக்கிற ஒருவனுக்கு எளிதில் அகங்காரத்தை ஒதுக்கித்தள்ள இயலுவதில்லை. உடலைத் தான் என்று அபிமானிப்பதே அகங்காரம். இத்தகைய அகங்காரத்தை அகற்றுதற்குச் சுயமுயற்சி மட்டும் போதாது. ஈசுவர கிருபையும் அதற்குத் தேவை. ஈசுவர கிருபையும் சாதகனுடைய சுயமுயற்சியும் ஒன்று சேர்ந்து அன்னவனுக்குச் சமாதி நிலையை உண்டுபண்ணுகின்றன. சமாதி நிலைகளுள் உச்சநிலையிலிருப்பது நிர்விகற்பசமாதி. பேச்சு மூச்சற்று இருப்பதால் அதற்கு ஜட சமாதி என்பதும் ஒரு பெயர்.

“அவதார மூர்த்திகள் அடிக்கடி சமாதி நிலை எய்துகின்றனர். சமாதி நிலை கலைந்து உலக ஞாபகத்துக்கு வருகிறபொழுது அவதார மூர்த்திகளுக்கு உடலைத் தான் என்று கருதும் அகங்காரம் உண்டாவதில்லை. அது ‘ஞான அகங்கார’மாகவோ அல்லது ‘பக்தி அகங்கார’ மாகவோ இலங்குகிறது. ‘ஞான அகங்கார’த்தின்’ வாயிலாக அவர்கள் மக்களுக்குப் பாரமார்த்திக வாழ்வைப் புகட்டுகின்றனர். சங்கராச்சாரியர், ஞான அகங்காரத்தை உடைத்திருந்தார்.

“பக்தி அகங்காரத்தின்வாயிலாகச் சைதன்ய தேவர் பக்தியின் சுவையை இனிது அனுபவித்தார். அவருக்குப் பக்தர்களின் கூட்டுறவும் பரமானந்தத்தை ஊட்டியது. பகவானுடைய மகிமைகளைப் பற்றி அவர் இனிது உரையாடினார். பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதில் அவர் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார்.

“தீவிர சாதகனுக்கும் அகங்காரத்தை அகற்றுவது மிகக்கடினமாகத் தென்படுகிறது. ஆதலால் பக்தனொருவனுக்கு ஜாக்ரதம், சொப்பனம், சுஷுப்தி ஆகிய அவஸ்தாத்ரயத்துக்கு விளக்கம் தருவதில் நாட்டம் உண்டாவதில்லை. அவைகளுக்கிடையில் உள்ள பாகுபாட்டை அவன் பொருள்படுத்துவதில்லை. அம்மூன்று அவஸ்தைகளையும் ஒரே பாங்கில் பக்தன் ஏற்றுக்கொள்ளுகிறான். அடுத்தபடியாகக் குணங்களுள் சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. இம்மூன்றனுள் ரஜோகுணத்தின் துணை கொண்டு தமோ குணத்தை மீளுதலும் அதன் பிறகு சத்வ குணத்தின் துணைகொண்டு ரஜோகுணத்தை மீளுதலும் ஆத்மசாதனத்தில் அமைந்துள்ள முறைமைகள் ஆகும். ஆனால் பக்தன் ஒருவனோ இந்த மூன்று விதக் குணங்களைப் பாகுபாடின்றி ஏற்றுக் கொள்ளுகிறான். பக்தன் ஒருவனுக்குப் பிரபஞ்சம் வேறு, பகவான் வேறு அல்ல. பகவான் தாமே பிரபஞ்சமாக இலங்குகின்றார். பகவான் தாமே இருபத்துநான்கு தத்துவங்களாக இலங்குகின்றார். அந்த இருபத்துநான்கு தத்துவங்களாவன: ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி ஆகிய பூதங்கள் ஐந்து. ஓசை, ஊறு, வடிவம், சுவை, நாற்றம் ஆகிய அப்பூதங்களின் தன் மாத்திரைகள் ஐந்து. ஞானேந்திரியங்கள் ஐந்து. கர்மேந்திரியங்கள் ஐந்து. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கு. ஆக இவையாவும் சேர்ந்து இருபத்துநான்கு தத்துவங்களாகின்றன. இந்தத் தத்துவங்களைக் கொண்டு தோற்றத்துக்கு வந்திருப்பது ஜகத் அல்லது பிரபஞ்சம். இப்பிரபஞ்சத்தில் உயிர்களாக இலங்குபவைகள் ஜீவாத்மாக்கள். பகவான் தாமே ஜகத் ஆகவும், ஜீவர்கள் ஆகவும் இலங்கிக்கொண்டிருக்கிறார் என்பது பக்தன் கொண்டுள்ள

முடிவு. இவையாவுக்கும் மேலாகப் பக்த னிடத்து மற்றொரு கோட்பாடு இருக்கிறது. பக்தர்களுடைய நலனுக்காகப் பகவான் தாமே பிரத்யட்சமாகத் தென்படுகின்ற தெய்விக வடிவெடுத்துத் தம்மை விளக்கிக்கொண்டிருக்கின்றார். ஆத்ம சைதன்யமே அத்தகைய வடிவத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

பக்தனொருவன் வித்யாமாயையினிடம் அடைக்கலம் புகுந்தவனாகின்றான். அவன் ஆர்வத்தோடு நல்லார் இணக்கத்தை நாடுகின்றான். பக்தனொருவன் நியதியுடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகிறான். பகவத் விஷயங்களை அவன் ஆர்வத்துடன் ஆராய்ச்சி பண்ணுகிறான். பக்தி சாதனங்களில் அவன் தீவிரமாக ஈடுபடுகிறான். பகவானோடு சம்பந்தப்படாத பாங்குகளை யெல்லாம் அவன் அறவே துறந்து ஒதுக்கித் தள்ளுகிறான். ஆத்மசாதகன் ஒருவனுக்கு அகங்காரத்தை ஒதுக்கித் தள்ளுவது மிகக் கடினமானது என்பது பக்தனுடைய கொள்கை. ஆதலால் ஆண்டவனுடைய தொண்டன் என்னும் பாங்கில், பகவானுடைய தாசன் என்னும் பாங்கில் அப்பொல்லாத அகங்காரத்துக்கு அவன் இடம் கொடுக்கிறான். தொண்டர்களுக்குத் தொண்டன், அல்லது அடியார்களுக்கு அடியவன் என்னும் பாங்கையும் அந்த அகங்காரத்துக்கு அவன் அளிக்கிறான்.

"பகவான் ஒருவரே அனைத்துமாய் இலங்குகின்றார் என்பதையும், அவர் ஒருவரே மெய்ப்பொருள் என்னும் ஞானத்தையும் பக்தன் அடையப் பெறுகிறான். பகவானுக்குப் புறம்பாக வேறு எப்பொருளும் இல்லையென்பதை அவன் சாட்சாத்கரிக்கிறான். பரமன் ஒருவனே பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துமாய் இலங்குவதால் பிரபஞ்சத்தை அவன் கனவு எனக் கருதுவதில்லை. அதற்கு மாறாகப் பரமனே இத்தனையுமாய் வடிவெடுத்திருக்கிறார் என்று அவன் சொல்லுகிறான். மெழுகைக்கொண்டு பற்பல செடி கொடிகளை அமைப்பது சாத்தியம். அங்ஙனம் மெழுகினால் ஆக்கப் பெற்ற தோட்டம் ஒன்றை அமைக்கலாம். பற்பல விதப்பட்ட செடிகளை உடைய தோட்டமாக அது தென்பட்டாலும் உண்மையில் அது மெழுகினால் செய்யப்பட்டதே. அதேபோன்று இப்பிரபஞ்சத்தில் அசேதனம், சேதனமாகிய பலதரப் பட்டவைகள் அமைந்திருக்கின்றனவென்றாலும் அவையாவுக்கும் மூலப்பொருள் பரமன்.

மெய்ப்பொருள் ஒன்றே பிரபஞ்சத்திலுள்ள பலப்பல பொருள்களாகக் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கிறது என்னும் ஞானம் மனிதனுக்கு எளிதில் வாய்ப்பதில்லை. பக்தி முதிர்ந்து மேல்நிலையடைகின்றபொழுதே சாதகன் ஒருவனுக்கு இந்த மெய்க்காட்சியமைகிறது. பித்தம் அதிகரித்தால் அது காமாலையாக வடிவெடுக்கிறது. அதே விதத்தில் பக்தி அதிகரித்தால் அது ஞானமாக மிளிர்கிறது. காமாலையால் பீடிக்கப்பட்டிருக்கிறவனுக்குப் பார்ப்பதெல்லாம் மஞ்சள் நிறமாகத் தென்படுகின்றன. கிருஷ்ணனைப்பற்றியே தியானம் பண்ணியதின் விளைவாக ராதிகாவுக்கு யாவும் கிருஷ்ணனாகவே தென்பட்டன. மேலும் அவள் தானே கிருஷ்ணன் ஆகிவிட்டதாகவும் உணர்ந்தாள். ஒரு துண்டு ஈயம் ஜாடியிலிருக்கும் பாதரசத்தோடு சேர்ந்து கிடக்குமானால் அந்த ஈயம் பாதரசத்தில் கரைந்து போகிறது. மானுடனொருவன் எதை ஆழ்ந்து எண்ணுகிறானோ அந்த மயமாக அவன் தானேயாகிறான். பக்தனொருவன் சர்வகாலமும் பகவானைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பதன் விளைவாக அவன் தானே பகவத் மயமாகத் திருந்தியமைகிறான். அன்னவனுடைய அகங்காரம் அடிபட்டுப்போகிறது. அகங்காரம் அகன்றுபோன பிறகு பகவான் தாமே பக்தனாகவும், உயிர் வகைகளாகவும், பிரபஞ்சமாகவும் வடிவெடுத்து விளையாடுகிறார் என்பதை அனுபூதியில் அவன் அறிய வருகிறான்.

"ஆத்ம சாதகன் ஒருவனிடத்து அகங்காரம் இருக்கின்ற பொழுது அவன் இறைவனோடு ஏதேனும் ஒருவிதப் பொருத்தமான இணக்கத்தை வைத்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய வழிபடு தெய்வத்தை அவன் ஆண்டவனாகக் கருதலாம், அன்னையாகக் கருதலாம், தன்னுடைய அன்புக்குரிய தோழனாகக் கருதலாம். இவைகளுக்கு நிகரான வேறு எந்த விதமான இணக்கத்தையும் இறைவனோடு அவன் வைத்துக்கொள்ளலாம். பக்தி சாதனங்கள் புரிந்து கொண்டிருந்த அந்நாட்களில் என்னை நான் அன்னை பராசக்தியின் பணி

விடைப் பெண்ணுக வைத்துக் கொண்டேன். அத்தகைய சாதனத்தின் விளைவாக அன்னை பராசக்தியும் பரப்பிரம்மமும் ஒன்று என்னும் மெய்யறிவு எனக்கு உண்டாயிற்று. அத்தகைய சாதனத்தில் ஈடுபட்டிருந்தபொழுது என்னை நான் ஒரு பெண்பாலாகவே எண்ணிக் கொண்டேன். பெண்பாலாகவே நான் ஆடை அணிந்திருந்தேன். அதற்கேற்ற ஆபரணமும் ஒன்றிரண்டை நான் அணிந்திருந்தேன். ஆடவன் ஒருவன் ஆழ்ந்து தன்னைப் பெண்பாலாகக் கருதுவானுகில் காமநோய் அப்பொழுது அவனை விட்டு அகன்று போகிறது. ஆதிசக்தியை ஆத்ம சாதகனொருவன் ஆராதித்தல் வேண்டும். அவளைப் போற்றிப் பாராட்டுதல் முற்றிலும் அவசியம். அன்னை பராசக்தியே உலகெங்குமுள்ள பெண்பாலாக இலங்கிக் கொண்டிருக்கிருள். இக்காரணத்தை முன்னிட்டே பெண்பாலர் அனைவரையும் அன்னை பராசக்தியின் வடிவங்கள் என நான் கருதி வருகிறேன். பெண் ஒருத்தியைத் தாயாகக் கருதுவதின் விளைவாக மனத்தூய்மை தானுக வந்து அமைகிறது. அதற்கிடையில் ஆத்ம சாதகன் பெண்பாலர்களிடமிருந்து எவ்வளவுக்கெவ்வளவு ஒதுங்கியிருக்கின்ருனே அவ்வளவுக்கவ்வளவு அவன் சாதனத்தில் விரைந்து முன்னேற்றமடைகின்ருன். ஏகாதசி நாளன்று உணவு உண்ணுது உபவாசம் பண்ணுவது மிக நன்று. ஒரு துளி ஜலம்கூட அருந்தாது, அல்லது அருந்துவதைப்பற்றி நினையாது உபவாசம் பண்ணுபவர்களிருக்கிருர்கள். அதன்விளைவாக மனத்தூய்மை தானுக வந்து அமைகிறது. பெண்பாலரைத் தாயாகக் கருதி வருகிற சாதனமும் தூய்மை மிக வாய்க்கப்பெற்றது. அத்தகைய தூய்மையில் நிலைபெற்றிருப்பவனுடைய மனது போகத்தைப்பற்றிச் சிந்திக்கிற கீழான நிலைக்கு ஒருபொழுதும் வருவதில்லை. ஏகாதசி விரதம் அனுஷ்டித்து வருகிற சிலர் சிறிது பாலும், பழமும் அருந்துகின்றனர். அது இரண்டாந்தரமான உபவாசம் ஆகிறது. யார் ஒருவன் உபவாசம் பண்ணுகிறபொழுது உணவைப்பற்றிய எண்ணமே சிறிதேனும் இல்லாதிருக்கிருனே அத்தகையவனுடைய உபவாசமே சாலச் சிறந்தது. அவனுடைய உள்ளத்தில் உறுதிப்பாடு நன்கு அமைகிறது. உபவாசம் பண்ணுகிறபொழுது மனதினுள் தெய்விக எண்ணங்களை ஆழ்ந்து செலுத்த வேண்டும். அன்னை பராசக்தியிடம் 'தாயே நான் உன் குழந்தை' என்னும் எண்ணத்தை ஆர்வத்தோடு நிலைநாட்டுதல் அவசியமாகிறது. அங்ஙனம் ஒரு பாலகனுடைய பாங்கை அடையப்பெற்றிருப்பது மிகவும் நல்லது. அப்பாங்கு படைத்திருப்பவனைக் காமநோய் வந்து உபத்ரவம் பண்ணமாட்டாது.

"சந்நியாசி ஒருவனுடைய வாழ்வு கட்டுப்பாடே வடிவெடுத்ததாம். ஒரு சொட்டு ஜலமும் அருந்தாது ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பதற்கு நிகரானது சந்நியாசியினுடைய வாழ்க்கை. சுக போகத்தில் அவன் நாட்டம் கொள்ளுவானுகில் அது அச்சத்துக்கு இடம் தருகிறது. "காமமும், காசு ஆசையும் உலகப்பற்றுக்கு வித்துக்களாகின்றன. இவைகளைப்பற்றிய எண்ணம் துறவியின் உள்ளத்தில் உதிக்குமாகில் அவன் துப்பிய எச்சிலை மீண்டும் எடுத்து விழுங்குவதற்கு நிகராகிறது. போகங்கள் பலதரப்பட்டவைகளாயிருக்கின்றன. பணம் படைத்திருப்பதில் ஆசை, பொருள் படைத்திருப்பதில் ஆசை, பேரிலும், புகழிலும் ஆசை, இந்திரிய சுகங்களில் ஆசை, இப்படியெல்லாம் போகம் வடிவெடுக்கிறது. சந்நியாசி ஒருவன் பெண்பாலர்களுடைய சூழ்நிலையில் வாழ்ந்திருக்கலாகாது. பெண்பாலர்களோடு கூட்டுறவு பூணுதலும் அவனுக்கு ஒவ்வாது. மாதர்களோடு சந்நியாசி தொடர்பு கொள்ளுதல் தனக்கும் பொருந்தாது, மற்றவர்களுக்கும் பொருந்தாது. சமுதாயத்துக்கு முன் மாதிரியாகச் சந்நியாசி இலங்குகிருன். அவன் வாழ்ந்து வருகிற வாழ்க்கையே ஏனையவர்களுக்குப் பாடமாகிறது. வெறும் வாய்ப்பேச்சு போதனையாகாது. பேச்சிலும் மிக்கது பழக்கம். யாண்டும் தூயவாழ்வுக்கு எடுத்துக் காட்டாகத் துறவியின் வாழ்வு அமைந்திருத்தல் வேண்டும். சந்நியாசி உடல் தாங்கியிருப்பதே உலகத்தவர்களுக்கு வழிகாட்டுதல் பொருட்டேயாம். துறவறம் பூண்டிருக்கிறவன் தையலர்களோடு சேர்ந்து அமர்ந்திருப்பதும், அவர்களோடு நெடுநேரம் உரையாடுவதும் போகத்துக்கு நிகராக நிராகரிக்கப்படுகின்றன."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11. தந்தைஇரு தாள்துணித்துத் தம்பிரான் தாள்
[சேர்ந்த
எந்தைஇரு தாள் இணைக்கே இன்புறுவது
[எந்நாளோ.

சிவாலயத்தில் சந்நிதிக்கு இடப்பக்கத்தில் சண்டேசுவர நாயனார் இடம் பெற்றுள்ளார். முறையாக ஏனைய தெய்வங்களின் வழிபாடு முற்றுப்பெற்றான பிறகு சண்டேசுவர நாயனார் சந்நிதிக்குச்சென்று மூன்று தடவை கைதட்டி அவர் முன்னிலையில் அவரவர் அணிந்திருக்கும் வஸ்திரத்தில் ஒரு துண்டு நூல் பிரித்தெடுத்து நாயனார் முன்னிலையில் போட்டு வணங்குவது ஐதிகம். இப்படிச் செய்வதில் மேலாம் கருத்து ஒன்று அடங்கியிருக்கிறது. சிவனார் கோயிலினின்று பொருள் எதையும் யாரும் அபகரித்துக்கொண்டு போகலாகாது. அது விஷயத்தில் நாயனார் மிகக் கண்டிப்பாய் இருக்கிறார். ஆலய நிர்வாகம் அவருடைய மேற்பார்வையில் நடைபெறுகிறது. அவர் முன்னிலையில் கைதட்டுவதன் வாயிலாக வழிபட வந்தவன் எப்பொருளையும் கோயிலினின்று எடுத்துக்கொள்ளாது வெறும் கையோடு போகிறான் என்பதற்கு அது அத்தாட்சியாகிறது. அவர் முன்னிலையில் வஸ்திரத்திலிருந்த நூலைப் போடுவதன் கருத்து ஒவ்வோர் ஆத்ம சாதகனும் தன்னால் இயன்ற அளவு தேவாலயப் பொருளை வளர்க்கவேண்டும், அங்கிருந்து எதையும் தனக்குரியதாக்கிக் கொள்ளலாகாது என்னும் கோட்பாடு அமைந்திருக்கிறது. தனியுடைமையைப் பொது உடைமையாக்குவது முறை. பொது உடைமையைத் தனி உடைமை ஆக்குவது முறையன்று என்னும் கோட்பாடு இதில் அடங்கியிருக்கிறது. அதினின்று எதையும் கைப்பற்றலாகாது என்பது கோட்பாடு.

இவற்றுக்கெல்லாம் மேலாக நாயனாருடைய தந்தையார் உலகப்பற்றின் மிகுதியால் சிவலிங்கத்தைக் காலால் உதைத்தார். அத்தகைய சிவ அபராதத்தைச் சகிக்கமாட்டாத சண்டேசுவரநாயனார் தம் தந்தையின் பாதங்களையே மழுவால் வெட்டித்தள்ளினார். அவர் செயல் பக்திக்கு அறிகுறி. பிரபஞ்ச வாழ்வு அனைத்தும் பரத்துக்கு உரியதே ஒழிய இகத்துக்குரியதன்று என்னும் கோட்பாட்டை நாயனார் செயல் நன்கு விளக்குகிறது. அவர் படைத்திருந்த பராபக்தியின் விளைவாக அவர் பரமனைச் சார்கின்றார். அத்தகைய சிவனடியாரைச் சார்வதன் வாயிலாக ஆத்மசாதகன் சிவனை அடைவது திண்ணம் என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

2-1 துய்ய கரமலரால் சொல்லாமல் சொன்ன உண்மை
ஐயனைக்கல் ஆல்அரசை யாம்அணைவது
[எந்நாளோ.

சிவ மூர்த்திகளுள் தலை சிறந்ததாய் இருப்பது தக்ஷிணாமூர்த்தி. நலன் அனைத்தையும் வழங்கும் வடிவம் என்பது தக்ஷிணாமூர்த்தியின் பொருளாம். அத்தகைய ஞானமூர்த்தி கல்லால விருட்சத்துக்கடியில் வீற்றிருப்பது, பிரபஞ்சத்தின் பிரயோஜனத்தை விளக்குகிறது. பிரபஞ்சத்துக்குச் சின்னமாகக் கல்லால விருட்சம் அமைந்திருக்கிறது. பிரபஞ்சத்தைப் போகத்துக்கும் பயன்படுத்தலாம்; யோகத்துக்கும் பயன் படுத்தலாம். அதை யோகத்துக்கென்றே பயன்படுத்துவது மிகச் சிறந்தது என்னும் கோட்பாட்டைத் தக்ஷிணாமூர்த்தியின் சாந்நித்தியம் எடுத்துக் காட்டுகிறது. அருள் குருவாகிய அண்ணல் தம் திருக்கரத்தில் சின்முத்திரை தாங்கியிருக்கிறார். மும்மலங்களோடு சேர்ந்து கிடந்த ஜீவாத்மன் அவைகளை நீத்துவிட்டுப் பரமனோடு யோகம் பூணுவதே வாழ்க்கையின் முடிவான குறிக்கோள் என்பதை அண்ணல் பூண்டுள்ள சின்முத்திரை விளக்குகிறது. சுட்டு விரல் ஜீவாத்மாவின் சின்னம். ஜீவன் அகங்காரத்தோடும், கர்மத்தோடும், பிரபஞ்சத்தோடும் சேர்ந்திருப்பதற்கு அறிகுறியாக அந்தச் சுட்டுவிரலானது நடுவிரல் மோதிரவிரல் சிறுவிரல் ஆகியவைகளோடு சேர்ந்திருக்கிறது. அவைகளிடத்திருந்து அதைப் பிரித்தெடுத்துக் கட்டைவிரலோடு சேர்த்து வைப்பது சின்முத்திரை. இறைவனார் இந்நிலையில் பேச்சு எதற்கும் இடம் தருவதில்லை. அவர் மௌனமுற்றிருக்கிறார். சொல்லையும், சிந்தையையும்

கடந்து நிற்கும் பாரமார்த்திகப் பெருநிலை நிஜ சொரூபம் என்னும் பேருண்மையை அண்ணலின் மௌனநிலை இனிது எடுத்து விளக்குகிறது. இத்தகைய அருள்நிலையைச் சார்ந்திருப்பதே ஜீவாத்மன் செய்கின்ற செயல்கள் அனைத்திலும் தலை சிறந்த செயலாகிறது. 'அண்ணல் பேச்சற்ற நிலையில் விளக்கியுள்ள பாரமார்த்திகப் பெருநிலையைத் தீவிரமாகச் சென்றடைவது வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை என்னுடைய ஜீவிதத்தில் நடைமுறையில் கொண்டு வரும் நாள் எந்நாளோ' என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்தாம்.

2-2. சிந்தையினுக்கு எட்டாத சிற்சுகத்தைக் காட்ட [வல்ல
நந்தி அடிக் கீழ்க்குடியாய் நாம்அணைவது [எந்நாளோ.

சைவ மரபில் குருசிஷ்ய பரம்பரைக்கு முதல் மூர்த்தியாயிருப்பவர் நந்தீசுவரர். பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் ஒடுங்கிய பொழுது நந்தீசுவரர் மட்டும் எஞ்சியிருந்து சிவனார்க்கு வாகனமானார். ஆதலால் சிவசாயுஜ்யம் இவருக்குரியதாயிற்று. அறிவிலிகளுக்கிடையில் சிவநிந்தை நிகழ்வது உலகின் இயல்பு. தக்ஷபிரஜாபதி சிவநிந்தை செய்ததைச் சகிக்கமாட்டாத நந்தீசுவரர் தக்ஷனுடைய தலையை வெட்டித் தள்ளினார். சகுணப் பிரம்மமாயுள்ள சிவனாரின் விபூதிகளில் தலைசிறந்தவராக நந்தீசுவரர் விளங்குகிறார். ஆதலால் சைவ சமய மரபின்படி குருசிஷ்ய பரம்பரை நந்தீசுவரர் இடத்திலிருந்து வடிவெடுத்து வருவது முற்றிலும் பொருத்தம். அத்தகைய நந்திதேவனருளால் மனாதீத நிலையை அடையப் பெறும் நன்னாள் விரைவில் வந்து வாய்ப்பதாகுக என்பது இக்கண்ணியின் உட்கருத்து.

2-3. எந்தை சனற்குமரன் ஆதிஎமை ஆட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்த்துநாள் எந்நாளோ.

குருசிஷ்ய பரம்பரையில் யாண்டும் குருவாயிருப்பவர் தக்ஷிணாமூர்த்தி. அந்தக் குருமூர்த்திக்கு அபின்னமாயிருப்பவர் நந்தீசுவரர். உலகனைத்துக்கும் குருவாக இலங்கும் இந்த மூர்த்திக்கு ஆதியில் நான்கு சிஷ்யர்கள் அமைந்தார்கள். அவர்கள் முறையே சனகன், சனந்தனன், சனத்குமாரன், சனந்தனன் என்று பெயர் படைத்தவர்கள். இந்த நான்கு பேரும் பிரம்மதேவனுடைய மானச புத்திரர்களாவார்கள். உண்மையில் பிரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகள் அத்தனைபேரும் பிரம்மதேவனுடைய மானச புத்திரர்களும், புத்திரிகளும் ஆவார்கள். அந்த ஜீவர்களுக்கு முன்மாதிரியாக இந்த நான்குபேரும் அமைந்துள்ளார்கள். வயதில் அவர்கள் மிக மூத்தவர்கள். அன்னவர்களுக்குக் குருவாய் அமைந்திருக்கும் தக்ஷிணாமூர்த்தி யாண்டும் யௌவனம் படைத்தவராக இலங்குகிறார். அவர் காலாதீதப் பொருளாக இருப்பதால் ஆயுள் அவரை அணுகாது. எனவே நித்திய யௌவனம் அவருடைய விபூதி. ஜீவாத்மாக்கள் எண்ணிறந்த பிறவிகள் எடுத்துப் பிரபஞ்ச சம்பந்தமான அனுபவங்கள் ஏராளமாகப் பெற்றவர்கள். ஆதலால் அந்த நான்கு பேரும் அனுபவத்தில் விருத்தர்கள். அவர்கள்போன்று அனுபவத்தில் தொண்டு கிழவர்கள் ஆகிறவர்களுக்குப் பிரபஞ்ச வாழ்க்கையில் பற்று அகலுகிறது. பர நாட்டத்தில் இயல்பாக அவர்களுடைய மனது தீவிரமாகச் செல்லுகிறது. உலகப் பற்று அனைத்தும் நீங்கப் பெற்றவர்களாகத் தக்ஷிணாமூர்த்தியின் சந்நிதியில் அவர்கள் வந்து அமர்ந்தனர். குருமூர்த்தியோ வாய் திறந்து எதையும் பேசவில்லை. அவர் மௌனத்தில் திளைத்திருந்தார். சொற்பதம் கடந்த தொல்லோனாகிய அவர் யாண்டும் நிஜசொரூபத்தில் யௌவனத்தில் நிலைத்திருந்தார். அதன் உட்பொருள் சிஷ்யர்களுக்கு விளங்கிற்று. பிரபஞ்சம் முழுவதும் ஓசை மயம். ஓசை, ஒலியில் மௌனமில்லை. பிரபஞ்சத்தில் கட்டுண்டு கிடப்பவர்கள் ஓசைக்கு அடிமைப்பட்டவர்கள் ஆகின்றனர். பிரபஞ்சத்தைப் புறக்கணித்துப் பரத்தில் ஒன்றுபடுபவர் இரண்டற்ற நிலை எய்துகின்றனர். ஓசையை உண்டு பண்ணுவதற்கு இரண்டோ இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களோ தேவை. மற்று ஏக வஸ்து தன்னில்தானாயிருக்கிறது. அது மௌன நிலை. பரமானந்தம் அது. பேரறிவுப்பெருவெளியாய் இலங்கிக்கொண்டிருப்பதும் அதுவே. அந்நிலையை அடையப்பெற்ற சனத்குமாரன் நிலையை நான் அதிவிரைவில் அடையப்பெறுவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

18. பரமபதத்தில் வீற்றிருக்கும் பெம்மானாகிய உங்கள் பிதா பரிபூரணமே வடிவெடுத்தவராக இருக்கின்றார். அப்பரிபூரணம் உங்களுக்கும் வந்து அமைவதற்கான மனபரிபாகத்தைப் பெற்று வருவீர்களாக.

இயேசுநாதரின் உபதேசங்களின் சாராம்சம் முழுவதும் இவ்வுபதேசத்தில் அடங்கி இருக்கிறது. மனிதன் அடையவேண்டிய முடிந்த நிலை இங்குச் சொல்லப்பட்டிருக்கிறது. சமயங்கள் அனைத்தும் இக்கருத்தைத்தான் இயம்புகின்றன.

கடல் பரந்த நீர்ப்பரப்பாகவிருக்கிறது. கையில் கொண்டு செல்லும் பாத்திரத்தில் நிறைய நீரை எடுத்துவிட்டால் பாத்திரம் நிரம்பிவிட்டது என்று சொல்லுகிறோம். அப்பாத்திரத்தைப் பொறுத்தவரையில் அது பூரணநிலையாகிறது. மாணக்கன் ஒருபாடத்தில் நூறு மதிப்பெண்ணுக்கு நூறு மதிப்பெண் பெற்றுவிட்டால் அதைப் பூரணநிலை என்று சொல்லுகிறோம். ஒருவர் வாழ்வு முழுவதும் மணந்துகொள்ளாதிருப்பாரானால் அவர் பூரண பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கிறார் என்று சொல்லுகிறோம். ஒருவர் மாமிச உணவு உண்ணாதிருப்பாரானால் அவர் பூரணமாக அஹிம்சையைக் கடைப்பிடிக்கிறார் என்று சொல்லுகிறோம். லௌகீகத்தில் பூரணத்தை இங்ஙனம் நாம் பொருள்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் பாரமார்த்திகத் துறையில் பூரணம் என்ற சொல் பரத்தையே குறிக்கும். உலகவிஷயங்கள் அனைத்தும் பூரணநிலைஆகா.

நம் மனது கால தேச வர்த்தமானங்களில் கட்டுண்டதாக இருக்குமளவு நாம் பூரணத்தை அறிந்துகொள்ள முடியாது. பிரபஞ்சத்தில் கட்டுண்டிருக்கின்ற மனது பூரணத்தைக் கிரஹிக்க முடியாது. ஓர் அறையில் அடைபட்டிருக்கின்ற மனிதன் பரந்திருக்கின்ற வெட்ட வெளியைக் காணமுடியாதது போன்று கால தேச வர்த்தமானங்களில் கட்டுண்டிருக்கின்ற மனது அவற்றிற்கு அப்பாலிருக்கும் பரப்பிரம்மத்தைக் கிரஹிக்க முடியாது. சாந்தமும் நிறைநிலையும் பரிபூரணநிலையில் இருக்கின்றன என்று பூரணநிலையைப்பற்றி நாம் கருத்துக்கொண்டிருக்கின்றோம். மனிதன் தன்னைப் பிறரோடு சீர்தூக்கிப் பார்த்து மற்றவர்களை விட, தான் பரிபூரணநிலையில் இருப்பதாக எண்ணிக்கொள்கின்றான். ஓர் ஏக்கர் நிலத்தில் முப்பது மூட்டை நெல்லை ஒருவன் உற்பத்தி பண்ணுவதாக வைத்துக்கொள்வோம். மற்றொருவன் ஓர் ஏக்கர் நிலத்தில் நாற்பது மூட்டை உற்பத்தி பண்ணுவானானால் தான் பூரணநிலை அடைந்துவிட்டதாக எண்ணிக்கொள்கின்றான். மற்றொருவன் நாற்பத்தொரு மூட்டை உற்பத்திபண்ணிவிடுவானானால் நாற்பது மூட்டை உற்பத்தி பண்ணினவன் அதிருப்தி உடையவனாகின்றான். நடந்துசெல்லும் மனிதனைக் காட்டிலும் சைக்கிளில் செல்லும் மனிதன் பூரணநிலையில் இருப்பதாக எண்ணுகின்றான். ஆனால் சைக்கிளில் செல்லும் மனிதன் காரில் செல்லும் மனிதனைப் பார்த்து அதிருப்தி உடையவனாகின்றான். அங்ஙனமே காரில் செல்லும் மனிதன் ஆகாயவிமானத்தில் செல்லும் மனிதனைப் பார்த்து அதிருப்தி உடையவனாகின்றான். இங்ஙனம் உலக விஷயங்களில் பூரணநிலையை அடைந்துவிட்டதாக எண்ணிக்கொள்பவர்கள் அதிருப்தி உடையவர்களாகவே இருக்கின்றார்கள். செல்வமும், செல்வாக்கும், ஆரோக்கியமும், அந்தஸ்தும் உடையவராய் ஒருவர் இருக்கலாம். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் பெற்றிருப்பதற்கிடையில் மனத்திருப்தி உலகவாழ்க்கையில் உண்டாகமுடியாது.

உலக ஆசையைப் பூர்த்தி பண்ணமுடியாது. பூர்த்தி பண்ணிக்கொண்டதாக நினைக்கும் ஒவ்வொரு வேளையும் அது தாற்காலிகமான திருப்தி என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். உலகத்தில் நாம் அடையும் திருப்தியும் வெற்றியும் அளவுக்குட்பட்டவைகளேயாம். உலகத்தில் உண்டாகும் திருப்தியும் வெற்றியும் நிரந்தரமானவை அல்ல என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். உலகத்தில் பெறும் ஒவ்வொரு இன்பத்துக்கும் துன்பம் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உலகவெற்றி தோல்வியையும் அடக்கி இருக்கிறது. ஒருவ

ருக்கு வெற்றி என்றால் மற்றவருக்குத் தோல்வி என்பது பொருள். விளையாட்டுப்போட்டியில் ஒரு கட்சியினர் வெற்றி பெற்றால் மற்றொரு கட்சியினர் தோல்வி அடைவார்கள். தேர்வில் ஒரு கட்சிக்கு வெற்றி என்றால் மற்றகட்சிக்குத் தோல்வியாகும். எனவே உலகில் துன்பமில்லாத இன்பமோ, தோல்வி இல்லாத வெற்றியோ இல்லை. ஆகையால் இன்பமும் வெற்றியும் வேண்டுமென்றால் துன்பத்தையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கவேண்டும்.

பண்டைக்காலத் தத்துவ ஞானிகளில்கபிலர் ஒரு சிறந்த தத்துவ ஞானி ஆவார். துன்பத்தை ஒழிப்பதுதான் பூரணத்துக்கு விளக்கமாகும் என்று அவர் பகர்ந்திருக்கிறார். சத் சித் ஆனந்த நிலையே பூரணநிலை என்று வேதகால ரிஷிகள் பகர்ந்திருக்கிறார்கள். மனிதன் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் அவன் அறிந்தோ அறியாமலோ அகண்ட சத், சித், ஆனந்தத்தை அடைவதற்கே என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். கடவுள் தரிசனம் பெறுவது நம் வாழ்க்கையின் லட்சியம் என்பதை உணராதவர்களாக இருக்கின்றோம். அதனால் தான் உலக இன்பதுன்பங்களில் உழன்று கொண்டிருப்பதில் ஓயாது ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். பிரபஞ்சவாழ்வில் பெருநிலையை அடையலாம் என்று எண்ணி நம்சக்தியை விரயம் செய்து கொண்டிருக்கின்றோம். இன்பதுன்பங்களில் அடிபட்ட பிறகு நம்மிடம் விவேகம் உதயமாகிறது. அப்பொழுதுதான் உலகத்தில் எதுவுமே நிரந்தரமான திருப்தியை உண்டுபண்ணாது என்பதை உணர்கின்றோம். உண்மையான இன்பமோ பூரண நிலையோ பரம்பொருளினிடத்தில் தான் அமைந்திருக்கிறது என்பதை நாம் அறிகின்றோம். பூரண நிலையை அடைவதற்குப் பரநாட்டப் பற்றுடையவர்களாக நாம் மாறவேண்டும் என்ற உண்மை நமக்கு விளங்குகிறது.

பரிபூரணநிலை எங்கே இருக்கிறது? பரம்பொருள் எங்கே இருக்கிறார்? என்னும் கேள்விகள் எழுகின்றன. நாமரூபத்தோடு விளங்கும் இப்பிரபஞ்சத்துக்கு ஆதாரமாகப் பரம்பொருள் இருக்கிறார் என்று வேதாந்தம் பகர்கிறது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப் பொருள்களிலும் ஊடுருவி இருப்பவராகவும், அப்பொருள்களுக்கு அப்பாற்பட்டவராகவும் பரம்பொருள் இருக்கின்றார். உயிர்களிடத்தில் இருக்கும் பிரம்மத்தை ஆத்மன் என்று பகர்கிறோம். நாம் புரிந்துகொள்வதற்காக ஆத்மன் என்ற பதத்தைப் போடுகின்றோம். ஆத்மனுக்கும், பிரம்மத்துக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. ஆத்மனும் பிரம்மமும் ஒன்றேயாம். கடத்துக்குள் இருக்கும் ஆகாசத்தை நாம் விளங்கிக்கொள்வதற்காகக் கடஆகாசம் என்னும் பெயர் இட்டு அழைப்பதுபோன்று உயிர்களிடத்தில் உள்ள பிரம்மனை ஆத்மன் என்று அழைக்கின்றோம். ஆத்ம சாதனத்தின் மூலம் மனதைத் தூய்மைப்படுத்தும்பொழுது நாம் அதை உள்முகமாகத் திருப்புவது சாத்தியமாகிறது. மனம் உள்முகமாகத்திருப்பப்படுமானால் நம்முடைய உண்மை சொரூபம் ஆத்ம சொரூபம் என்பதை நாம் அறிகிறோம். ஆத்ம சொரூபத்தை மறைத்திருக்கின்ற திரைகளை விலக்குவதே பரிபூரண நிலையை அடைவதற்கு உபாயமாகும்.

இயேசுநாதர் உன் உள்ளே கடவுளைத் தேடு என்று போதித்திருக்கிறார். "நீ கடவுளுடைய ஆலயம். இறைவன் உன்னிடத்தில் வசிக்கின்றார். இதை நீ அறியாயா?" இது இயேசுவின் உபதேசமாகும். கடவுள் நம்மிடத்தில் யாண்டும் வசித்துக்கொண்டிருக்கிறார் என்ற உண்மையை நாம் அறிந்துகொள்வதற்கு நமக்குத் தடையாய் இருப்பது யாது? நம்மிடத்தில் உள்ள அறியாமையே அதற்குத் தடையாகும். சரீரத்தோடும், புலன்களோடும், மனதோடும், புத்தியோடும் நம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டிருப்பதே நம்மிடத்திலுள்ள அறியாமையாகும். இருளில் ஒளி பிரகாசிக்கிறது. ஆனால் இருள் அதை அறிந்துகொள்ள முடியாது. அங்ஙனம் ஆத்மா யாண்டும் பிரகாசம் உடையதாகவிருக்கிறது. நம்மிடத்திலுள்ள அறியாமை அதை அறிந்துகொள்ளாதிருக்கிறது. நம்மிடத்தில் அறியாமை இருப்பது வெளிப்படை. ஆத்மதரிசனத்தால்தான் அவ்வறியாமை அகற்றப்படும். நம்மிடத்திலுள்ள அறியாமையை உறக்கத்தோடு ஒப்பிட்டால் ஆத்மானுபூதியை விழிப்போடு ஒப்பிடலாம் என்று புத்தபகவான் பகர்கிறார்.

அறியாமையிலிருக்கின்ற நமக்கு ஆத்மானுபூதி அடைய முடியும் என்ற நம்பிக்கை உண்டாவதில்லை. பலர் ஆத்ம தரிசனம் பெற முடியும் என்பதை மறுக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு யுகத்திலும் தெய்வக்காட்சி பெற்றுத் தெய்வத்தோடு உரையாடி, தெய்வத்தோடு ஒன்றுபட்டிருந்த மகான்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இயேசு, புத்தர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற மகான்கள் கடவுள் காட்சி பெற்றதோடு மட்டுமன்றி எல்லாரும் கடவுள் காட்சி பெற முடியும் என்று உறுதியளித்திருக்கின்றார்கள். வேதகால ரிஷி ஒருவர் பகர்வதாவது: "அறியாமை என்னும் இருளுக்கு அப்பாலுள்ள தெய்விக ஒளியை நான் அறிந்திருக்கிறேன். நீங்களும் அவ்வொளியை அறிந்து கொள்ள முடியும். அழிந்து போகும் இந்நிலையைக் கடந்து அப்பால் செல்லுங்கள்." இயேசுநாதர் பகர்வதாவது: "உண்மைப் பொருளை நீங்கள் அறியுங்கள். அவ்வுண்மைப் பொருள் உங்களை விடுதலை செய்யும். ஞானப் பிறப்பு எடுக்கும் பொழுது உண்மையைப் பற்றிய அனுபவம் நமக்கு உண்டாகிறது."

மனிதனுக்கு விழிப்பு நிலை, கனவு நிலை, கனவற்ற உறக்க நிலை என்னும் மூன்று நிலைகள் இருக்கின்றன. இம்மூன்று நிலைகளிலும் அவன் கடவுள் தரிசனம் பெற முடியாது. இந்த மூன்று நிலைக்கு அப்பால் துரியநிலை என்னும் நான்காவது நிலை ஒன்று உண்டு. யோகிகளுக்குத்தான் அந்நிலை விளங்கும். கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்திருப்பது அந்நிலையாகும். இயேசுநாதர் கூறும் பரலோகம் என்பது அந்நிலையேயாகும். துரிய நிலையில் உண்டாகும் அனுபவம் எந்நிலையிலும் மாறுவதில்லை. புலன்களையும் மனதையும் கடந்த நிலையில் துரியநிலை உள்ளது. பேரறிவுக்கு அது முரணுவதில்லை. அது ஹிருதயத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. அந்நிலையில் மனிதன் அடியோடு மாறி அமைகின்றான். அந்நிலையில் மனிதனுக்கு ஞானப் பிறப்பு உண்டாகிறது. அதுவே அவனுடைய பூரண நிலையாகிறது. அந்நிலையில் இவ்வுலகைப் பற்றிய உணர்வும் உலகத்திலுள்ள உயிர்களைப் பற்றிய உணர்வும் துடைத்துத் தள்ளப்படுகின்றன. பிரம்மம் ஒன்றுதான் அப்பொழுது எஞ்சி இருக்கிறது. சாந்தமே அப்பொழுது குடிகொள்கிறது. ஹிந்துக்கள் இந்நிலையைச் சமாதி என்று கூறுகிறார்கள்; பௌத்தர்கள் இதை நிர்வாண நிலை என்று கூறுகிறார்கள்; கிறிஸ்தவர்கள் இந்நிலையைக் கடவுளோடு ஒன்றுபட்ட நிலை என்று கூறுகிறார்கள்.

"பரத்தை அடைவதற்காக ஆயிரத்தில் ஒருவர் முயல்கின்றார். முயல்கின்றவர்களுள் ஆயிரத்தில் ஒருவர் என்னை அடைகின்றார்." இங்ஙனம் பகவத்கீதையில் கண்ணன் பகர்ந்துள்ளார். ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஒழுங்காகச் சர்ச்சுக்குப் போய் வருகின்றார்கள். ஆயிரக் கணக்கான இந்துக்கள் வழிபாட்டுக்காகக் கோயிலுக்குச் செல்லுகின்றார்கள். ஆனால் அப்படிச் செல்லுகின்றவர்களுள் பூரண நிலையை அடைகிறவர்கள் யாரோ சிலர்தாம். பெரும்பாலான மக்கள் புண்ணியம் தேடுவதிலேயே திருப்தியுறுகின்றனர். நல்வாழ்வு வாழ்ந்து நற்செயல் புரிந்து அதன் விளைவாக மறு பிறப்பில் நல்ல நிலையில் இருக்கவேண்டுமென்று எண்ணி வாழ்ந்து வருகின்றனர். ஏசுநாதர் கூறிய பூரணநிலையை மறந்து விட்டார்கள், அல்லது தவறாகப் பொருள்படுத்திக்கொண்டார்கள். ஏசு புகட்டிய மலை உபதேசத்தை அநேகம்பேர் படிக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அவ்வுபதேசத்தின்படி நடப்பவர்கள் மிகச் சிலரே. கடவுள் காட்சி பெறுவது சாத்தியமா என்று பலபேர் வாதம் செய்கின்றனர். பரிபூரண நிலையை அடைய முடியுமா என்பதையும் வாதம் செய்கின்றனர். கடவுளைக் காண்பது அல்லது உண்மையை அறிவது என்று ஏசுநாதர் புகட்டியதின் பொருள்தான் என்ன? ஏசுநாதர் தம் சிஷ்யர்களுக்கு இதே பிறவியில் கடவுளைக் காணலாம் என்று கூறி இருக்கிறார். ஏசுநாதரின் சிஷ்யர்கள் உண்மையை அறிவதிலும் கடவுள் காட்சி பெறுவதிலும் தீவிர நாட்டம் கொண்டிருந்தனர். பரலோகத்தில் இருக்கும் பரமன் போன்று தாங்களும் பூரண நிலையில் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அருள்தாகம்கொண்டு உண்மையை அறிவதில் பெரு விருப்பம் கொண்டிருப்பவர்கள் கொள்கைகளிலும், கோட்பாடுகளிலும் எங்ஙனம் திருப்தி அடைவார்கள்? ஸ்ரீ ராமகிருஷ்ணர்

பக்தர்களுக்குப் பகர்ந்துள்ளதாவது: ''நீங்கள் மாந்தோப்புக்கு வந்திருக்கின்றீர்கள். மாந்தோப்புக்கு வந்திருக்கின்ற நீங்கள் மரத்தில் உள்ள இலைகளை எண்ணிக்கொண்டிருப்பதில் என்ன லாபம் அடையப் போகின்றீர்கள்? மாம்பழங்களைப் புசித்துப் பசியை ஆற்றிக்கொள்ளுங்கள்.'' ஏசுநாதரும் தம் சிஷ்யர்களுக்கு இவ்வுலகத்தில் வாழ்ந்திருக்கும் பொழுதே கடவுட்காட்சி பெறுவதற்குரிய வழியைப் போதித்திருக்கிறார். பரிபூரண நிலை என்பது மரணத்துக்குப் பின்தான் என்று அவர் சொல்லவில்லை. இந்த வாழ்க்கையிலேயே பரிபூரண நிலையை அடைந்துவிடலாம் என்றுதான் அவர் பகர்ந்துள்ளார்.

உலகில் மதாச்சாரியர்களாக விளங்கியவர்கள் ''இப்பிறவியிலேயே, இவ்வுலகிலேயே கடவுள் தரிசனம் பெறலாம்'' என்று பகர்ந்திருக்கிறார்கள். கடவுள் தரிசனத்துக்கு மனிதனிடத்திலுள்ள சோம்பலும் ஊக்கமின்மையும் தடைகளாக இருக்கின்றன. ஞானம் பெறுவதற்குக் காலத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டே போவது பாபம் ஆகும் என்று புத்தர் பகர்ந்துள்ளார். கிறிஸ்துநாதரும் பரலோக ராஜ்யத்தைப் பெறுவதற்குச் சோம்பேறிகளுக்குச் சாத்தியமில்லை என்று பகர்ந்துள்ளார். பரிபூரண நிலையை அடைவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. பரிபூரண நிலையை அடைந்தவர்களுடைய ஒவ்வொரு செயலும் ஞானத்துக்கு விளக்கமாக இருக்கின்றது. எல்லா வழிகளும் மனிதன் இயல்பைத் தூய்மைப்படுத்திப் பரத்தின்பால் திருப்புவதற்கு முயல்கின்றன. மக்களுள் சிலர் சிந்தனையாளர்களாகவும், இன்னும் சிலர் உணர்ச்சி படைத்தவர்களாகவும், இன்னும் சிலர் செயல் திறன் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவரவர்கள் இயல்புகளைச் சாதனை முறையில் விளக்கிக் காட்டுகிறார்கள். வேதாந்தத்தில் நான்கு முக்கிய வழிமுறைகள் பரத்தோடு ஒன்றுபடுவதற்குச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த நான்கு வழிகளும் யோகங்கள் என்று சொல்லப்படுகின்றன. இயேசுநாதர் பகர்ந்துள்ள பரலோகத்திலிருக்கும் பரமபிதாவைப் போன்று நீங்களும் பரிபூரணர்களாக இருங்கள் என்னும் உபதேசத்தை விளக்குவதற்கு நான்கு யோகங்களும் உதவுகின்றன.

கர்மயோகத்தில் பயன் கருதாது செயல் புரிய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு செயலையும் கடவுளுக்கு நிவேதனமாகப் படைக்கவேண்டும் என்று கர்மயோகம் புகட்டுகின்றது. கர்ம பலனைக் கடவுளுக்கு அர்ப்பிப்பதன் வாயிலாக ஆத்ம சாதகன் மனத்தூய்மை பெற்றுப் பரத்தோடு ஐக்கியமாகின்றான்.

நித்தியம் எது? அநித்தியம் எது? என்று விசாரித்துப் பார்ப்பது ஞானயோகமாகும். அநித்தியம் எது என்பதை அறிந்து அதை ஒதுக்கிவிட்டு அநித்தியத்திலிருந்து சாதகன் பரமனைப் பிரித்து எடுக்கின்றான். நித்தியத்தைத் தியானம் பண்ணுவதன் வாயிலாகக் கடவுளுடைய நிராகார சொரூபத்தில் சாதகன் லயமாகின்றான்.

பக்தி மார்க்கத்தில் செல்லும் சாதகன் தன் இஷ்ட தெய்வத்தினிடத்து ஆழ்ந்த அன்பைச் செலுத்தி ஆணவ அகங்காரங்களை அழித்துத் தள்ளுகின்றான். வழிபடும் தெய்வத்தினிடத்துத் தன்னை முழுவதும் ஒப்படைத்துவிடுவது பக்தனுடைய பாங்காகும். பெரும்பாலான மக்கள் பக்தியோகத்தைப் பின்பற்றுகிறார்கள்.

ராஜயோகி பரத்தோடு லயமாவதற்குத் தியான முறையைப் பின்பற்றுகின்றான். பரமனிடம் மனதை ஒருமுகப்படுத்திப் பரமனோடு லயமாவது ராஜயோகியின் சாதனையாகும். தனித்திருந்து யோகம் பயில்கின்றவர்கள் இம்மார்க்கத்தைப் பின்பற்றுகின்றார்கள். நான்கு யோகங்களும் சேர்ந்து அமைவதுதான் சிறந்தது. சாதகனுடைய இயல்புக்கு ஏற்ப எந்த யோகம் முன்னணியில் இருக்கிறதோ அது அவன் பின்பற்றுகின்ற யோகம் என்று சொல்லுகின்றோம்.

ஓர் இடத்தில் இயேசுநாதர் பகர்ந்திருப்பதாவது: ''நீங்கள் என்னுடைய சகோதரர்களுக்குச் செய்கின்ற சிறு உதவியும் எனக்குச் செய்கின்ற உதவியாகும்.'' இயேசுநாதர் இவ்வுபதேசத்தின் மூலம் கர்மயோகத்தைப் புகட்டுகின்றார். மக்களுக்குப் பணிவிடை பண்ணுவதன் மூலம் தெய்வத்தை வழிபடலாம் என்பது தான் கர்மயோகம் புகட்டுவதாகும்.

நித்தியத்தையும் அநித்தியத்தையும் பாகுபடுத்தி அநித்தியத்தை ஒதுக்கித் தள்ளும்படி ஞானயோகம் புகட்டுகிறது. இயேசுநாதர் விவேகத்தைப்பற்றியும் தியாகத்தைப்பற்றியும் அடிக்கடி போதனை செய்திருக்கிறார். "பரமபதத்திலிருக்கும் பிதாவிடத்து உன்னுடைய பொக்கிஷத்தை ஒப்படை. அங்குச் செல்லரித்தோ, துரு ஏறியோ பொருள் கெட்டுப்போய் விடாது. ஆங்குத் திருடர்கள் நுழையமாட்டார்கள். அப்பொருளை யாரும் திருடமாட்டார்கள். பணத்துக்கும் தெய்வத்துக்கும் நீங்கள் பணிவிடை பண்ண முடியாது." இயேசுநாதர் உபதேச மொழிகளில் இது ஒன்றாகும். இங்கு இயேசுநாதர் ஞான மார்க்கத்தைப் புகட்டுகின்றார்.

ராஜயோகத்தில், யமத்தில் ஐந்தும், நியமத்தில் ஐந்தும் ஆக, பத்து ஒழுக்க விதிகள் ஆரம்பப் படிகளாகவிருக்கின்றன. கட்டடத்துக்கு அஸ்திவாரம் இருப்பதுபோன்று ராஜயோகத்துக்கு அப்பத்தும் அஸ்திவாரமாக அமைந்திருக்கின்றன. அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரம்மச்சரியம், அபரிக்கிரகம் என்ற ஐந்தும் யமப்பகுதியில் அடங்குகின்றன. சௌசம், சந்தோஷம், ஸ்வாத்யாயம், தவம், ஆத்மசமர்ப்பணம் என்ற ஐந்தும் நியமப்பகுதியில் அடங்குகின்றன. இப்பத்தையும் கடைப்பிடிப்பவர்கள் ஒழுக்கத்தில் உறுதி பெற்றவர்களாகிறார்கள். ஒழுக்கம் உறுதியாகும்பொழுது மனம் பிரம்மத்தினிடத்து ஒருமுகப்படுகிறது. மன ஒருமுகப்பாடு தியானமாக மாறி, தியானம் சமாதியாக மாறுகிறது. சமாதியில் சாதகன் பரத்தோடு லயமாகின்றான். இயேசுநாதர் இவ்வொழுக்க விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று உபதேசித்திருக்கிறார். அவர் தாமே தியானத்திலும் சமாதியிலும் நீண்ட நேரம் மூழ்கியிருப்பதற்காக அடிக்கடி தனிமையை நாடிப் போய்விடுவார்.

கடவுளோடு ஐக்கியமாவதற்கு உரிய எல்லா மார்க்கங்களிலும் பக்தியோகத்தை இயேசுநாதர் மிகவும் வலியுறுத்திக் கூறி இருக்கிறார். "பரமனை முழுமனதோடும், இதயபூர்வமாகவும், முழுமுயற்சியுடனும் நேசியுங்கள்." இங்ஙனம் இயேசுநாதர் பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். அவர் தம்மைக் கடவுளின் பக்தனைப் பாவித்து உபதேசங்கள் செய்திருக்கின்றார். தம்மைக் கடவுளாகக் கூறாமல் கடவுளின் பக்தனை வைத்துக்கொண்டு பரலோகத்திலிருக்கும் பரமபிதாவை வழிபடுங்கள் என்று போதித்திருக்கிறார். "என்னை ஒருவன் நேசித்தால் பரலோகத்திலிருக்கும் என் தந்தை அவனை நேசிப்பார். அத்தகையவனிடம் தந்தையும் நானும் சென்று குடியிருப்போம்." இது இயேசுநாதருடைய உபதேசமாகும். மற்றும் ஓர் இடத்தில் "தந்தையும், நானும் ஒருவரே. ஆகவே என்னிடத்தில் உங்களையும், உங்களிடத்திலுள்ள அனைத்தையும் ஒப்படைத்துவிடுங்கள். நான் உங்களுக்கு ஓய்வு தருகின்றேன்" என்று பகர்ந்திருக்கிறார். இது பக்தியின் முடிந்தநிலையாகிய சரணாகதி தத்துவத்தைப் போதிக்கிறது.

சமயாச்சாரியர்கள் பக்திமார்க்கத்தை வற்புறுத்திக் கூறி இருக்கிறார்கள். கடவுள் தரிசனம் பெறுவதற்குப் பக்தி மார்க்கம் சுலபமாக விருப்பதால் அதை வலியுறுத்தி இருக்கின்றனர். பக்தி மார்க்கத்தில் தியாக புத்தி இயல்பாகவே வந்துவிடுகிறது. தன்னிடத்திலுள்ள எந்த உணர்ச்சியையும் பக்தன் அடக்கி வைப்பதில்லை. உணர்ச்சியை அடக்கி வைப்பதற்குப் பதிலாக உணர்ச்சியை வலுப்படுத்தி அதைத் தெய்வத்தின்பால் பக்தன் திருப்புகின்றான்.

மனிதனுடைய உள்ளத்தில் அன்பைச் செலுத்தவும், அன்பைப் பெறவும் வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. தாய்தந்தையர்களிடத்தில் செலுத்துகின்ற அன்பும், நண்பனிடத்துச் செலுத்துகின்ற அன்பும், மனைவியினிடத்துச் செலுத்துகின்ற அன்பும் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இருக்கின்றன. தெய்வீக அன்பே இத்தனை வடிவங்களில் நம் உள்ளத்திலிருந்து வேலை செய்கிறது. மக்களிடத்துச் செலுத்துகின்ற அன்பு பூரணப் பொருளினிடத்துச்செலுத்துகின்ற அன்பு ஆகாது. பரத்தினிடத்துச் செலுத்துகின்ற அன்புதான் பூரண அன்பு ஆகும். ப்ருஹதாரண்யக உபநிஷதம் போதிப்பதாவது: "கணவன் நேசிக்கப்படுவது கணவனின் வடிவத்தை முன்னிட்டு அன்று; கணவனின் வடிவத்தில் இலங்கும் ஆத்மாவே நேசிக்கப்படுகிறது. மனைவி நேசிக்

கப்படுவது மனைவியின் வடிவத்தை முன்னிட்டு அன்று; மனைவியின் வடிவத்தில் இலங்கும் ஆத்மாவே நேசிக்கப்படுகிறது. புத்திரர்கள் நேசிக்கப்படுவது புத்திரர்களின் வடிவங்களை முன்னிட்டு அன்று; புத்திரர்களின் வடிவங்களில் இலங்கும் ஆத்மாவே நேசிக்கப்படுகிறது. ஒரு பொருள் நேசிக்கப்ப்டுவது அப்பொருளின் வடிவத்தை முன்னிட்டு அன்று; அப்பொருளின் வடிவத்தில் இலங்கும் ஆத்மாவே நேசிக்கப்படுகிறது.

உபநிஷதம் போதிப்பது போன்று நம் உள்ளத்தைக் கடவுள்தாம் கவர்கின்றார். ஆகையால்தான் 'என் உள்ளம் கவர் கள்வன்' என்று ஞானசம்பந்தர் பாடி இருக்கிறார். ஆனால் நாம் அக்கவர்ச்சியை உலகப்பொருளின் கவர்ச்சியாகப் பாவிக்கின்றோம். நாம் கடவுளிடத்துப் பக்தியைச் செலுத்தும்பொழுது நம் உள்ளத்தைக் கடவுள் கவர்வதை உணர்கின்றோம். உயிர்களிடத்து அன்பு செலுத்துவதில் தவறில்லை. முதலில் உயிர்களிடத்து அன்பு செலுத்திப் பழகவேண்டும். அந்த அன்பானது நம் உள்ளத்தை இளகச் செய்து சுயநலமற்றதாக்குகிறது. மக்களோடு வைக்கின்ற இணக்கத்தையும் நாம் பலவந்தமாகத் துறக்கக் கூடாது. மக்களோடு வைக்கின்ற இணக்கம் தெய்வீக இணக்கமாக மாற்றப்படவேண்டும். மக்களிடம் செலுத்தும் அன்பு பிரதிபலனை எதிர்பாராததாக இருக்கவேண்டும். அத்தகைய சுயநலமற்ற அன்பு தெய்வபக்தியை வளர்ப்பதற்குத் துணைபுரிகிறது.

கடவுளோடு ஒன்றுபட விரும்புகின்றவர் உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் ஒரு பரம்பொருளையே போற்றுகின்றன என்று அறிந்து கொள்ளவேண்டும். "பரம்பொருளாகிய நீ ஒருவனே. பலபெயர்களில் உன்னை அழைக்கின்றோம்; எல்லாப் பெயர்களிலும் நீயே விளங்கிக் கொண்டிருக்கிறாய்; அவரவர் வழிபடுகின்ற வடிவத்தில் நீ அவர்களுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கின்றாய்" என்று ஹிந்து மதம் இறைவனைத் துதிசெய்கிறது. இறைவன் கணக்கற்ற வடிவங்களில் தம்மை விளக்கிக் கொண்டிருக்கின்றார். கடவுள் உருவம், அருவம் ஆகிய எல்லா நிலைகளிலும் தம் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

ஆகையால் சாதகன் எந்த மார்க்க[ம்] குறைகூற வேண்டியதில்லை. நதிகளெல்லாம் சமுத்திரத்தை நோக்கிப் போய்க் கொண்டி[ரு]ப்பதைப்போன்று மதங்கள் கூறும் மார்க்கங்க[ள்] எல்லாம் பரம்பொருளை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. எல்லா மார்க்கங்களும் ஒரே கடவுளைத்தான் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன என்றாலும் சாதகன் ஏதேனும் ஒருமார்க்கத்தை ஆழ்ந்து பின்பற்ற வேண்டும். இன்றைக்கு ஒரு மார்க்கத்தையும், நாளைக்கு ஒரு மார்க்கத்தையும் பின்பற்றும் ஸ்திரமில்லாத சாதனை பயன்படாது. செடியாக இருக்கும் பொழுது பாதுகாப்புத் தேவைப்படுகிறது. செடி மரமாகி விட்டால் பாதுகாப்புத் தேவை இல்லை. அங்ஙனம் ஆரம்ப சாதகர்களுக்குப் பொருந்திய சூழ்நிலை என்னும் பாதுகாப்புத் தேவைப்படுகிறது. சாதனத்தில் உறுதிபெற்றான பிறகு மனம் கடவுளிடம் லயமாகிறது. சாதனத்தில் உறுதி பெறுவதற்கு ஒரு தெய்வத்தினிடத்துப் பக்தி பண்ணுவது அவசியமாகிறது. இஷ்ட தெய்வத்தினிடத்து ஆழ்ந்த பக்தி உண்டாகும் பொழுது உள்ளத்தில் ஒளி உண்டாகிறது. மனத்தெளிவு ஏற்படும் பொழுது பக்தன் தான் வழிபடும் தெய்வத்தைப் பல்வேறு வடிவங்களில், பல்வேறு பெயர்கள் வைத்து மற்றவர்கள் வழிபடுகிறார்கள் என்பதை அறிகின்றான். கடவுளுடைய எல்லா வடிவங்களிலும் அவன் அப்பொழுது பக்தி உடையவனாகின்றான்.

பக்தியோகத்தைப் பின்பற்றுகின்றவர்கள், அவதார புருஷர் ஒருவரைத் தங்களுடைய லட்சிய புருஷராக ஏற்றுக்கொள்கிறார்கள். அவரைத் தங்கள் உள்ளத்தில் ஒளிரும் ஆத்ம சொரூபமாகக் கருதிப் போற்றுகின்றார்கள். "நிறை மனிதர்கள் ஒவ்வொரு தேசத்திலும் தெய்வங்களாக வைத்து வழிபடப்படுகின்றார்கள். கடவுளுடைய பூரண அவதாரமாக அந்த நிறை மனிதர்கள் இருக்கிறார்கள். இயேசு, புத்தர் போன்றவர்கள் வழிபாட்டுக்குரிய மூர்த்திகளாக அமைந்திருக்கிறார்கள்." இங்ஙனம் விவேகானந்த சுவாமிகள் பகர்ந்துள்ளார். நீங்களும் நானும் கீழ்நிலையிலுள்ள உயிர்களும் இறைவனுடைய தோற்றங்கள் என்பது உண்மை. ஒளியின் அலை எங்கும் இருக்கிறது.

அங்ஙனம் இறைவனுடைய சான்னித்தியம் பிரபஞ்சம் எங்கும் உள்ளது. ஆனால் அவதார புருஷர்கள் மூலமாகவே இறைவனுடைய சான்னித்தியத்தை அறிய முடிகிறது. "இறைவன் மஹிமையை வெளிப்படுத்துகின்ற அவதார புருஷர்களை வழிபடுவதன் மூலம் அவர்கள் மயமாக நாம் ஆகின்றோம்" என்று சாஸ்திரங்கள் போதிக்கின்றன.

அவதார புருஷர்களை வழிபடுவதன் மூலம் பூரண நிலையை அடைவதற்கு நமக்குச் சாத்தியமாகிறது. அவதார புருஷர்கள் தாங்கள் யார் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். இயேசுநாதர் பகர்ந்திருப்பதாவது: "நான் இந்த உலகுக்கு ஒளியாக இருக்கின்றேன்; என்னைப் பின்பற்றுகின்றவனுக்கு இருள் இல்லை. அவனும் ஞானஒளி பெறுவான்." கண்ணன் பகர்ந்திருப்பதாவது: "எல்லாத் தர்மங்களையும் என்னிடத்தில் ஒப்படைத்து விட்டு என்னை நீ சரண் புகுந்துவிடு; அச்சத்தை அகற்று; நான் உன்னைப் பாபத்திலிருந்தும் பந்தத்திலிருந்தும் விடுவிப்பேன்." ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்திருப்பதாவது: "நான் என் உள்ளத்தை இறைவனுடைய திருக்கோயிலாகச் செய்துவைத்திருக்கின்றேன்; உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்து விடுவீர்களானால் உங்களைக் கர்மத்தளைகளினின்றும் விடுவிப்பேன்."

நாம் மஹான்களிடம் அடைக்கலம் புகுவது தெய்வத்திடம் அடைக்கலம் புகுவதற்கு நிகராகும். தெய்வத்தின் அருள்காற்று யாண்டும் வீசிக்கொண்டிருக்கிறது. அவருடைய அருளைப் பெறுவதற்கு நம் ஹிருதயம் தூய்மையாகவேண்டும். ஹிருதயத்தைத் தூய்மைப் படுத்துவதற்குச் சாதனைகள் செய்யவேண்டும். அலைகின்ற மனதையும் அடங்காத பொறிகளையும் முதலில் கட்டி ஆள நாம் முயலவேண்டும். ஐம்பொறிகள்மூலம் தெய்வீக விஷயங்கள் உள்ளத்துக்குப் போகவேண்டும். எல்லாப்பொருள்களிடத்தும் தெய்வீக இணக்கம் வைத்துப் பழகுதல் முதல் சாதனையாகிறது. அஹிம்சை, அன்பு, தூய்மை முதலிய பண்புகளை நமக்கு உரியதாக்கவேண்டும். பிரார்த்தனைக்கும், வழிபாட்டுக்கும் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைக்கவேண்டும். இஷ்ட தெய்வத்தின் முன் அமர்ந்து மனதை இஷ்ட தெய்வத்தின்பால் திருப்பி இடைவிடாது இஷ்டதெய்வ மஹிமைகளைச் சிந்திக்கவேண்டும். ஒரு பாத்திரத்திலுள்ள எண்ணெயை மற்றொரு பாத்திரத்தில் கொட்டும்பொழுது அவ் எண்ணெய் இடைவிடாது ஒழுகிக்கொண்டிருப்பதுபோன்று மனம் இடைவிடாது இஷ்ட தெய்வத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்க வேண்டும். இங்ஙனம் சாதனையில் ஈடுபடும்பொழுது சாதகனுடைய உள்ளத்தில் கடவுள் நினைவு வந்துகொண்டே இருக்கிறது. கடவுள் நினைவு நம் உணர்வுப் பகுதியில் இடைவிடாது இருந்துகொண்டே இருக்கவேண்டும். அப்பொழுது மற்ற ஆசைகள் நம் உள்ளத்தை விட்டு அகன்றுவிடுகின்றன. மேலும் அவருடைய இச்சைக்கு நம்மை ஒப்படைக்க வேண்டுமென்ற ஆசை மட்டும் நம் உள்ளத்தில் இடம்பெறவேண்டும். கடவுள் சிந்தனையில் மூழ்குகின்றவளவு உள்ளத்தில் சுயநலமற்ற தூய பக்தி உருவெடுக்கிறது. அத்தூய பக்தி பிரேமை பக்தியாக வடிவெடுக்கும்பொழுது நாம் தெய்வத்திடம் லயமாகிவிடுகின்றோம். அப்பொழுது அன்பும், அன்பு செலுத்துகின்ற பொருளும், அன்புக்குரிய பொருளும் ஒன்றாகி விடுகின்றன. நாரதர் பக்தி சூத்திரத்தில் இத்தகைய பிரேமை பக்தியின் விளைவுகள் விளக்கப்பட்டிருக்கின்றன. "பிரேமை பக்தி பெறுபவன் பூரணமனிதனாகின்றான்; அவன் நிறைநிலையை அடைகிறான். அவன் நிராசையில் நிலைபெறுகிறான்; அவன் துன்பப்படுவதில்லை. அவன் யாரையும் வெறுப்பதில்லை. அவன் போகத்தில் நாட்டம் கொள்வதில்லை. ஆத்ம தியானத்தில் அவன் ஆனந்தமுற்றிருக்கின்றான்." இங்ஙனம் நாரதர் பக்தி சூத்திரம் பிரேமை பக்தியின் விளைவுகளை விளக்குகிறது. இத்தகைய உணர்வு ஓங்கப்பெற்றவன் பரலோகத்திலிருக்கும் பரமபிதா போன்று பரிபூரண நிலையை அடைகிறான். தெய்வ சிந்தனை மனதில் எழுகின்றவளவு தெய்வத்தின் பூரண நிலை மனதுக்கு உரியதாகிறது. தெய்வத்தை நினைத்துத் தெய்வமயமாவது நம்முடைய குறிக்கோள் என்பதை நாம் உணரவேண்டும். இயேசுநாதருடைய இவ்வுபதேசம் இக்கருத்தை விளக்குகிறது.

கல்வியும் சேவையும்

(103ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலக் கல்விமுறை சுயநலத்தை வளர்ப்பதாக அமைந்திருக்கிறது. தாங்கள் கற்கும் கல்வியின் மூலம் வயிறு வளர்ப்பதற்கான உத்தியோகம் தேடுகிறார்கள். தாங்கள் பெற்ற அறிவையும் பண்பையும்கொண்டு பொது மக்களுக்கு என்னசெய்யலாம் என்பதைப் பற்றிய சிந்தனை கற்கின்றவர்களிடத்து இல்லை. தாங்கள் பெறும் கல்வியைப் பொதுமக்கள் வாழ்க்கைக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்ற சிந்தனை மாணாக்கர்களிடையே எழ வேண்டும். கல்வி கற்பவர்களிடத்தில் பொது நலனைப்பற்றிய சிந்தனை உருவாகிவிடுமானால் நாடு விரைவில் உன்னத நிலையை அடைந்து விடும். அறிவைத் தீட்டுவதற்கு நூல்களைப் பயன்படுத்துவதுபோன்று இதயத்தைப் பண்படுத்துவதற்குப் பொது மக்களோடு தொடர்பு கொண்டு பொதுநலப்பணி செய்து பழக வேண்டும்.

உள்ளத்தைத் திருத்தி அமைப்பதற்கு உள்ளத்தில் பக்தி வளரவேண்டும். இசையோடு கூடிய பஜனை பண்ணுவது இதயத்தைக் கனியச் செய்கிறது. இசைக்கு எல்லா உயிர்களும் வசப்படுகின்றன. நல்லுணர்வை வளர்ப்பதற்கு இசைஞானத்தைப் பயன்படுத்த வேண்டும். மாணாக்கர்கள் நன்கு பஜனை செய்து பழகவேண்டும். பொதுமக்களிடையே பஜனையைப் பரப்புவதும், பக்தியைப் பரப்புவதும், உடல் உழைப்பின்மூலம் பொதுப் பணி செய்வதும் மாணாக்கர்கள் பொதுமக்களுக்குச் செய்கின்ற தொண்டுகள் ஆகின்றன. மாணாக்கர்கள் தங்கள் மனப்பான்மையைப் பரநல மனப்பான்மையாகத் திருத்தி அமைக்கும்பொழுது ஆக்கத்துறையில் அன்பையும், அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்துபவர்கள் ஆவார்கள்.

கல்வி பொதுமக்களிடையே பரவவேண்டும் என்பதற்கு அரசாங்கம் சில முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் அச்செயல் பாராட்டுதற்குரியது. ஆனால் எத்தகைய கல்வி பரவவேண்டும் என்பதில் அரசாங்கத்தார் கருத்துச்செலுத்தாது இருக்கிறார்கள். வெறும்ஏட்டுக்கல்வி மட்டும் கொடுத்தால் போதாது.ஏட்டுக்கல்வியோடு இதயத்தை மலரச்செய்கின்ற கல்வியையும் தரவேண்டும். தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. சமுதாயத்திற்குப் பயன்தரும் எத்தொழிலையும் ஈசுவர ஆராதனையாகச் செய்ய வேண்டும். பொதுவாக உடல்உழைப்பை மக்கள் இன்று புறக்கணித்து வருகின்றனர். உடல் உழைப்புச் செய்வதை இழிவு என்று கருதுகின்றனர். உடல் உழைப்புக்கு மதிப்புக் கொடுப்பது கற்றவர்களுடைய பொறுப்பாகிறது. படித்தவர்கள் உடல் உழைப்பை ஊக்கத்துடன் செய்து, அதற்கு மதிப்புத் தரவேண்டும். அப்படி அவர்கள் உடல் உழைப்புச் செய்வார்களானால் உடல் உழைப்புப் பெருமைக்குரியதென்று மற்றவர்கள் நினைப்பார்கள்.சூரிய ஒளி உடலில்படும்படியாக உடல் உழைப்புச் செய்யும்பொழுது உடலுக்கு நோய் வராது ஒழிகின்றது. உடல் உழைப்புச் செய்கிறவர்களுக்குப் பெரும்பாலும் நோய் வருவதில்லை. ஆனால் அவர்கள் தாங்கள் வாழும் இடத்தையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளாததால் நோய்களுக்கு அவர்களும் இடம் தருகின்றார்கள். சுற்றுப் புறத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளக் கற்றவர்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உடல் உழைப்பைப்புறக்கணித்து நோயை உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். பாமரர்களுக்குச் சுத்தமாக இருக்கத் தெரிவதில்லை. படித்தவர்களுக்கு உழைக்கத் தெரிவதில்லை. சுத்தமாக இருக்கவும், உழைக்கவும் தெரிந்து கொண்டால் நோய் வராமல் தடுக்கலாம். பாமரர்களுக்குச் சுத்தமாகஇருப்பதற்குக் கற்றவர்கள் கற்றுக் கொடுக்கவேண்டும். உடல் உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து உடல் உழைப்புச் செய்வதற்குப் பாமரர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும். கற்றவர்கள் இன்றைக்கு நாட்டுக்கு இத்தகையபணி செய்தாகவேண்டும்.

அறிவைக்காட்டிலும் உணர்வு அதிகசக்தி வாய்ந்தது. உணர்ச்சி ஓங்கும்பொழுது அறிவைக்கொண்டு அதைக் கட்டுப்படுத்த முடிவ

தில்லே. உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மனிதனிடத்து நல்லியல்பு ஓங்க வேண்டும். நல்லியல்பை வளர்ப்பதற்கு நற்பண்புகள் வளர வேண்டும். நற்பண்புகளை நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டுதான் வளர்க்கமுடியும். நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றவர்கள் தாங்கள் மேற்கொள்வதுடன் மக்களுக்கும் அவற்றைக் கற்றுத்தரவேண்டும். கற்றவர்கள் சமுதாயத்துக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் ஏராளமாக இருக்கப் படித்துவிட்டு வேலை இல்லையே என்று சொல்வதுதான் விபரீதமாக இருக்கிறது. இன்றைக்குச் சமுதாயத்தில் பண்பாடு பின்னணியில் இருக்கிறது. சமுதாயத்தில் பண்பாட்டை வளர்ப்பதற்குக் கற்றவர்கள் முற்படவேண்டும்.

இன்றைக்குச் சமுதாயத்தில் மக்களிடையே சுயநலம் புகுந்திருக்கிறது. சுயநலம் ஒழிந்தாக வேண்டும். மக்களுடைய நாடி நரம்புகளிலெல்லாம் சுயநலம் ஊடுருவி இருக்கிறது. சுயநலம் ஒழிந்தால்தான் நாடு முன்னேறமுடியும். சுயநலமற்று மக்களுக்குச் செய்யும் பணிவிடை மக்களுடைய உள்ளத்தில் அன்பை வளர்க்கிறது. சுயநலமற்று நாம் மக்களுக்குப் பணிவிடை செய்தால் மக்கள் நம்மிடம் அன்பைக் காட்டுகிறார்கள். மக்களுக்கு நாம் செய்யும் பணிவிடை மக்களின்பால் அன்பை வளர்க்கிறது. பரஸ்பரம் அன்பை ஒருவருக்கொருவர் வழங்குவதன் மூலம் நல்ல இதயம் மலர்கிறது.

பௌதிக விஞ்ஞானத்தின் மூலம் இயற்கையின் போக்கை நாம் ஆராய்ந்து இயற்கையில் உள்ள சக்தியை வாழ்க்கைக்கு நாம் பயன்படுத்த முடிகிறது. இயற்கைச் சக்தியைப் பொதுமக்கள் நலனுக்குப் பயன்படுத்துகின்ற வளவு நாட்டின் வளம் ஓங்குகின்றது. ஒற்றுமையோடு உழைத்து விஞ்ஞான அறிவைப் பயன்படுத்திச் சுயநலமற்றுப் பணி செய்தால் நாம் முன்னேற்றமடையலாம்; நாடும் முன்னேற்றமடையும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தை முற்றிலும் நம்பியிருக்கவேண்டியதில்லை. நாட்டு மக்களை நம்பி நாம் நற்செயலில் ஈடுபடலாம். அன்பின் அடிப்படையில் செய்யும் செயல்கள் தாம் உண்மையான செயல்களாகும். அரசாங்கம் ஏதாவது நாட்டுக்கு நலம் செய்தால் அதில் அரசியல் நோக்கும் கலந்தே இருக்கும். அரசியல் நோக்கத்தோடு இன்றைக்கு ஒவ்வொரு செயலும் நிகழ்ந்து வருகிறது. தேர்தலில் அதிக ஓட்டு எண்ணிக்கையைப் பெறவேண்டும் என்பதுதான் அரசியல் நோக்கமாகும். அதிக ஓட்டுப்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் அரசாங்கம் செய்கின்ற செயல் அமைகிறது. மக்களைத் தெய்வமாகக் கருதி அவர்களுக்குச் சேவை செய்வது அன்பின் அடிப்படையில் அமைவதாகும். அன்பின் அடிப்படையில் நிகழ்கின்ற செயல்கள் இதயத்தை மலரச் செய்கின்றன. மாணவர்கள் தங்கள் அறிவையும், அன்பையும், ஆற்றலையும் முறையாக வளர்த்து மக்கள் முன்னேற்றத்துக்கு அவற்றைப் பயன்படுத்துவார்களேயானால் எதிர்காலச்சமுதாயம் எல்லா மேன்மைகளும் பொருந்தியதாக அமையும். சுதந்திர நாட்டில் எல்லாரும் நாட்டு மன்னர்களாகின்றார்கள். எனவே, எல்லாருடைய உள்ளங்களிலும் பொறுப்புணர்ச்சியும், நாட்டுணர்ச்சியும் ஏற்படவேண்டும். நாட்டுப் பணியே நம் பணி என்று எண்ணி ஒவ்வொருவரும் நாட்டின் நலத்திற்காகத் திறமையுடன் பாடுபடவேண்டும். நாடு நமக்காக என்ன செய்தது என்று எண்ணாது நாட்டுக்காக நாம் என்ன செய்துள்ளோம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். தாய் தந்தையர்களிடம் பக்தி கொண்டு அவர்களிடம் பணிவுடனும், பண்புடனும் மாணாக்கர்கள் நடந்து கொள்ளவேண்டும். குரு பக்தி அடுத்தபடியாக அமைகின்றது. குரு பக்தியின் மூலம் மாணாக்கர்களிடம் தெளிந்த உள்ளம் உண்டாகிறது. தெளிந்த உள்ளத்தைப் பெறுவது கல்வியின் அடிப்படையாகும். தேச பக்தி, தெய்வபக்தி ஏற்படும்பொழுது கல்வி பூர்த்தி ஆகிறது. உள்ளத்தில் தோன்றிய மாத்ருபக்தி இறுதியில் தெய்வ பக்தியாக வடிவெடுக்கிறது. தெய்வ பக்தி கொண்டுள்ள உள்ளம் நலமனைத்துக்கும் உறைவிடமாகிறது. நல்லெண்ணத்தை மாணவர்களிடம் வளர்ப்பது கல்வித்திட்டமாக அமையவேண்டும். கல்வி கற்றுவரும் மாணாக்கர்கள் நாட்டுக்குச் சுமையாக இருப்பதற்குப் பதிலாக நாட்டின் தொண்டர்களாகவும், நாட்டின் நலத்தைக் காக்கும் தலைவர்களாவும் விளங்குவார்களாக. (முற்றும்)

நான் யார்?

(ஸ்ரீ ரமண மஹரிஷியின் 'உள்ளது நாற்பது' என்ற நூலின் கருத்தைத் தழுவியது)

(திரு. V. S. நரசிம்மன்)

நமது பாரததேசத்தின் ஆத்ம ஞானிகளுள் ஸ்ரீ ரமண மஹரிஷி சிறப்பிடம் வகிக்கின்ருர். தம் பதினும் வயதிலேயே மரணமிலாப் பெரு நிலையை அனுபவித்து, அப்போது தம் அகத்தே எழுந்த 'நான் யார்?' என்ற ஆத்ம விசாரணை நெறியைப் பலருக்கும் உபதேசித்தார். ஆன்மீகக் குருவாக விளங்குபவர்கள் தத்தமக்கு ஏற்ற ஒரு மார்க்கத்தை வலியுறுத்திப் பேசுவார்கள். மஹரிஷி அவர்கள் "அகத்தே எழும் எண்ணங்கள் யாருக்கு எழுகின்றன என்று பார்க்க வேண்டும். 'எனக்கு' என்ற பதில் தோன்றினல் உடனே அந்த 'நான் யார்?' என்ற விசாரத்தில் ஆழ்ந்து ஈடுபடவேண்டும்'' என்று உரைப்பார். ''நான் யார்?'' என்ற விசாரமுறையை மஹரிஷி அவர்களைப் பற்றி எழுதப்பட்ட நூல்களில் காணலாம். இக்கட்டுரையில் அவர் இயற்றிய 'உள்ளது நாற்பது' என்ற நூலிலிருந்து இம்முறையைப்பற்றி ஆராய்வோம்.

'நான்' என்ற சொல்லின் இலக்கு யாது? 'நான்யார்?' என்ற கேள்வியை அகத்தே நாம் கேட்டுக்கொண்டால் என்ன விடை கிடைக்கின்றது? மற்றவருடன் உள்ள உறவை விளக்கும்; அன்றி நாம் மேற்கொண்டுள்ள தொழிலைக் குறிக்கும்; அல்லது நம் தனித்த ஸ்வபாவத்தை எடுத்துக்காட்டும். ஆயின் இத்தகைய பல்வேறு விடைகளின் ஊடே ஊடுருவிக்கிடப்பது ஒன்று உள்ளது. அதுவே'நான்'! இந்தத் தத்துவத்தைச் சுட்டிக்காட்டும் அடைமொழிகளாகவே நம் விடைகள் அமைகின்றன. "மனம் என்பது எண்ணங்களின் தொகுப்பு ஆகும். அனைத்திற்கும் மூலமாக அமைவதே 'நான்' என்ற எண்ணம். ஆகவே மனம் என்பது 'நான்' என்று அறிவாய்." உபதேச சாரத்தில் (18) மனம், நான் ஆகிய இரண்டும் ஒன்று என மஹரிஷி உரைக்கின்ருர். 'உள்ளது நாற்பதும்' 'நான்' என்பதற்கு இதே விளக்கம் தருகின்றது. கனவற்ற உறக்கநிலையில் எண்ணங்கள் எழுவதில்லை. ஆயின் விழித்தெழுந்தவுடன், கணப்பொழுதில் பல எண்ணங்கள் தோன்றுகின்றன. இந்த விருத்திகள் அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழ்வது 'நான்' என்ற விருத்தியே. "நானென்றெழுந்தபி னெல்லா மெழும்" (உ. நா. 23). ஆகவே "மனம் = எண்ணங்கள், எண்ணங்களுக்கெல்லாம் ஆதாரமான எண்ணம் நான்" என்பது முடிவு.

'நான்'என்பதின் இயல்பை மஹரிஷி விளக்குகின்ருர். இதற்கு ஆதாரமாக அசேதனமாகிய உடல் இருக்கமுடியாது. 'நான்'—என்று உடல் எப்போதாவது சொல்கின்றதா? சேதனன் ஒருவனே அப்படி உரைக்கின்ருன். ஆயின் சைதன்ய வடிவமாகிய சத் வஸ்துவை 'நான்' எனலாமா? கூடாது. ஏனெனில் 'நான்' தோன்றி மறையும் தன்மையது; சத் வஸ்துவோ தோற்றம் அற்றது— (சடவுடல் நான் என்னுது, சத்சித் உதியாது. பாடல். 24)

ஆகவே 'நான்' உடல் அன்று; சத்பொருளும் அன்று. ஆயின் தேகத்தின் அளவு கொண்டதாய் இவை இரண்டிற்கும் இடையே 'வேறு ஏதோ ஒன்று' உதிக்கின்றது. அதுவே 'நான்'. (உடல் அளவா நானென்றுதிக்குமிடையில். பாடல் 24). இதனையே க்ரந்தி (முடிச்சு), பந்தம், ஜீவன், சூக்ஷ்ம சரீரம், அகந்தை, சம்சாரம், மனம் என்று பலவாருக இயம்புகின்றனர். மஹரிஷி 'நான்' என்று கூறும்போது பெரும்பாலும் ஆணவ எண்ணத்தைக்(अहं मति) குறிப்பிடுகிருர்.

2. ஆத்ம விசாரம்:

'நான்' என்ற எண்ணம் உதிக்கும் இடம் யாதெனக் காண்பதே ஆத்ம விசாரம்.

'நான் யார்? (कोऽहं)' என்ற மந்திரத்தை ஜபிப்பது விசாரம் ஆகாது; இத்தகைய ஜபம் அறவே பயனற்றதன்று. சாதனையின் துவக்கத்தில் இத்தகைய ஜபம் துணைபுரியும். 'நான்' என்ற அகங்காரத்தின் தோற்றுவாய் யாதெனக் காணும் முன், எண்ணங்கள் அனைத்தும் 'நான்' என்ற விருத்தியை ஆதாரமாகக்கொண்டவை என்று உணரவேண்டும். எனவே

அகத்தில் பல்வேறு சிந்தனைகள் எழும்போது 'ஏன் இத்தகைய எண்ணங்கள் தோன்றுகின்றன? என அவற்றின் காரணத்தை ஆராயாது, 'யாருக்கு இச்சிந்தனைகள் எழுகின்றன' எனக் காணல் வேண்டும். சிந்தனைகளின் தோற்றுவாயை நோக்கி விசாரம் செய்ய வேண்டும். 'யாருக்கு' என்று வினவினால் வெகு எளிதாக எனக்குத்தானே என்று விடைவரும். இதில் என்ன புதிர்! மஹரிஷி இத்தருணத்தில் உபதேசிப்பார். 'எனக்கு' என்ற அபிமானத்தைப் பிடித்துக்கொண்டு உள்ளதே, ஏதோ ஒன்று, அந்த 'நான்' யாதெனத் தேடு. இங்ஙனம் சாதகன் ஆரம்பநிலைக்குத் திருப்பப்படுவான். அகத்தே ஆழ்ந்திருத்தல், உள்நோக்கித் தீவிர ஆராய்ச்சி செய்தல், தன்னை மறந்து லயித்திருத்தல், தியானத்தில் மூழ்குதல்-என்ற சொற்றொடர்களால் விசாரத்தின் நிலையை உணர முடியாது. ஓரிடத்தே அமர்ந்து, தீவிரப்பயிற்சியை, ஆத்ம விசாரத்தைப் பயிலும்போதுதான் அதை அறிய முடியும்.

ஆத்மவிசார முறையைப் பற்றி மஹரிஷி கூறுகின்றார். கிணற்றில் மூழ்குபவன் தன்னை அதற்குத் தயார் படுத்திக்கொள்வது போல், அகத்தே மூழ்குபவன் மிகுந்த கவனத்தோடு ஆர்வத்தோடு இருக்கவேண்டும். தண்ணீரில் குதிப்பவன், கிணற்றின் அடியிலுள்ள பொருளை உற்று நோக்கி, மூச்சை அடக்கி, அதனைக் குறிவைத்து ஆழ்ந்து மூழ்குகின்றான். அதுபோன்று எண்ணங்களின் தோற்றுவாயை லட்சியமாகக் கொண்டு, பிராணாயாமம் போன்ற பயிற்சிகளைச் செய்து, உள்முக பாவனை மேலோங்கிச் சாதனை புரியவேண்டும்.

எழும்பும் அகந்தை எழுமிடத்தை நீரில்
விழுந்த பொருள்காண வேண்டி—முழுகுதல்போற்
கூர்ந்தமதி யாற்பேச்சு மூச்சடக்கிக் கொண்டுள்வே
யாழ்ந்தறிய வேண்டு மறி.

(உள்ளது நாற்பது, 28).

மனதை உட்குவியச் செய்தல், எண்ணங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை சாதகனுக்கு அரியனவல்ல. ஆயின் 'நான்' என்ற விருத்தி (அஹ் ங்கார) அந்தக்கரணத்தில் சூட்சமப் பகுதியைச் சார்ந்தது. எனவே சாதகன் சாதாரண மனநிலையைத் தாண்டிச் செல்லவேண்டும். பாடலில் குறிப்பிட்டபடி உள்முக நிலையில் மனதைத்தாண்டிச் செல்லவேண்டிய நெறியில் அதிகக் கவனத்தை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. ஆரம்ப நிலையில் இருக்கும் சாதகர்களுக்கு மஹரிஷி உபதேசிப்பார்: "எல்லா எண்ணங்களும் 'நான்' என்பதை ஆதாரமாகக் கொண்டுள்ளன. எனவே ஒவ்வொரு எண்ணமும் எங்கிருந்து எழுகின்றது என்பதை நோக்காது, 'நான்' எழும் இடத்தைக் கண்டால் போதும். அனைத்திற்கும் தோற்றுவாயாக உள்ள தத்துவத்தின்கண் அது உன்னைத் தானே சேர்க்கும்." மஹரிஷியின் விசார மார்க்கத்தில் இந்த முறை மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. "தியானம் மிகவும் இன்பமாக இருக்கின்றது. அதில் விவரிக்க இயலாத ஆனந்தமும், சாந்தியும் காண்கிறேன்" என்று சாதகர் கூறினால், ஸ்ரீரமணர் அவரைப் பார்த்து உரைப்பார்: "நான் ஆனந்தம் அடைந்தேன் என்று கூறுவது யார்? சாந்தியில் நிலை பெற்றது 'யார்' என்று பார்." "எனக்குத் தியானத்தில் ஒரே இருட்டாகத் தோன்றுகின்றது. எல்லாம் சூன்யமாகவே காண்கின்றேன்" என்று மற்றொருவர் குறைபட்டுக் கொள்வார். அத்தகைய சூன்யத்தை ஒருவன் பார்க்கின்றான் அல்லனோ? 'நான் சூன்யத்தைப் பார்க்கின்றேன்' என்று சொல்லும் 'நான்' யார்? அதை விசாரித்துப் பார் என்று மஹரிஷி உபதேசிப்பார். ஸ்ரீ ரமணரின் நூல்களில் இத்தகைய சம்பாஷணைகள் பல இருக்கின்றன.

'விசார மார்க்கம் அதிகக் கடினம்' என்று சாதகர்கள் பலரும் உரைப்பர். ஆயின் இந்த நெறி மிகவும் சுலபமானது, நேரடியானது என்று மஹரிஷி உரைப்பார். "ஐயே! அதி சுலபம். ஆன்ம வித்தை, ஐயே! அதிசுலபம்" என்று பாடியுள்ளார். "கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று ஒருவன் சந்தேகம் கொள்ளலாம். ஆனால் 'நான்' என்பதை மறுத்து உரைப்பார் யாரும் இல்லை. எனவே நமக்குத் தெரிந்ததைக் கொண்டு துவங்குவதில் என்ன சிரமம்? 'நான்' எழும் தோற்றுவாயைக் கண்டு அதில் லயித்து இரு. கடவுளைப் பற்றியும், தத்துவங்களைப் பற்றியும் வீணே வாதிட்டு என்ன பயன்?

ஆத்மவிசாரத்தைப் பற்றி மற்றும் ஒரு

கருத்து உள்ளது. 'நான் யார் ?' (कोऽहं) என்று விசாரணை செய்வது சாலச் சிறந்தது எனின், 'சிவோஹம்' அஹம் பிரம்மா அஸ்மி' போன்ற மந்திரங்களை உச்சரிப்பது விசாரம் ஆகாதா ? இக்கேள்விக்கு மஹரிஷி பதில் தருகின்றார் : 'நான் என உச்சரியாது, உள்ளாழ்ந்து 'நான்' உதிக்கும் இடத்தை நாடுதலே ஆத்ம விசாரம் ஆகும். அஃதன்றி, 'நான் இத்தகைய சொரூபம் உடையவன் நான் இது அற்றவன்' என்று பலவாருகத் தியானிப்பது, ஆத்ம விசாரணைக்குத் துணை புரியும் அங்கங்களாகும்.

" நான்என்று வாயால் நவிலாதுஉள் ளாழ் [மனத்தால்
நான்என்றுஎங்கு உந்துமென நாடுதலே— [ஞானநெறியாம்
அன்றி, அன்றிஇது, நான் ஆம் அது,என்று [உன்னல் துணை
யாம்,அது விசாரம்ஆமா ?

(உள்ளது நாற்பது–29)

3. 'நான் அற்ற நிலையே விசாரத்தின் முடிவு ஆகின்றது.

நான் என்ற விருத்தி (अहं मति) எழுந்த பின் வியவகார ஜகத் தோன்றுகின்றது. 'நான்' என்ற அகங்காரம் உள்ள வரையில்தான் ஜாக்ரதம்,ஸ்வப்னம் (விழிப்பு, கனவு)அவஸ்தைகள் உள்ளன. அகங்காரமாகிய விருத்தி அற்ற நிலையே, சுழுத்தி, ஆழ்ந்த கனவற்ற உறக்கம் ஆகும். 'நான்' தோன்றி, மறையும் இயல்புடைத்து; எனவே அது அசத் வஸ்து, மெய்ப் பொருளுக்கு அன்னியமானது (விலக்ஷண மானது). அனைத்திற்கும் ஆதாரமாக இலங்குவதே மெய்ப்பொருள். அதுவே அஹம் விருத்திக்கும் ஆதாரம். மெய்ப்பொருளை ஆதாரமாகக் கொண்டு வெளிப்படும் அகங்காரம் ஆகிய எண்ணத்தின் விசித்திர இயல்பு யாதெனின், அஃது சத் வஸ்துவையே மறைக்கின்ற செயல் உடைத்திருப்பதாகும்! பிரகாசமான கதிர்கள் சூரியனையே மறைப்பதுபோல, 'நான்' உள்ள இடத்தில் 'சத் வஸ்துவை' உணர்வது கடினமாகின்றது.

ஆழ்ந்து உணராத, மேற்போக்கான மன நிலையை உடைய நாம், அகங்காரத்தையே மெய்ப்பொருளாகக் கருதுகின்றோம்; ஆணவத்தின் திரையை அகற்றி அதன்பின் ஆதார சுருதியாய்த் திகழும் பேரொளியைக் காண்பதில்லை. ஆத்ம விசாரம் வலுப்படத் துவங்கிய பின், ஆணவத்தின் பிடி தளர்கின்றது. விசாரம் தீவிரமடைகின்றபோது, ஆணவம் தலை சாய்கின்றது என மஹரிஷி கூறுவார். "நான் ஆர் என மனம் உள்நாடி உளம் நண்ணவே நான் ஆம் அவன் தலை நாணம் உற" (உள்ளது நாற்பது 30)

இந்தக் கருத்தை மிகவும் நயமாகக் கதை ஒன்றின் மூலம் மஹரிஷி விளக்குவார். கல்யாணத்திற்குச் செல்லும் கூட்டம் ஒன்று ரயில் நிலையத்திற்கு வந்தது. அதைக் கண்ட போக்கிரி ஒருவன் ஒரு தந்திரம் செய்தான். வரவேற்க வந்த பெண் வீட்டாருடன் கலகலப்பாகப் பழகி, பிள்ளை வீட்டைச் சார்ந்தவர்களுக்குக் கட்டளைகள் இட ஆரம்பித்தான். அங்ஙனமே பிள்ளை வீட்டாருடன் அந்நியோந்நியமாகப் பழகி, பெண் வீட்டைச் சார்ந்தவர்களுக்கும் கட்டளையிட ஆரம்பித்தான். இரண்டு வீட்டாரும் அவன் அடுத்த பிரிவைச் சார்ந்த முக்கியமான புள்ளி எனக்கருதி, அவன் பேச்சிற்கு ஏற்ப ஆடினர். அட்டகாசம் அதிகரிக்கவே, பெண்ணின் தகப்பனும், பிள்ளையின் தகப்பனும் 'யார் இந்தப் பேர்வழி' என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பி, அப்பேச்சினைத் துவக்கினர். இதைக் கண்ட போக்கிரி தனது சாயம் வெளுத்துவிடும் என அஞ்சி அங்கிருந்து ஓடி விட்டான். இரண்டு வீட்டாருக்கும் சம்பந்தமற்ற ஒருவன் எப்படியோ பொய்யான உறவை ஏற்படுத்திக்கொண்டது போல், சத் வஸ்துவோடு சம்பந்தமற்ற 'ஆணவம்' எப்படியோ உறவை நிலைநிறுத்தி விடுகின்றது. ஆத்மாவின் சொரூபத்தை மறைத்து, ஆணவமே பெரிது என நம்பும் நிலைக்குச் சாதகன் செல்கின்றான். ஆயினும் 'இதன் உண்மை இயல்பு யாது' என ஆராயத் தொடங்கினல், ஆணவம் தன்னிலை கெட்டு அழிந்து விடுகின்றது. அதுவே விசாரத்தின் விளைவு ஆகும்.

4. நானற்ற நிலை

ஆத்மவிசாரம் தீவிரமடைந்தால், இறுதியில் அது 'நானற்ற நிலையில்' முடிகின்றது என மஹரிஷி உணர்த்துகின்றார். தன்னுடைய ஜீவவியக்தியே மிகவும் போற்றத்தக்

கது எனக் கருதுபவர்களிடையே இத்தகைய உண்மை கலக்கத்தை உண்டு பண்ணுகின்றது. 'நானற்ற நிலை' -ஜீவவியக்தி அற்ற நிலை-கல், மரம் போன்ற ஜடநிலை' என்றுஅவர்கள் கருதுகின்றனர். எண்ணங்கள் அழிந்து, 'வெளியுலக உணர்வு அற்று, அனைத்தையும் உணரும் மனிதத் தன்மையும் அற்று இருக்கும் நிலை போற்றுதற்குரியதா? இந்த எண்ணமே நமக்கு நடுக்கத்தைத் தருகின்றது' என்றும் உரைப்பர். அவர்கள் பயத்தை, ஐயத்தை மஹரிஷிபோக்குகின்றார். 'நான் அற்ற நிலை' துக்ககரமானது அன்று; வெறுப்புக்குரியது அன்று; முற்றிலும் கற்பனையானதும் அன்று. நம் அன்றாடவாழ்வில் நாம் உறங்குவதற்கு முன் எவ்வளவு கவனத்தோடு படுக்கையைத் தயார் செய்கின்றோம்; காற்றுவேண்டின் மின் விசிறியைப் போடுகின்றோம்; கொசுவலை கட்டுகின்றோம்; அனைத்தும் எதற்காக? 'தன்னை மறந்து' உறங்குவதற்காகத் தானே? 'கட்டைபோல் என்னை மறந்து தூங்கினேன்' என்று எவ்வளவு மகிழ்ச்சியோடு கூறுகின்றோம். மூன்று அல்லது நான்கு நாட்கள் தொடர்ந்து உறக்கம் வரவில்லையெனின் படாதபாடுபடுகின்றோம்! ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவ வியக்தி உள்ளதா? 'நான்' என்ற எண்ணம் உள்ளதா? கனவுடன் கூடிய உறக்கம் கூட நமக்குப் பிடிப்பதில்லை. கனவில் அகங்காரத்தின் பிடிப்பு உள்ளது. அத்தகைய சூக்ஷ்மமான தொடர்பையும் ஒதுக்கி விட்டு, அகங்காரமற்ற நிலையைப் பெரிதும் நாடுகின்றோம். எவரும் மறுக்கவொண்ணு அனுபவம் அன்றோ இஃது! எனவே இயல்பாக மிகவும் மகிழ்ச்சியுடன் நாம் ஏற்கும் நிலைதான் 'நானற்ற நிலை'. இங்கு 'நான்' தற்காலிகமாக ஒடுங்குகின்றது. 'நான்' முற்றிலும் அழிந்த நிலை ஆழ்ந்த உறக்கத்தைப் போன்று பன்மடங்கு சுகத்தையும், அளப்பரிய ஆனந்தத்தையும் தருகின்றது. உறக்கம்போல் அல்லாது, நிரந்தரமான சாந்தியை இப்போது அடைகின்றோம். நானற்ற நிலையே நமது சத்திய ஸ்வரூபநிலையாகும். "நானுதியாதுள்ள நிலை நாமதுவாயுள்ள நிலை" (பாடல் 27) "உலகு விட்டுத் தன்னை ஓர்ந்து ஒன்றிரண்டு தானற்று 'நானற்ற' அந்நிலை எல்லார்க்கும் ஒப்பாம் (பாடல் 3) என்ற பாடலும் மேற்கூறிய கருத்தைத் தெளிவாக்குகின்றது.

5. பொய்யான 'நான்', மெய்யான நான்

'நான் அற்ற நிலை' விரும்பத்தகாதது அன்று. கனவற்ற உறக்க நிலையைப்போல் அது இயல்பானதே. ஆயினும் தூங்கி எழுந்தபின், ஒருவன் தன் உண்மை நிலையை உணராத அஞ்ஞானியாகவே இருக்கின்றான். அதற்கு மாறாக நானற்ற நிலையை அடைந்தபின், தம் நிஜ சொரூபத்தில், சத்வஸ்துவோடு ஞானி ஐக்கியமாகின்றார். அதன்பின் எங்கும் ஆத்மப் பிரகாசத்தையே அவர் காண்கின்றார். அனுபவம் பெற்ற ஞானிகளே அதை உணரமுடியும். வெறும் சொற்களால் விவரிக்க இயலாத அனுபவம் அன்றோ அது?

'நான்' என்ற சொல்லின் பொருளை நாம் மறுபடியும் ஆராயவேண்டும். மஹரிஷி 'நான் யார்' எனப் பார்க்க வேண்டும் என்று சாதகனைத் தூண்டும் பொழுது 'நான்' என்பதன் மூலம் அவர் குறிப்பிடுவது யாதெனநாம் உணரவேண்டும்.'நான்' என்பதுஉடல், சரீரம், மனம் ஆகியவற்றுடன் கொண்டுள்ள அபிமானம் என்று கண்டோம். இதுவே அஞ்ஞானத்திற்குக் காரணம். இதனையே கிரந்தி, சம்சாரம் என்று குறிப்பிடுகின்றேன். இத்தகைய இலக்கணத்திற்கு இலட்சியமாகவிளங்கும் 'நான்' மஹரிஷி அவர்களால் 'அகந்தை, பொய்-நான்(Spurious ego, false I)என்று உணர்த்தப்படும். ஆயின் 'மெய்-நான்' (real I) என்பது யாது? உண்மையில் 'நான்' என்பதற்கு இலக்காக இலங்கும் சைதன்ய சொரூபமே அதன் மெய்ப்பொருளாகும்.

"மனம் விசாரத்தினுல் உள்முகமாகி ஹிருதய ஆகாசத்தில் சேரும்போது 'நான்' என்ற அகங்காரம் தலைசாயும். அப்போது 'நான், நான், எனச் சைதன்ய சொரூபம் துலங்கும். இத்தகைய போதம் 'நான்' எனத் தோன்றினும் அது அகந்தையன்று; பரிபூரண சச்சிதானந்த சொரூபமே தூய அந்தக்கரணத்தில் அப்படிப் பிரகாசிக்கின்றது.

'நான்ஆர்' எனமனம்உள் நாடி, உளம்நண்ணவே,
நான்ஆம் அவன்தலை நாணம் உற— நான் நான்
ஆத் தோன்றும் ஒன்று தானுகத் தோன்றினும்நான்
[அன்றுபொருள்
பூன்றம்அது தான்ஆம் பொருள்' — (பாடல் 30)

'நான்' என்ற சொல்லை நாம் அனைவரும் பயன்படுத்தும்போது முதலில் குறிப்பிடப் பட்ட அகந்தை என்ற பொருளையே கொள் கின்றோம். ஆனால் மஹரிஷி அவர்களோ இச் சொல்லைப் 'பரிபூரண சத்திய சைதன்ய வஸ்து வைக் குறிப்பதாக உபதேசிக்கின்றார். சாதனை யில் முன்னேற்றம் அடைந்துள்ள சாதகர் களுடன் பேசும்போது 'நான்'எனச் சொல்லின் மெய்ப்பொருளை (இரண்டாவது அர்த்தத்தை) வலியுறுத்திக் கூறுவார். எனவே 'நான்' என்பது யார் என்பார் என்று கூறும்போது, ஆணவ அகந்தையை அகற்றி, அனைத்திற்கும் மூலமாகத் திகழும் இதயத்தே ஒளிரும் ஆன்ம தத்துவத்தைப் பார்—என்பதே அவருடைய உபதேசமாகின்றது. இங்ஙனம் சாதகன் சாதாரண நிலையில் இருந்து முன்னேறி, உள் முகப் பாவனையில் ஆழ்ந்து திளைக்க மேற் கொள்ளவேண்டிய நெறியை அவர் குறிக்கின் றார். சாக்ஷிபாவம், சைதன்ய பாவம், த்ருக்-த்ருச்ய விவேகம் உணர்த்தும் दृगेव सत्यं என்ற உண்மை, மஹரிஷி 'நான்' என்பதற்குத் தரும் விளக்கம் அனைத்தும் ஒன்றே (identical).

'நான்' என்பதற்குப் 'பரம்பொருள், பூரண தத்துவம்' என்பதே பொருள் என்பதை மஹரிஷி ஒரு பாடலில் உணர்த்துகிறார்.

"இதயமாம் குகையின் நாப்பண் ஏகமாம் பிரம்மம் [மாத்ரம்
அது அகம், அகம்ஆய் நேரே அவிர்ந்திடும் [ஆன்மா வாக"

(உள்ளது நாற்பது அனுபந்தம் 8)

இக்கருத்தையே ஆச்சாரிய சங்கரர் விவேக சூடாமணியில் குறிப்பிடுகின்றார்:

वितसति परमात्मा जाग्रदादिष्ववस्था स्वमहमहं इति साक्षात् साक्षिरूपेण बुद्धेः

விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளிலும் அப் பரமாத்மா புத்தியில் சாக்ஷி சைதன்ய ரூபமாக 'நான், நான்' என்று பிரகாசிக்கின்றது.

சாதாரண முறையில் பயன்படுத்தப்பட்ட 'நான்' என்ற சொல்லிற்கும், ஆத்ம விசாரணை யில் பயன்படுத்தப்பட்ட அதே சொல்லிற்கு மிடையே பெரிய வித்தியாசம் உள்ளது. சாதனையின் தன்மையை இதுவே வேறுபடுத்து கின்றது. மஹரிஷி உரைக்கின்றார்: "ஆத்ம தத்துவத்தை உபநிஷதம் 'தத் த்வம் அஸி',—அது நீயே என்று உபதேசிக்கின்றது. எனவே விசாரத்தால் ஆன்மநிஷ்டனாயிருக்க வேண்டி யது தவிர செய்ய வேண்டுவது எதுவுமில்லை. அதனை விடுத்து, 'அது நான், இது நானன்று' என்று எண்ணிக்கொண்டு இருத்தல் சக்திக் குறைவாம். அந்தப் பரம்பொருள் என்றும் தானாய் உள்ளகத்தே இருக்கின்றது.

அதுநீயென்று ஐம்மறைகள் ஆர்த்திடவுந் தன்னை
எதுஎன்று தான் தேர்ந்து இராது, 'அதுநான்
இதுஅன்றுஎன்று எண்ணல்உறல் இன்மையினால்,
அதுவேதானாய் அமர்வ தால்." [என்றும்

(உள்ளது நாற்பது: 32)

எனவே சாதகன் பொய்யான தோற்றங்களி லிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண் டும். 'பொய்-நான்' ஏற்படுத்தும் உறவுகளை அழிக்க வேண்டும். தன் மெய்யான சொருபநிலை யில், 'நான்' என்ற போதத்தில் ஆழ்ந்திருப் பதே ஆத்ம ஞானம் ஆகின்றது.

'நான்' என்ற அகந்தையை அழித்து, 'நான்' என்ற பூரண சொருபத்தில் ஆழ்தல் மோக்ஷ மாகும். அதுவே ஜீவன்முக்தி நிலை. இத்த கைய ஞானியை 'தன்னை அழித்து எழுந்த தன்மயர்' என்று குறிப்பிடுகின்றார். சச்சிதா னந்தமே தம் நிஜசொரூபம் என்று ஞானிகள் உணர்கின்றார்கள். சச்சிதானந்தத்துக்கு அந் நியமாக அவர்கள் எப்பொருளையும் காண்ப தில்லை. தங்கள் உள்ளத்தில் ஆத்மனைக் காண்பவர்கள் பார்க்குமிடமெங்கும் பரமனையே காண்கிறார்கள். அவர்களுடைய மனநிலை சாதாரண மக்களுடைய மனநிலையைக் காட்டி லும் வேறுபட்டதாகும். அவர்களுடைய மன நிலையை அதீதநிலை என்று பகரலாம். இத் தகைய பரமஹம்சர்களுக்குச் செய்யவேண்டி யது என்ன இருக்கின்றது? அவர்களுடைய நிலையை மனதினால் எண்ணுவது எப்படி? இங்ஙனம் ஞானிகளின் பெருமையை எடுத்தி யம்பும் பாடலைப் பார்ப்போம்.

தன்னை அழித்தெழுந்த தன்மய ஆனந்தருக்கு
என்னை உளதொன் றியற்றுதற்கு-தன்னையலா
தன்னிய மொன்று மறியார் அவர்நிலைமை
இன்னதுஎன்று உன்னல் எவன்?

(உள்ளது நாற்பது: 31)

ஹரி ஓம் தத் சத்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-152

877. **निरालम्बा நிராலம்பா** — பற்றுக்கோடு இல்லாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

எல்லையில் அடங்கியுள்ள பொருள்கள் யாவும் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்துள்ளன. தூண் ஒன்றுக்கு நிலம் ஆதாரமாக இருக்கிறது. முக்காலி, நாற்காலி ஆகிய தட்டுமுட்டுச் சாமான்களுக்குக் கால்கள் ஆதாரமாய் இருக்கின்றன. பறக்கின்றவைகளுக்குப் பறக்கின்ற பொழுது காற்று ஆதாரமாய் இருக்கின்றது. நீர்வாழ்பவைகளுக்கு நீர் ஆதாரமாய் இருக்கின்றது. நிலத்தில் ஸ்தாவர ஜங்கமமாயுள்ள உயிர்வகைகளுக்கு நிலம் ஆதாரமாய் இருக்கிறது. வெட்டவெளியில் மிதங்கிக் கொண்டிருக்கும் பூமி முதலிய கோளங்களுக்கு ஆகர்ஷண சக்தி அல்லது ஈர்ப்புச் சக்தி ஆதாரமாயிருக்கிறது. கோளங்கள் ஒன்றையொன்று கவர்ந்திழுப்பதால் நாலாப்பக்கமும் முறையாகக் கவர்ந்து இழுக்கப்படும் கோளங்கள் ஆதரவு அற்றவைகள் போல் வான வெளியில் மிதங்கிக் கொண்டும் நகர்ந்து கொண்டும் இருக்கின்றன. அங்ஙனம் ஆகர்ஷண சக்தி கோளங்களுக்கு ஆதாரமாயிருந்து அவைகளை இயக்குவிக்கிறது.

இனி, பஞ்சபூதங்களுள் எங்கும் நிறைந்துள்ள ஆகாசம் ஒன்று மட்டும் ஆலம்பம் அல்லது தாங்கிப் பிடிக்கும் பிறபொருள் ஏதுமின்றி அது தன்மயமாயிருக்கிறது. பிறகு காற்றுக்கும், நெருப்புக்கும், நீருக்கும், நிலத்திற்கும் ஆதாரமாயிருப்பது ஆகாசம். எங்கும் நிறைபொருளுக்குப் போக்கும் வரவும் புணர்வும் தேவையில்லை. ஆகையினல் ஆகாசம் நிராலம்பமாய் அமைந்திருக்கிறது. ஆனல் பிரளய காலத்தில் இந்த ஜட ஆகாசமும் அன்னை பராசக்தி என்னும் சிதாகாசத்தில் ஒடுங்குகிறது. சிதாகாசம் ஒன்றுதான் யாண்டும் தன்மயமாய் நிலைத்திருக்கிறது. சிதாகாசத்திற்குச் சைதன்யம் என்பதும் பிரக்ஞானம் என்பதும் துரியம் என்பதும் ஏனைய பெயர்களாம். பிரக்ஞானமும் பரதேவதையும் ஒன்றேயாம். சராசரங்களனைத்தும் அண்டங்களனைத்தும் பிரக்ஞானத்தில் தோன்றி வந்து, பிரக்ஞானத்தில் நிலைத்திருந்து, பிரக்ஞானத்தில் ஒடுங்குகின்றன. ஆனல் பிரக்ஞானம் மட்டும் யாண்டும் இருந்தது இருந்தபடியிருக்கும் பரவஸ்துவாம். இதற்கு உபமானம் ஒன்று தேவை. திரைப் படங்கள் தோற்றத்துக்கு வருவதும் நிலைபெற்றிருப்பதும் ஒடுங்குவதும் திரையின்கண். அப்படித் தென்படும் படங்களுக்குத் துவக்கம் உண்டு, நிலைபேறு உண்டு, ஒடுக்கம் உண்டு. ஆனல் இப்படங்களுக்கு ஆதாரமாயிருக்கும் திரை யாண்டும் தன்மயமாயிருக்கிறது. தோன்றி, இருந்து, ஒடுங்கும் ஜடாகாசத்துக்கு ஆதாரமாகச்சிதாகாசம்அல்லது அறிவுப் பெருவெளியாக அன்னை பராசக்தி இலங்குகின்ருள். சிதாகாசம் என்பதும் சிதம்பரம் என்பதும் ஒன்றேயாம். அனைத்தையும் தன்னகத்தே அடக்கிக்கொண்டு அகண்டமாயுள்ள சிதாகாசத்துக்கு ஆதாரம் வேறு ஒன்றும் தேவையில்லை. ஆக நிராலம்பா என்னும் அன்னையின் நாமம் தியானத்துக்கு உரியதாம்.

878. **स्वात्मारामा ஸ்வாத்மாராமா**— தன்னில் தான் திருப்தியடைந்து இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இந்த நாமம் அம்பிகைக்கும் பொருந்துகிறது; பரசிவத்துக்கும் பொருந்துகிறது. இந்த நாமத்துக்குச் சான்றுகள் பல இயற்கையில் எடுக்கலாம். மாது ஒருத்தி தன் முகத்தை நிலைக்கண்ணுடியில் பார்க்கிருள். அது தன் சொருபத்தையே பார்ப்பதற்கு நிகர். பிம்பமாகத் தென்படும் தன் வடிவத்தில் மனதைச் செலுத்துதலில் அவள் மகிழ்வுறுகிருள். பாடகன் ஒருவன் தனக்குத் தானே பாடிக்கொண்டு தான் பாடுகிற பாடலில்திருப்தியடைந்தவனுகவிருக்கின்ருன். ஓவியம் தீட்டுகிற ஒருவன் தன்மனதில் கற்பனை பண்ணிய அழகிய வடிவத்தைப் புறத்தில்சித்திரமாகவடித்து அதைப் பார்த்துத் திருப்தியடைகின்ருன். சிற்பி ஒருவன் மனதில் கற்பனை பண்ணுகிற வடிவத்தை மரத்திலும், கல்லிலும், உலோகங்களிலும் அமைத்து அவைகளைப் பார்த்துப் பரமானந்தமடைகிருன். அவரவர் சமைத்துக் கொள்ளும் உணவு அவரவர்க்குப் பரமதிருப்தி

உண்டுபண்ணுகிறது. கட்டுரை எழுதுகிற ஒருவன் தன் மனதில் தோன்றுகிற கருத்துக்களை எழுத்தோவியமாக அமைத்துப் பிறகு அதைப் படித்துப் பார்ப்பதில் மகிழ்வடைகிறான். மற்றொரு சிற்பி தான் மனதில் கற்பனை பண்ணிய மாளிகையைப் புறத்தில் பொருள்களைக் கொண்டு அமைத்து அதன் அமைப்பைப் பார்த்துப் பரமதிருப்தி யடைகிறான். இவை யாவும் ஸ்வாத்மாராமா என்னும் ஆத்மதிருப்திக்கு ஏகதேசம் சான்றுகளாகின்றன.

அகிலாண்டங்களனைத்தும் பார்த்து ரசிப்பதற்குப் பொருத்தமான சிங்காரத் தோப்புக்களாக இலங்குகின்றன. ஜாக்ரதாவஸ்தையில் ஜீவகோடிகளனைத்தும் புறத்தே கண்டு மகிழ்கின்ற பிரபஞ்சங்கள் யாவும் அன்னை பராசக்தி மகிழ்வுடன் தோற்றுவித்தவைகளாம். பிறகு அந்தந்த ஜீவன் சொப்பனவஸ்தையில் காணும் காட்சிகளும் ஜாக்ரதாவஸ்தைக் காட்சிகளுக்கு நிகராக அந்தந்த மனது தனக்குத் தானே சிருஷ்டித்துக்கொள்ளும் உலகங்களாம். அன்னை பராசக்தியும் அவளுடைய அம்சங்களாக அமைந்த ஜீவகோடிகளும் அகத்திலிருக்கும் பாங்கைப் புறத்தில் தோற்றுவித்து அவைகளைப் பார்த்து மகிழ்வடைவது யாண்டும் நிகழ்ந்து வருகிற முடிவில்லாத விளையாட்டாம்.

விளையாட்டில் காணும் மகிழ்வுக்கு மேல் மற்றொரு மகிழ்வு இருக்கிறது. உயிர்களனைத்தும் சுஷுப்தி அவஸ்தையில் தங்களுடைய ஜீவ வியக்தியையும் அந்தந்த ஜீவன் கண்டுவருகிற ஜகத்தையும் மறந்துவிடுகின்றன. ஆனால் அவைகளைப் பொருள்படுத்தும் பிரக்ஞானம் அல்லது ஆத்ம சைதன்யம் மறைந்துபட்டுப் போவதில்லை. ஆத்ம சைதன்யம் யாண்டும் தன்னில் தான் திருப்தியடைந்த நிலையிலிருக்கிறது. எல்லா ஜீவர்களும் சுஷுப்தி அவஸ்தையில், அதாவது கனவற்ற உறக்கத்தில் அனுபவித்துவரும் ஆத்மதிருப்தியே ஸ்வாத்மாராமா என்பதற்கு எடுத்துக்காட்டாகிறது. ஜீவகோடிகளனைத்துக்கும் இது உண்மை. ஜீவகோடிகளின் தொகையாக இருக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவனுக்கும் இது உண்மை. அந்தப் பிரம்மதேவனுக்கு மூலப்பொருளாயிருக்கும் பரவஸ்துவுக்கும் இது உண்மை. இப்பரவஸ்துவே அன்னை பராசக்தியாகவும், பரமசிவமாகவும், மஹாவிஷ்ணுவாகவும், பரப்பிரம்மமாகவும் அமைந்திருக்கிறது. ஸ்வாத்மாராமா—தன்னில் தான் திருப்தியடைந்த நிலை இத்தனை படித்தரங்களில் உள்ள இத்தனை ஜீவர்களுக்கும் அவை யாவுக்கும் மூலப்பொருளாயுள்ள பரவஸ்துவுக்கும் பொருத்தமானதாம். ஆக இந்த நாமமும் தியானத்துக்குரியதாம்.

879. सुधा सृतिः ஸுதா ஸ்ருதி:— அமிர்ததாரையின் வடிவெடுத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிறவியிலிருந்தே நைஷ்டிக பிரம்மச்சாரியாக இருக்கின்ற ஒருவன் முறையாகப்பிரம்மச்சரிய விரதம் காக்கின்றபொழுது அவனுடைய சரீரத்தில் மூலாதாரத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் குண்டலினி சக்தி நன்கு போஷிக்கப் பெறுகிறது. பதினன்கு வருஷங்களுக்குமேல் அங்ஙனம் உருவாக்கப்பெற்ற குண்டலினி சக்தி ஆத்ம போதம் பெற்று எழுந்திருக்கிறது. அத்தகைய சக்தி மானுட சரீரத்தில் அமைந்துள்ள ஏனைய ஆதாரங்களாகிய சுவாதிஷ்டானம், மணிப்பூரம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆதாரங்களைத் தாண்டி உச்சந்தலையிலிருக்கும் சஹஸ்ராரம் என்னும் ஏழாவது ஞானபூமியை எட்டுகிறது. சந்திர மண்டலமாகிய அந்த ஞானபூமியைக் குண்டலினிசக்தி சென்றடைகிறபொழுது அங்கிருந்து அமிர்ததாரை வடிகிறது. அது பரமானந்தத்தை ஊட்டுகிறது. அதில் ஒரு துளியளவாவது ரசிக்கிற யோகி நெடுங்காலம் சரீரம் அழிந்துபட்டுப்போகாது சமாதி நிலையில் இருக்கிறான். அத்தகைய பரமானந்தபெருவெள்ளமாயிருக்கிறாள் அன்னை பராசக்தி என்பது இந்த நாமத்தின் உட்கருத்து. இது அத்யாத்ம தத்துவம் ஆகிறது.

இனி ஆதி பௌதிகத் தத்துவத்துக்கும் இந்த நாமம் பொருந்துகிறது. பிரபஞ்சம் முழுதுக்கும் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் கொடுத்துச் சூரியன் அதைப் போஷித்து வருகிறது. அத்தகைய போஷணைக்கு உறுதிப்பாட்டையும், இனிமையையும் வழங்க வல்லதாயிருக்கிறது சந்திர வெளிச்சம். சூரிய வெளிச்சம் பகலெல்லாம் பூமியில் படிவது போன்று

சந்திர வெளிச்சம் இரவெல்லாம் மிளிர்வ தில்லை. சுக்லபக்ஷம், கிருஷ்ண பக்ஷம் ஆகிய இரு பக்ஷங்களிலும் சேர்ந்து ஒரு மாதத்தில் பதினைந்து இரவுகளுக்கு மட்டும் பூர்த்தியா கச் சந்திரன் பூவுலகுக்குப் பயன்படுகிறது. அப்படியிருந்தும் அது வழங்குகின்ற இனிமை யும், சுவையும் உலகுக்கு நன்கு பயன்பட்டு வருகின்றன. அத்தகைய இரவில் பொழியும் ரசமாகவும் அன்னை பராசக்தி இலங்கி வரு கிருள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

880 संसार पङ्कनिर्मग्न समुद्धरण पण्डिता ஸம் ஸார பங்க நிர்மக்நஸமுத்தரண பண்டிதா —ஸம்ஸாரமாகிற சேற்றில் முழுகியிருப்பவனை உய்விப்பதில் ஸாமர்த்தியமுடையவள்.

ஸம்சார சாகரம் என்பது பிறவிப் பெருங் கடல். முடிவில்லாத பாங்கில் பிறப்பும் இறப் பும் உயிர்வகைகளுக்கு ஓயாது வந்தமைந்து கொண்டே இருக்கின்றன. அங்ஙனம் அமை கிற பிறப்பில் மகிழ்வடைவதும், இறப்பில் துயர் உறுவதும் உயிர்களின் போக்கு. பிறப் பில் பற்று வைத்திருப்பதால் உயிர்வகை கள் இறப்பைத் தவிர்க்கமுடியாது. பகலைத் தொடர்ந்து இரவு வருவது போன்று பிறவி யைத் தொடர்ந்து மரணம் வருகிறது. பிறவி யில் பிரயோஜனம் ஒன்று உண்டு. பிரபஞ் சத்தைப் பயன்படுத்துகிற உயிர்கள் பிறவி தோறும் தங்களைச் செப்பனிட்டுக்கொள்ளுகின் றன. அதன் விளைவாகச் சிற்றுயிர்கள் பேருயிர் களாகப் பரிணமிக்கின்றன. பரிணமத்தின் உச்ச நிலை மானுட அமைப்பில் அடையப்பெறுகிறது. விவேகத்தோடு கூடியது மானுடப்பிறவி. பல பிறவிகளின் வாயிலாக மனிதனுகப் பிறந்திருக் கும் ஜீவாத்மன் உண்மை ஒன்றை இறுதியில் அறிய வருகிறுன். இவ்வையகம் தனக்கு வழங்கி வருகிற இன்பத்துக்கு ஏற்றவளவு துன்பமாக மாறுகிறது. துன்பம் கலவாத இன்பம் இம்மையில் இல்லை. இவ்வுண்மையை அறிந்துகொள்ளுதற்கேற்ப வையக வாழ்வில் வைத்துள்ள பற்றுதல் நீங்குகிறது. பற்றுதல் அடியோடு அகலுமிடத்துப் பரநாட்டம் தானுக வருகிறது. பரநாட்டத்துக்கு அருள்தாகம் என்பது மற்றெரு பெயர். இவ்வையக வாழ்வு வேண்டாமென்று அன்னை பராசக்தியிடம் கதறிப்பதறி அழுது முறையிடுகிற ஜீவாத்மாக் களை அவள் சம்சார சாகரத்தினின்று மீட் டெடுத்து முக்தியாம் கரைசேர்க்கின்ருள். இக் கோட்பாட்டை அனுசரித்தே 'வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்று மாணிக்கவாசகர் மொழிகின்ருர். இப்பிரபஞ்ச வாழ்வு வேண்டாம். அன்னை பராசக்தியின் சாந்நித்தியமே வேண்டும் என்று பரிந்து விண் ணப்பிக்கின்றவர்கள் பாக்கியவான்கள். பிற விப் பெருங்கடலின் பெரும்பகுதியை அன்ன வர்கள் கடந்தவர்களாகிருர்கள். பிறப்பு இறப் பில் அவர்கள் பூண்டுள்ள பற்றின்மையே அதற்குச் சான்ருகிறது. அத்தகைய ஜிக்ஞாசு வினுடைய, அதாவது முக்தியை நாடுகிறவனு டைய பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து அன்னை பராசக்தி அவனை உய்விக்கின் ருள். ஜீவர்களனைவரும் காலாந்தரத்தில் இத் தகைய விடுதலை வேட்கையைப் பெறுவது திண்ணம்.

881. यज्ञप्रिया யக்ஞப்ரியா — யக்ஞம் பண்ணுகிறவர்களிடத்து அன்பு வைக்கின்ற வள் என்பது இந்தநாமத்தின் பொருள்.

மேலே பகர்ந்துள்ள சம்சார சாகரத்தில் பற்று நீங்கப்பெறுபவர் அன்னை பராசக்தியை நாடி அழுதால் மட்டும் போதாது. பிரபஞ்சப் பற்று நீங்கியதற்கு அறிகுறியாக ஆத்மசாத கன் யக்ஞமூர்த்தியாக மாறியமையவேண்டும். அப்படி மாறியமைவது மனபரிபாகத்தின் விளைவாம். மக்களுள் சுயநலம் படைத்துத் தனக்கென்றே வாழ்ந்திருப்பவன் கீழோன். தன்னுடைய ஆற்றல்களனைத்தையும் அன்னை பராசக்தியின் வழிபாட்டுக்கென்றே பயன் படுத்தித் தான் புரிகிற செயல்களையெல்லாம் அம்பிகையின் வழிபாட்டுக்கென்றும், ஆருயிர் களின் சேவைக்கென்றும் சமர்ப்பிப்பவன் யக்ஞ மூர்த்தியாகின்ருன். வாழ்நாளை வீணு ளாக்காது உலகுக்குப் பயன்படும் பணிவிடை களில் தன்னுடைய ஜீவிதத்தை யார் ஒருவன் இனிது பயன்படுத்துகிருனே அவனிடத்து அன்னை பராசக்தி பிரியம் வைக்கின்ருள். அப் படிப் பண்பாடடைந்துள்ள ஜீவாத்மனைப் பிறவிப் பெருங்கடலினின்று மீட்டெடுப்பதில் அருள் சுரந்த பாங்கில் அவள் கருத்தைச் செலுத்துகின்ருள் என்பது இந்த நாமத்தின் உட்பொருள்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (272) பேய், பிசாசுகளைப்பற்றிய நம்பிக்கை சின்னஞ்சிறு வயதிலேயே பிஞ்சு உள்ளங்களில் புகட்டப்படுவதால் அந்த நம்பிக்கை ஆழ்ந்து இடம் பெறுகிறது. உண்மையில் பேயும் இல்லை; பிசாசும் இல்லை. இதே பாங்கில் கடவுளைப்பற்றிய நம்பிக்கையும் பெற்றோர்களாலும், உற்றார் உறவினர்களாலும் சின்னஞ்சிறு வயதிலேயே சிறுவர்கள் உள்ளத்தில் ஊட்டப்படுவதால் இந்த நம்பிக்கை அசைக்க முடியாத பாங்கில் மக்கள் உள்ளத்தில் இடம் பெற்று இருக்கிறது. எப்படிப் பேய், பிசாசு இல்லையோ அப்படிக் கடவுள் என்னும் ஒரு வணக்கத்துக்குரிய பெரிய பேர்வழி இல்லை. இக்குருட்டு நம்பிக்கையைத் தொடர்ந்து விளக்கிக் காட்டி அகற்றுவது அறிஞர் கடமை— இங்ஙனம் நாஸ்திகர்கள் பகர்கிறார்கள். இக்கொள்கை சரிதானா?

பேய் என்பதும் பிசாசு என்பதும் வெறும் குருட்டு நம்பிக்கையே. அதைப்பற்றிய போதனை யாருக்குமே பண்ணலாகாது. நாள் ஏற ஏற உலகெங்கும் பேய் பிசாசைப்பற்றிய நம்பிக்கை குறைந்து வருகிறது. மக்களுக்கிடையில் இத்தகைய ஆதரவற்ற நம்பிக்கை அழிந்துபட்டுப்போவது முற்றிலும் அவசியம்.

ஆனால் ஆராய்ச்சி பண்ணிப் பார்ப்பதற்கு ஏற்பக் கடவுள் நம்பிக்கை உறுதிபெறும். ஏனென்றால் இது உண்மையை அடிப்படையாகக் கொண்டது. கடவுளுக்குப் பொருத்தமான விளக்கம் அனுபூதியில் அவரை அடையப் பெற்றவர்கள் பகர்ந்திருக்கிறார்கள். கடவுளைப் பற்றிய குருட்டு நம்பிக்கையும் மக்கள் உள்ளத்தில் புகுந்திருக்கிறது. அக்குருட்டு நம்பிக்கைகளை அறவே அகற்றுவது தலைசிறந்த சமுதாய சேவை ஆகும். ஆனால் கடவுள் தத்துவத்தை மட்டும் அசைக்கமுடியாது. கடவுளுக்கு மெய்ப்பொருள் என்பது மற்றொரு பெயர். மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும் மெய்யைப் பொய்யாக்க முடியாது. பொய்யை மெய்யாக்க முடியாது.

மெய்ம்மைக்கு ஆன்றோர் விளக்கம் கொடுத்திருக்கின்றனர். எது ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாது போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. மானுட உடல் ஒரு காலத்திலிருக்கிறது. இன்னொரு காலத்தில் மறைந்துபட்டுப்போகிறது. இது எல்லார்க்கும் வெளிப்படை. ஆதலால் மானுட உடல் தாற்காலிகமான உண்மை. நிரந்தரமான உண்மையன்று. மானுட சரீரத்தினுள் உயிர் இருக்கிறது. உயிரோடு கூடியுள்ள சரீரத்தை ஜீவாத்மா என்றும், உயிரற்ற சரீரத்தைச் சவம் என்றும் சொல்லுகிறோம். உடல் அழிந்துபட்டுப் போவதால் அவ்வுடலில் குடியிருக்கும் ஜீவாத்மன் அழிந்துபட்டுப் போவதில்லை என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் பொதுமக்கள் இதைக் குறித்து அறுதியிட்டு ஒன்றும் இயம்பமுடியாது. ஒவ்வொரு மனிதனும் தன்னை உடல் அல்லன், உண்மையில் ஆத்மா என்னும் கோட்பாட்டை அறிந்து கொள்ளும்படி மெய்ச்சமயம் புகட்டுகிறது, இந்த ஆத்மாவானது அறிவு சொரூபம். ஆனந்த சொரூபம் என்றும் மெய்ச்சமயம் சொல்லுகிறது. எந்த மனிதனாவது தான் அறிஞன் அல்லன், ஆத்ம சொரூபி அல்லன் என்று மறுப்பானா? உடல் எடுத்திருக்கும் ஜீவாத்மாக்களனைவரும் ஆத்ம சொரூபமே. உடல் சொரூபமன்று என்னும் உண்மையை மெய்ச்சமயம் தெளிவுறுத்துகிறது.

அறியும் பாங்குடைய ஜீவாத்மன் உள்ளத்தினுள்ளே மனச்சாட்சி என்னும் பேரறிவுப் பேரானந்தப் பெரியபொருள் உள்ளது. அதை ஆன்றோர்கள் 'யானேதும் அறியாது என் உள்ளத்தினுள் எழுந்தருளி நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்' என்று கடவுளைப்பற்றிய அடிப்படை விளக்கம் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். மனத்தினுள் குடிகொண்டிருக்கும் மெய்ப்பொருளை இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்று அனுபூதிமான் ஒருவர் இயம்பியுள்ளார். எந்த மனிதனாவது தன்னுடைய உள்ளத்தில் மனச்சாட்சி என்னும் தூய பொருள் இல்லையென்று துணிந்து சொல்வானா? திருட்டுத்தனமாகப் பக்கத்து வீட்டு மைதானத்தில் மேயப்போகும் கால்நடை

கூட அடிக்க அல்லது பிடிக்க வந்தால் சுவரைத் தாண்டி ஓடித் தப்பித்து விடுகிறது. ஆனால் அதே கால்நடை தனக்குச் சொந்தமான இடம் எது என்றும் தீனி எது என்றும் அறிகிறது. அதற்கேற்ற அளவு மனச்சாட்சி அதனிடத்து அமைந்திருக்கிறது.

மனிதன் சமய அனுஷ்டானத்தின் மூலமாகத் தன்னுடைய மனதைத் தெளிவுபடுத்துதற்கேற்ப அம்மனதினுள் மிளிரும் மெய்ப்பொருளை உள்ளபடி அறியவருகிறான். 'தன்னையறிந்தால் தலைவன்மீது பற்றல்லது பின்னையொரு பற்றுமுண்டோ' என்பது ஆன்றோர் வாக்கு. இவையாவும் குருட்டு நம்பிக்கையின் விளைவு ஆகா. மனிதன் சமய அனுஷ்டானத்தின் வாயிலாகத் தன்னைத் திருத்தியமைப்பதற்கேற்ப தான் உடல் அல்லன் என்றும், ஆத்ம சொருபம் என்றும், இந்த ஆத்மாவைப் பேணுகிற பேரறிவுப் பேரானந்தப் பெரியபொருள் ஒன்று பிரக்ஞானமயமாக உள்ளத்திலிருந்து கொண்டு ஒவ்வொரு ஜீவனையும் பண்படுத்திப் பல பிறவிகளில் மேல்நிலைக்குக் கொண்டு வருகிறது என்றும் அனுபூதியில் மனிதன் அறியவருகிறான். அப்பொழுதுதான் அவனுடைய ஐயங்கள் அகன்றுபட்டுப் போகின்றன. பழையன கழிதல், புதியன புகுதல் என்னும் கோட்பாட்டின்படி ஒவ்வொரு ஜீவாத்மனும் தகுதியற்றுப் போன தன்னுடைய சரீரத்தைத் தகுதியற்ற உடையெனக் கருதி அகற்றவும் பிறப்பின் வாயிலாகப் புதிய சரீரத்தைப் பெறவும் செய்கிறான். பிறந்த குழந்தையொன்று காலி மனதோடு உலகத்துக்கு வருவதில்லை. பூர்வஜன்மத்தில் பெற்ற அனுபவங்களைப் புதிய பிறவியில் பாங்கின் மூலமாக விளக்குகிறது. ஆத்மா அழிவற்றது. உடலுக்குத்தான் மரணம் என்னும் அழிவும் ஜனனம் என்னும் புதுமையும் அமைகின்றன என்பது உண்மை. முறையாக ஆராய்ச்சி பண்ணினால் இது தெளிவாகும்.

ஆகவே சமயக் கோட்பாடுகளும் அனுபவங்களும் குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவைகள் அல்ல.

'மனத்துக்கண் மாசு இலன்ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற.'

என்பது கோட்பாடு. இந்த மலம் நீங்கினால் ஆத்மாவாகிய தன்னைப்பற்றிய உண்மையும், தன் தலைவனைப்பற்றிய உண்மையும் விளங்குகின்றன. ஆக இவ்வுண்மையை அறிந்துகொள்ளுவதற்கு ஒவ்வொரு மனிதனும் ஆத்மசாதனங்கள் வாயிலாகத் தன்னைத் திருத்தியமைக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

கேள்வி: (273) ஜபத்திற்கும், அர்ச்சனைக்கும் உள்ள வேறுபாடு யாது?

ஆத்மசாதனங்களனைத்தும் மனதை அடக்குதற்கும், ஒருமுகப்படுத்துதற்கும் அமைந்தவைகளாம். மனதோ அலைந்து திரியும் பாங்குடையது. ஒரே பொருளில் அல்லது கருத்தில் அது நெடுநேரம் நிலைத்திருப்பதில்லை. அத்தகைய மனதை அடக்கிப் பழகுதற்கு அர்ச்சனையில் ஆரம்பித்துப் பிறகு ஜபத்துக்கு வரவேண்டும்.

கண்காட்சி ஒன்றைப் பார்க்கச் செல்லுகின்றவர்களுக்கிடையில் குறிக்கோள் ஏதுமில்லாதவர்கள் எல்லாப் பகுதிகளையும் கொஞ்சம் பார்த்து மகிழ்வார்கள். அதற்கு நிகர் அர்ச்சனை. ஏதேனும் ஒரு துறையில் ஆழ்ந்து ஈடுபடுகிறவன் தனக்குப் பயன்படுகிற அத்துறையையொட்டிக் காட்டப்படுகிற கண்காட்சியில் மட்டும் தன் பூரணக் கருத்தைச் செலுத்துவான். அதற்கு நிகரானது ஜபம்.

வழிபடுகிற தெய்வங்களுக்கு நாமங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொரு நாமத்தையும் தனித்தனியே சொல்லி கூடியவரையில் அந்த நாமத்தின் கருத்தை உணர்ந்து மலர் தூவுவது தலைசிறந்த அர்ச்சனையாகும். உதாரணமாக ஓம் சிவாய நம: ஓம் மஹா தேவாய நம: ஓம் சங்கராய நம: ஓம் உமா பதயே நம: இங்ஙனம் நிதானமாக நாமத்தைச் சொல்லி ஒவ்வொரு நாமத்தின் உட்கருத்தை உணர்வது அர்ச்சனையாகிறது. வழிபாடுகளுள் இது மிகச் சுலபமானது. அலைந்து திரிகிற மனதுக்கு ஒரே தெய்வத்தின் பல பாங்குகளை எடுத்து ஓதிக் கொண்டு போவதால் அம்மனதின் அலைச்சல் வழிபடு தெய்வத்தோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது.

இனி ஜபமோ ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய என்று ஒரே நாமத்தை மனதிற்குள் அமைதியாக ஓதிக்கொண்டு இருப்பதாம். இத்தகைய ஜபம் தலைத்தரமானது. அர்ச்சனை அதற்கடுத்தபடியாக வந்தமைகிறது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

11. பீச்சாங்குழலை இயக்கும் பிஸ்டனும் உடலை இயக்கும் ஈசனும்

இருபுறமும் திறந்த ஒரு கண்ணடிக்குழாயைத் தண்ணீரில் வைத்துக் காற்றை உறிஞ்சினல் குழாயில் தண்ணீர் ஏறுகிறது. ஏன்? உட்காற்றின் அழுத்தும் சக்தி உறிஞ்சுவதால் குறைந்து விடுகிறது. அப்போது வெளிக்காற்று தண்ணீரைக் கீழ்நோக்கி அழுத்துகிறது. ஆகவே குழாயில் தண்ணீர் ஏறுகிறது. உறிஞ்சும் பம்பு, மேலேற்றும் பம்பு, வடிகுழாய் முதலியன காற்றழுத்தத்தால் வேலை செய்யும் சில கருவிகளாம்.

காற்றழுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட கருவிகளில் உறிஞ்சும் பம்பு [Common (or) Suction pump] ஒன்று ஆகும். கிணறுகளில் இருந்தும், பூமியின் கீழ் உள்ள தண்ணீர் ஊற்றுக்களில் இருந்தும் தண்ணீரைத் தரைமட்டத்துக்குக் கொண்டுவர இம்மாதிரி பம்புகளை உபயோகிக்கிறோம்.

ஒரு நீளமான குழாயின் ஒருமுனையைத் தண்ணீரில் வைத்து மேல்முனை வழியாகக் காற்றை உறிஞ்சினல் குழாயில் தண்ணீர் ஏறுகிறது. குழாயில் காற்று நீக்கப்பட்டதும் வெளிக்காற்று தண்ணீரைமேலே ஏறச்செய்கிறது. இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் பீச்சாங்குழல் [Syringe] என்னும் கருவி ஆகும். பீச்சாங்குழல் ஓர் உருளை வடிவமான குழாய். அதன் முனை குறுகியுள்ளது. அகன்ற வாய் ஒரு துவாரமுள்ள அடைப்பானல் மூடப்பட்டிருக்கிறது. அத்துவாரத்தின் வழியாக மேலும் கீழும் நகரக்கூடிய பிஸ்டன் செல்லுகிறது. பிஸ்டனை நகர்த்துவதற்குக் கைப்பிடி உண்டு. பீச்சாங்குழலின் குறுகிய முனையைத் தண்ணீரில் வைத்துப் பிஸ்டனை அடிவரையில் தள்ளிமெதுவாகப் பிஸ்டனை மேலேதூக்கினல் குழலில் தண்ணீர் ஏறுகிறது. பீச்சாங்குழலைத் தண்ணீரைவிட்டு வெளியே எடுத்தால் குழாயிலுள்ள தண்ணீர் வெளியே வழிந்தோடுவதில்லை. இப்போது பிஸ்டனைக் கீழ்நோக்கி அமுக்கினல் பீச்சாங்குழலின் குறுகிய வாயிலிருந்து தண்ணீர் வேகமாகப் பீச்சப்படுகிறது. தண்ணீர் இவ்வாறு பீச்சப்படுவதால்தான் இக்கருவிக்குப் பீச்சாங்குழல் என்று பெயர் வந்தது. ஊசி மூலம் மருந்து செலுத்துவதற்கும்,காதிலுள்ள அழுக்குகளை அகற்றுவதற்கும் பீச்சாங்குழலை உபயோகிக்கிறோம். தண்ணீர் தேங்கும் இடங்களில் கொசு விருத்தியாகாமல் இருப்பதற்காக மருந்துகளைப் பெரிய பீச்சாங்குழல்களின் மூலம் பீச்சுகிறார்கள். மை நிரப்பும் குழல் [Ink Filler] தானே மை நிரப்பிக்கொள்ளும் ஊற்றுப்பேனு, முதலியவை பீச்சாங்குழலின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவையே.

நம் உடல் பீச்சாங்குழலைப் போன்றது. அதிலுள்ள பிஸ்டன் ஈசனுக்கு நிகராகும். பிஸ்டன் குழலில் ஒட்டாது இருப்பதுபோன்று இறைவன் நம் உடலில் ஒட்டாமல் இருக்கிறார். நீரைத் தள்ளிக்கொடுக்கப் பிஸ்டன் உதவுவது போன்று உயிர் மேம்பாட்டிற்கான காரியங்களைச் செய்ய ஈசன் உதவுகிறார். எவ்வாறு தீயானது பாத்திரத்திலிருக்கும் நீரை ஆவியாக்க வல்லதோ அப்படி இறைவன் நம் உடலில் உறைந்துள்ள உயிரை மேல்நிலைக்குக் கொண்டு வருகிறார். உடலில் ஈசன் இருந்து உயிரை இயக்கிவரும் உண்மையைப் பீச்சாங்குழல் தத்துவம் விளக்குகிறது. பீச்சாங்குழலில் நிகழும் செயலை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தெரிந்ததை வைத்துக்கொண்டுதான் தெரியாததை விளக்கவேண்டும். எனவே பீச்சாங்குழலின் தத்துவத்தை உபமானமாகக் காட்டி உடலில் ஈசன் இருந்து உயிரை இயக்கி வரும் தத்துவத்தைத் தெளிவாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்கி இருக்கிறார். ஆக உயிர் மேம்பாடு அடைய உடலினுள் ஒட்டாமல் விளங்கும் உமாமகேஸ்வரனின் அருள் தேவை.

"உடலில் ஈசன் எப்படி இருக்கிறார்?

பீச்சாங்குழலில் தண்ணீரைத் தள்ளிக்கொடுப்பதற்குத் தண்டு இருப்பது போன்று அவர் உடலில் இருக்கிறார். தண்டு குழலில் இருக்கிறது எனினும் அது குழலில் ஒட்டாது இருக்கிறது. ஈசன் உடலில் இருக்கிறார் எனினும் உடலில் அவர் ஒட்டுவதில்லை."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

அம்மானை என்பது பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களில் ஒன்று. பெண்கள் மூவர் அமர்ந்து விளையாடுவார்கள். வட்ட வடிவில் தரையிலே அமர்ந்துகொண்டு, கூழாங்கல் போன்ற உருண்டையான காய்களை மேலே எறிந்து கையினால் பிடித்து விளையாடுவார்கள்.

அவ்வாறு விளையாடும்போது, மூன்று பெண்களில் முதல் பெண் ஒரு செய்தியைச் சொல்லுவாள். இரண்டாவது பெண், அச்செய்தியை ஒட்டி ஒருகேள்வி கேட்பாள். மூன்ருவதுபெண், அக்கேள்விக்குத் தக்க பதில்கூறுவாள்.

இம்முறையில் அம்மானை என்னும் விளையாட்டு நடைபெறும். பெண்கள் வீட்டுக்குள் இருந்து விளையாடும் விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று. அப்படி விளையாடும் போது, பயனுள்ள சிந்தனைகளை மனத்திலே நினைக்க வேண்டும்; நல்ல முறையில் பொழுதைக் கழிக்க வேண்டும்; விளையாட்டையும் நற்பயனுடையதாகச் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன், கடவுள் சம்பந்தமுடைய அம்மானைப் பாடல்கள் பாடப்பட்டன.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய மதுரைக் கலம்பகம் நூலில் உள்ள பதினெட்டு உறுப்புக்களில் "அம்மானை" என்பதும் ஒன்று. அந்த அம்மானைப் பாடல் மூலம் குமரகுருபரர் சில செய்திகளைக் கூறுகின்ருர்:

" இருவருக்கும் காண்பரிய ஈசர்மது ரேசஞர்
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர்காண்
[அம்மானை
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனரே ஆமாகில்
அருமை உடம்பு ஒன்றுஇரு கூறுஆவதேன்
[அம்மானை
ஆனாலும் காயம்இலை ஐயர் அவர்க்கு அம்மானை "

மதுரையில் எழுந்தருளியிருப்பவர் சுந்தரேசர் ஆவார். திருமாலாகிய விஷ்ணு, நான்முகனுகிய பிரம்மன் ஆகிய இரு மூர்த்திகளும் பிரயத்தனம் செய்து தேடியும் காணமுடியாத ஒரு மூர்த்தியாகத் திகழ்பவர் சிவபெருமான் என்கிருர் குமரகுருபரர். அவ் ஈசனர் மதுரையம்பதிக்குத் தலைவராக எழுந்தருளியுள்ளார்.

அம்மானைப் பாடலின் இலக்கணப்படி, முதல் பெண் ஒரு செய்தியைச் சொல்லவேண்டும் அல்லவா !

"மதுரேசர் வீரப் பிரதாபத்தின் மூலம், வெற்றி பெறுவதாக எடுத்துச் சொல்லி, குருவுக்கு எதிராகத் துரோகம் செய்த சிஷ்யனுடைய உடம்பை இரண்டு கூருக்கித் தண்டனை கொடுத்து வெற்றி பெற்ருர்'' என முதல் பெண் ஒரு செய்தியைக் கூறுகிருள்.

குமரகுருபரர் பாடியது மதுரைக் கலம்பகம். மதுரைக் கலம்பகத்தில், மதுரையில் நிகழ்ந்த் புராண சம்பந்தமான நிகழ்ச்சிகள் தெய்வ சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஆகியவற்றை எடுத்து விளக்குகிருர் குமரகுருபரர்.

சிவபெருமானுக்குப் பகவன் என்னும் பெயரைத் திருவிளையாடற்புராண ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். ஐசுவர்யம், புகழ், திரு, ஞானம், வைராக்யம் வீரியம், என்னும் ஆறு குணங்களை உடையவன் பகவன் என விளக்கம் சொல்லுகிருர்கள். ஞானம், வைராக்யம், வீரியம் ஆகிய மூன்றும் பரலோகத்துக்குரியவை. ஐசுவர்யம், புகழ், திரு ஆகியவை மூன்றும் இகலோகத்துக்கு உரியவை. பகவானுகிய சிவபிரான் மதுரையம்பதியிலேயே செய்த அறுபத்துநான்கு திருவிளையாடல்களில் ஒன்ருகிய அங்கம் வெட்டிய திருவிளையாடலை இங்கே குமரகுருபரர் எடுத்து இயம்புகின்ருர்.

மதுரையைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களிலே ஒருவன் குலோத்துங்க பாண்டியன். அம்மன்னன் ஆட்சிபுரிந்து வரும் போது வடநாட்டிலிருந்து வாள் வித்தை கற்றுக் கொடுப்பதற்காக ஆசிரியர் ஒருவர் மதுரைக்கு வந்தார். மதுரையில் பலருக்கு வாள்பயிற்சி கொடுத்து வந்தார். அத்துடன் அவர் மிகச் சிறந்த சிவனடியாராகவும் விளங்கினர். வயதில் முதியவரான அவ் அடியவர் திருநீறு பூசும் மேனியை உடையவராய், சிவ சிந்தனையோடு வெள்ளியம்பலம் சென்று, ஆங்கே எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளை நாள்தோறும் வழிபட்டு வந்தார்.

அம் முதியவரிடத்து வாள்பயிற்சி பெற்று வருபவருள் சித்தன் என்பவன் ஒருவன். அவன்

தன்னுடைய நல்ல ஊழ்வலியால் வாள் பயிற்சியினைச் சிறப்புறக் கற்றுத் தேர்ந்தான். நன்கு கல்வி கற்ற வித்தை உடையவர்களிடத்தில் செருக்கு இருப்பது கூடாது. ஆனல் ஒரு சிலரிடத்தில் இத்தகைய செருக்கு இருப்பதும் உண்டு. முக்குண வசத்தால் முறை பிறழ்வது மானிட இயல்பு. முக்குணவசத்துக்கு உட்பட்டுச் சித்தனும் இறுமாப்பு உடையவன் ஆனன்.

தன் ஆசிரியருக்கு எதிராக ஒரு சிலம்பக் கூடத்தை ஏற்படுத்தினன். தன் ஆசிரியரிடம் வாள்வித்தை கற்றுவந்த பலரையும் தன் சிலம்பக் கூடத்துக்கு வருமாறு தன் ஆசிரியருக்கு எதிராக வேலே செய்தான். தன் ஆசிரியரைக் காட்டிலும் மிகுந்த வருவாய் ஈட்டினன். அவருக்கு விரோதமான செயல்களிலேயே எப்போதும் ஈடுபட்டு வரலானன். அத்துடன் மற்ருெரு இழிசெயலேயும் செய்தான். கொலே, களவு, கள், காமம் என நான்கு பாதகங்களே வரிசையாகச் சொல்லுவார்கள். அந்த நான்காம் பாதகத்தைத் தன் குருவின் மனைவியிடத்துச் செய்யுமளவுக்கு நடந்துகொண்டான்.

சித்தன் செய்த மாபாதகச் செயலே எல்லாவற்றையும் உணரக்கூடிய வல்லவரான எம் பெருமான் சோமசுந்தரக் கடவுள் உணர்ந்து கொண்டார். தம்முடைய இளம்பிறை, திரிநேத்ரம், நான்கு திருத்தோள்கள், நஞ்சுபொருந்திய திருமிடறு ஆகியவற்றை மறைத்துக் கொண்டார். நீசன் சித்தன் செய்த கொடுஞ் செயலுக்குத் தண்டனை கொடுக்கத் திருவுள்ளம் கொண்டு, வல்லமை மிக்க வாள் ஆசிரியரைப் போலச் சித்தனுடன் போர்புரிந்தார். இருபது நாழிகைவரை போர்புரிந்து, குருவின் பத்தினியை விரும்பிய உள்ளத்தையும், அம் மனையாட்டியைக் குறித்துப் பேசிய நாக்கையும், அப்பெண்மணியைப் பற்றி இழுத்த கரங்களையும், தவருக உற்று நோக்கிய கண்களையும் ஒவ்வொரு அங்கமாக வெட்டி, இறுதியில் தலேயையும் துண்டித்துத் தள்ளி மறைந்தருளினர்.

நித்தியப்பொருள்களையும், அநித்தியப் பொருள்களையும் நன்கு உணரவேண்டும். அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் அறவே ஒழிக்கவேண்டும். அந்தக் கரணங்கள் எல்லாம் ஒருவழிப்பட்டே செல்ல, ஐம்புலன்கள் ஈர்க்கும் நெறியல்லா நெறிகளினின்றும் நீங்கவேண்டும். திருவருள் வழியே சென்று போதமாகிய தன்னுடைய வலிமையை மறைத்து நிற்கும் ஆணவ மலத்தின் வலிமை கழன்று நீங்கப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வதே மானிட வாழ்வின் சீரிய குறிக்கோளாகும். மானிட வாழ்வின் லட்சியத்துக்குப் புறம்பாகப் போன ஒருவனுக்குத் தண்டனை கிடைத்ததை இங்கே அறிகிறோம்.

இந்தப் புராணக் கதையைக் குமரகுருபரர் நினைவில் கொண்டு, "விருது கட்டி அங்கம் வெட்டி வென்றனர்" என்று முதல் பெண் ஒரு செய்தியைக் கூறுவது போலக் கூறினர்.

"சித்தனுடைய அங்கத்தை இரண்டு கூறு ஆக்கிச் சிவபெருமான் வென்ருர் என்று சொன்னயல்லவா! அப்படியானல், சிவபெருமானுடையஉடம்பு இரு கூருக இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று இரண்டாவது பெண் ஒருகேள்வியைக் கேட்டாள்.

பார்வதி தேவியை இடப்பாகத்திலே கொண்டு, பாகம் பெண் உரு ஆகி, பாகம் பிரியான் ஆகிச் சிவபெருமான் இலங்குவதை இவ்வாறு குறிப்பிட்டாள்.

"ஆனலும் காயம் இலே ஐயர் அவர்க்கு"— இது மூன்ருவது பெண்ணின் பதில். அப்படியே அவருக்கு உடம்பு இரு கூருக இருந்தாலும் காயம் என்பது கிடையாது. அவருக்கு வெட்டுக்காயத்தினல் ஏற்பட்ட தழும்பு எதுவும் கிடையாது என்று சொல்லுகிருள்.

காயம் என்ருல் உடம்பு. இறைவனுக்கு உடம்பு ஏது? வடிவம் ஏது? இல்லேயல்லவா! ஆண் பெண் கூருக இருந்தாலும், அவருக்கு எவ்வித உடம்பு வடிவும் கிடையாது என்னும் இன்னெரு பொருளும் அமைந்துள்ளது.

கலம்பக நூலின் பல உறுப்புக்களில் ஒன்ருக வருவது "மடக்கு" என்னும் உறுப்பு ஆகும். இந்த உறுப்பு அமைந்த செய்யுளில் முதலில் வந்த சொற்றொடர் திரும்பவும் வந்து வேறுபொருளைத் தரும். இம்முறையில் "மடக்கு" என்னும் உறுப்பு அமைந்த செய்யுளைக் குமரகுருபரர் பாடியுள்ளார்.

"தொடுத்து அணிந்ததும் அம்புத ரங்கமே
சுமந்தி ருந்ததும் அம்புத ரங்கமே
எடுத்து நின்றது மாயவ ராகமே
எயிறு இறுத்தது மாயவ ராகமே

அடுப்பது அந்தணர் பன்னக ராசியே
அணிவ தும்சில பன்னக ராசியே
கொடுப்பது ஐயர் கடம்பவ னத்தையே
கொள்வது ஐயர் கடம்பவ னத்தையே."

"அம்புத ரங்கமே", "மாயவ ராகமே" "பன்னக ராசியே", "கடம்ப வனத்தையே" என்னும் சொற்றொடர்கள் திரும்பவும் வந்து வேறு வேறு பொருளைத் தருகின்றன.

"தொடுத்தணிந்ததும் அம்புதரங்கமே" சிவபெருமான் மாலையாகத் தொடுத்து அணிந்து கொண்டது அம்புதர் அங்கமே. அம்புதர் என்றால் தேவர்கள். அங்கம் என்றால் உறுப்பு. தேவர்களின் தலைகளாகிய உறுப்புக்களை மாலையாகத் தொடுத்துச் சிவபெருமான் மாலையாக அணிந்து கொண்டுள்ளார்.

"சுமந்திருந்ததும் அம்பு தரங்கமே—சிவபெருமான் தலையிலே சுமந்திருந்தது அலைகளை உடைய கங்கை ஆற்றையாகும்.

"அம்பு தரங்கம்" என்னும் தொடர், "அம்புதர் அங்கம்", "அம்பு தரங்கம்" என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு பொருள்களைக் கொடுத்தது.

"எடுத்து நின்றது மாயவராகமே" —சிவபெருமான் தம்முடைய உடம்பில் ஒரு பாகமாகக்கொண்டது திருமாலின் உடம்பையே ஆகும். "மாயவர் ஆகம்"— மாயவர்—திருமால், ஆகம்—உடம்பு.

திருமாலையே தம்முடைய உடம்பில் ஒரு பாகமாகக்கொண்டவர் சிவபெருமான். சைவ வைணவ பேதம் இன்றிச் சங்கர நாராயணராகச் சிவபெருமானை நாம் தரிசிக்கின்றோம்: இவ் இருமூர்த்திகளும் இணைந்த ஒருமூர்த்தியாகச்சங்கரன் கோவிலில் இறைவனை வழிபடுகின்றோம். சிவன், திருமால், பிரம்மன் ஆகிய மூன்று மூர்த்தங்களும் இணைந்த ஒரு திருமூர்த்தமாக, தாணுமாலய மூர்த்தியாகச் சுசீந்தரத்தில் இறைவனை நாம் வழிபடுகின்றோம்.

"எயிறு இறுத்தது மாயவராகமே"—எயிறு-பல். வராகம்-பன்றி. மாய வடிவம்கொண்டு சிவனை எதிர்க்க வந்த பன்றியின் கோரைப் பற்களைச் சிவபிரான் முறித்தார்.

"மாயவராகமே" என்னும் சொற்றொடர், "மாயவர் ஆகம்" "மாய வராகம்" என இரண்டுவிதமாகப் பிரிக்கப்பட்டு, இரண்டு பொருள்படும்படியாக அமைந்தது.

"அடுப்பது அந்தணர் பன்னக ராசியே" —சிவபிரானுக்குப் பொருத்தமான வேத கோஷ வாழ்த்தொலிகள் அந்தணர் வாழ்கின்ற பல நகர்களிலிருந்தும் வந்து சேருகின்றன.

"பன்னகராசியே" —பல் நகர் ஆசி—அந்தணர்கள் வசிக்கின்ற பல நகரங்களில் இருந்து வேத விற்பன்னர்கள் முழக்குகின்ற வேத கோஷ மந்திரங்கள் சிவபிரானுக்கு வாழ்த்தொலிகளாக வந்து சேருகின்றன.

"அணிவதும் சில பன்னக ராசியே!"—சிவபெருமான் விரும்பி அணிந்துகொள்ளுவது நாகாபரணங்களாகும். பன்னகம்-பாம்பு; ராசி-கூட்டம்.

"பன்னக ராசியே" என்னும் சொற்றொடர்," "பன்னக ராசி", பல் நகர் ஆசி" என இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டு இரு பொருள் தருவதாக அமைந்துள்ளது.

"கொடுப்பது ஐயர் கடம்ப வனத்தையே"— "கொடுப்பது ஐயர்கள்தம் பவனத்தை"—சிவபெருமான் அவனுடைய அடியார்களுக்கு வழங்கி அருள் பாலிப்பது தேவர்கள் உலகத்தை.

அஷ்டாங்கம், பஞ்சாங்கம், திரிவிதாங்கம், துவிதாங்கம், ஏகாங்கம் ஆகிய நமஸ்காரங்களைச் செய்து கிருபா சமுத்திரமாகிய அரவப் புயங்கன் அம்பலக் கூத்தனை உள்ளன்புடன் வழிபடுபவர்கள் அரனடியார்கள்.

அத்தகைய அடியார்கள் சமஷ்டி மூர்த்தியாகிய மதுரைச் சுந்தரேசப்பெருமானைத் தரிசனம் செய்தால், ஏனைய தலங்களில் உள்ள வியஷ்டி மூர்த்திகளைத் தரிசித்தவர்கள் ஆவார்கள்.

சோலைபோன்று தொகையாக உள்ளது சமஷ்டி. தனிமரம் போன்று உள்ளது வியஷ்டி. வேருக்கு நீர் ஊற்றினல் போதும்: அந்த நீர் கிளைகளுக்கெல்லாம் சென்று பரவும். அது போன்று, மதுரை சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்தால் எல்லா மூர்த்தங்களையும் தரிசனம் செய்ததாகும். இது மதுரை ஸ்தல மகிமையாகும்.

இறையன்பு பின்னே இருந்து முன்னே தள்ளிச் செல்ல, இறைவனுடைய திருவருள் நோக்கு முன்னே நின்று இழுத்துச் செல்ல,

எலும்புகள் குழைந்து உருக, எம்பெருமான் திருமுன்னே நின்று வாக்கிய ரூபங்களான தோத்திரங்களைச் சொல்லி வழிபடுபவர்கள் அடியார்கள். உதாத்தம், அனுதாத்தம், சொரிதம் ஆகிய மூவகை சப்தங்கள் தழுவ வேத மந்திரங்களை உச்சரித்து வழிபடுகின்ற வர்கள் அன்பர்கள்.

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப ஆற்ருது அழுது அரற்றும் இவ் அன்பர்களுக்கு மதுரைச் சொக்கேசர் தேவருலகப் பெருவாழ்வு அருளுவார் என்பது குமரகுருபரர் திருவாக்கு.

"கொள்வது ஐயர் கடம்ப வனத்தையே"

— சிவபெருமான் எழுந்தருளி வீற்றிருப்பது கடம்பவனம் என்னும் இம்மதுரையே ஆகும்.

சிவபெருமான் பெரு விருப்பத்தோடு எழுந் தருளியுள்ள தலமாக இம்மதுரைத் தலம் விளங்குகிறது. அப்படியானல், கடம்பவனம் என்னும் மதுரைமாநகரின் புகழுக்கு அரிய பெருமைகள் யாவை?

சைவ க்ஷேத்திரங்கள் பல உள்ளன. அறுபத் தெட்டு தலங்கள் அவற்றுள் சிறந்தவை. அந்த அறுபத்தெட்டு தலங்களிலும், தெய் வாம்சம் பொருந்திய தலங்கள் பதினறு.

இப்பதினறு தலங்களிலும், காசி, சிதம்பரம், திருக்காளத்தி, திருவாலவாய் என்னும் மதுரை ஆகிய நான்கு தலங்களும் விசேஷ மகத்துவம் வாய்ந்தவை.

காசி நகரில் ஜீவித்திருந்து இறந்தால் மோட்சம் கிடைக்கும். சிதம்பரத்தைக் கண்ட மாத்திரத்தாலேயே மோட்சம் பெறலாம். திருக் காளத்தி தலத்தைப் பக்தியுடன் வழிபாடு செய்தால் மோட்சம் கிட்டும். ஆனல், திருவால வாய் என்னும் மதுரையம்பதியை, ஒருவர் செவியினல் கேட்ட மாத்திரத்திலேயே அவ ருக்கு மோட்சம்கிடைத்துவிடும். சிவபெருமான் இந்தத் தலத்தை முதன் முதலில் சிருஷ்டி செய்தபின்னரே எல்லாத் தலங்களையும் படைத்தார்.

காசி முதலிய சிவஸ்தலங்கள் மறு ஜன்மத் தில் இறவாத பேரின்பமாகிய மோட்சத்தை நல்கும். ஆனல், கடம்பவனம், தன்னிடத்தில் வாழ்வோர்க்கு ஜீவன் முக்தியைக் கொடுக்கும்.

மதுரையில் இன்றைக்கும் அஷ்டமியன்று சப்பரத்தில் சோமசுந்தரக் கடவுள் உலா வரு வதை அன்பர்கள் அறிவார்கள்.

மற்றைய சிவஸ்தலங்களில் ஆறு மாதகாலம் விரதம் மேற்கொண்டு பெறக்கூடிய பலன் களைக் கடம்பவனத்தில் ஒரே ஒரு சோமவார விரதம் கடைப்பிடித்துப் பெறலாம்.

ஒரு வருட காலம் உணவின்றி நோன்பிருந்து பெறக்கூடிய பலன்களை மதுரையில் சிவராத் திரி விரதம் இருந்து ஒரே நாளில் பெறலாம்.

சிவநகரம், கடம்பவனம், ஜீவன் முக்திபுரம், தடாதகைப் பிராட்டியார் கன்னியாக இருந்து அரசு நடத்திய காரணத்தால் கன்னிபுரம், திரு ஆலவாய், மதுரை, அழியாத ஞானம், சிவயோகம் இரண்டையும் வழங்குவதால் சிவலோகம், சிவஞானம் முதலான எல்லா வகை ஞானங்களையும் தருவதால் சமஷ்டி விச்சாபுரம், கூடல், சிவபக்தியைத் தருவதால் துவாத சாந்தத்தலம் என்னும் பல பெயர் கள் மதுரையம்பதிக்கு உண்டு. இப்பெருமை களைப் பரஞ்சோதிமுனிவர் இயம்புகின்ருர்.

இத்தகைய பெருமை மிக்க மதுரையம்பதி யாகிய கடம்பவனத்தைச் சொக்கநாதர் தம் இருப்பிடமாகத் தேர்ந்து எழுந்தருளியுள்ளார்.

மடக்கு என்னும் உறுப்பில் குமரகுருபரர் வாக்காக அமைந்த மற்றொரு செய்யுள்:

"அரங்கும் ஐயற்கு வெள்ளிய ரங்கமே
ஆலயம் பிற வெள்ளிய ரங்கமே
உரங்கொள் பல்கலன் என்பர வாமையே
உணர்வு ளூமையும் என்பர வாமையே
விரும்பு பாடலும் மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானம் தடமதில் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதில் கூடலே."

— "ஐயற்கு அரங்கும் வெள்ளி அரங்கமே" — தலைவராகிய சிவபெருமான் நடனமாடுவதற்கு ஏற்ற அரங்கம் மதுரையம்பதி திருக்கோவி லில் உள்ள வெள்ளி அம்பலமே ஆகும்.

நடராஜப் பெருமான் தலங்கள் தோறும் எழுந்தருளி நடனம் ஆடினுலும். ஐந்து தலங் களைப் பஞ்சசபை எனக் கூறுவார்கள்.

சிதம்பரம் - பொற்சபை. திருவாலங்காடு- இரத்தின சபை. மதுரை-இரசத (வெள்ளி) சபை. திருநெல்வேலி அருகிலுள்ள இராஜ வல்லிபுரம் என்னும் சிவத்தலம்-தாமிர சபை. திருக்குற்ருலம்-சித்திர சபை.

இந்தப் பஞ்ச சபைகளிலும் மதுரையம்பதியில் உள்ள வெள்ளியம்பலத்தை நடராஜப் பெருமான் நடனம் ஆடுவதற்குப் பெரு விருப்பமாக ஏற்றுக்கொண்டார். எல்லாத் தலங்களிலும் நடராஜப்பெருமான் வலக்காலை ஊன்றி இடக்காலை எடுத்து வீசி நடனம் ஆடுவார். ஆனால், வெள்ளியம்பலத்தில் மட்டும் இடக்காலை ஊன்றி, வலக்காலை எடுத்து வீசி நடனமாடுகின்றார்.

குற்றமும், பாவமும் நிறைந்தது பிறவி என்னும் கடல். இந்தப் பிறவியாகிய கடலின் எல்லையைக் காணும் சமயம் கிடைக்கப்பெற்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவருக்கும் இன்பத்தையும், மோட்சத்தையும் அனுக்கிரஹிப்பதற்காகவே சிவபெருமான் இந்த நடனத்தை ஆடுகின்றார்.

மதுரையை ஆட்சிபுரிந்து வந்த இராஜசேகரப்பாண்டிய மன்னன் பணிந்து இறைஞ்சி வேண்டிக் கொண்டதற்கு இணங்க ஆலவாய் அண்ணல் இவ்வாறு கால்மாறி நடனம் ஆடினார்.

ஹிந்துமதக் கடவுளர்களில் நடராஜப் பெருமானுக்குத் தனிச் சிறப்பு உண்டு. எப்போதும் தாண்டவம் புரிந்துகொண்டிருப்பது அவருடைய இயல்பு. உலகத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் இடையறாது ஆடிக்கொண்டே இருக்கின்றன. பொருள்களையெல்லாம் அணு அணுவாகச் சிதைத்துப் பகுத்துப் பார்க்கின்ற பொழுது அணுவுக்குள் அணுவாக இயங்கும் பரமாணுவும் சதா இயங்கிக்கொண்டே இருக்கிறது.

அணுவுக்குள் அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய்த் திகழும் அம்பலக்கூத்தன் ஆனந்தத் தாண்டவம் புரிவது உலக இயக்கத்திற்கு ஆதாரமாகத் திகழ்கிறது. அம்பலத்தில் ஆடுவது ஆனந்தத் தாண்டவம். எல்லாவற்றையும் அழித்துத் துடைத்து அவன் ஆடுகின்ற கூத்து ஊழிக் கூத்து. காளியுடன் அவன் ஆடிய நடனம் ஊர்த்துவத் தாண்டவம்.

தாண்டவம், நிருத்தம் இரண்டையும் நடனம் என்று பொதுவாகச் சொல்லுகிறோம். இந்த இரண்டையும் அகக் கூத்து என்று சொல்லுவார்கள்.

தாண்டவம், நிருத்தம் என்னும் இவ்விரண்டும் அல்லியம், கடையம், பேடு, மரக்கால், குடை, குடம், துடி, மல்லாடல், பாவை, பாண்டரங்கம், கொடுகொட்டி என்று பதினொரு வகைப்படும் என்று பரத சாஸ்திர நூல் கூறுகின்றது.

தன்னைக் கொல்லுவதற்குக் கம்சன் அனுப்பிய யானையின் கொம்பை முறித்துக் கண்ணன் ஆடிய ஆட்டம் அல்லியம். இந்திரன் மனைவி இந்திராணி வாணாசுரனுடைய வடக்கு வாசலில் ஆடிய நடனம் கடையம். இவ்வகை நடனத்தில் வல்லவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட ஊர்கள் கடையம், கடையநல்லூர் என்பன. காமனாகிய மன்மதன் மகனை வாணாசுரன் சிறையிலிட்ட சமயம் அவனை மீட்பதற்கு மன்மதன் பெண்வேடம் புனைந்து ஆடிய நடனம் பேடு. அரக்கர்கள் அனைவரும் போர் செய்ய இயலாமல், பாம்பு, தேள் முதலான வஞ்சக வடிவம் கொண்டு வரும்போது, உணர்ந்து கொண்ட துர்க்கா தேவி மரக்கால் கொண்டு ஆடிய ஆட்டம் மரக்கால். முருகப் பெருமான் அரக்கர்களைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்வதற்குக் குடையைச் சாய்த்து ஆடிய ஆட்டம் குடை. வாணாசுரன் அநிருத்தனைச் சிறையில் அடைத்த பொழுது திருமால் குடத்தின்மேல் நின்று ஆடிய ஆட்டம் குடம். சூரபத்மன் வேற்று வடிவம் தாங்கிச் சமுத்திரத்திலே நின்ற சமயம், அச்சமுத்திரத்தைக் கடப்பதற்குத் துடிகொட்டிக்கொண்டு ஆடியது துடி என்னும் நடனம். திருமால், வாணாசுரனை வெல்லுவதற்கு மல்லனாகச் சென்று ஆடிய நடனம் மல்லாடல். அசுரர்களைச் சண்டையிடாமல் செய்து மயக்கித் திருமால் ஆடிய ஆட்டம் மோகினி. திரிபுரசம்ஹார காலத்தில் சிவபெருமானுக்குத் தேரோட்டியாக இருந்த பிரம்மன், கலைகளின் பிரிவைத் தாங்காமல் வருத்தப்பட்டான். அவனுடைய வருத்தத்தைப் போக்குவதற்குச் சிவபெருமான் ஆடிய நடனம் பாண்டரங்கம். திரிபுரதகனம் செய்த பிறகு சிவபெருமான் உமையம்மை தாளம் இட மயானத்தில் கைகொட்டி ஆடிய நடனம் கொடுகொட்டி.

இவ்வாறு நடன வகைகளை நடன சாஸ்திர வல்லுநர்கள் கூறுகின்றார்கள். இவ்வகை நடனங்களுக்கெல்லாம் சபாபதியாகத் திகழ்பவன் நடன சபாபதி நடராஜப் பெருமான்.

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com.)

சீதையை மிரட்டிவிட்டு ஓய்கின்றான் இலங்கையர்கோன். இந்த மிரட்டல்களெல்லாம் உதட்டளவில்தாம் என்றும், இவ்வளவுதூரம் அவனை இழிவுபடுத்தியும்கூடச் சீதையின் மேல்கொண்ட காமம் ராவணனுக்குக் கொஞ்சமும் குறையவில்லை என்றும் கம்பன் தெரிவிக்கின்றான். சீதையை மிரட்டியதோடன்றிச் சுற்றிக் காவலிருந்த அரக்கியரையும் சீதையைத் தன்வசமாக்க வேண்டுமென்று எச்சரித்துச் சென்றான் ராவணன். இவ்வாறு ஆத்திரமடைந்த ராவணனைத் தானியமாலி சமாதானப்படுத்தி அசோகவனத்திலிருந்து அழைத்துச் சென்றதாக வான்மீகி முனிவர் கூறுவார். ஆனால் கம்பனில் ராவணன் தானாகவே பரிவாரங்களுடன் திரும்பிச் சென்றதாகவே காணப்படுகின்றது. ராவணன் அசோகவனத்திலிருந்து அகன்ற பின்னர்தான் அங்கு மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவைபற்றிய விவரங்களைக் காண்போம்.

VII. பொறையில் நின்றாள்

சீதையை மிரட்டிவிட்டு ராவணன் அசோகவனத்திலிருந்து சென்ற பின்னர், அரக்கியர்கள் சீதையை அவனுக்கு இணங்க வைக்கும் முயற்சியில் இறங்குகின்றார்கள். இவர்களுடைய கொடும் செயல்களாலும், ஏற்கனவே மனமுடைந்து போயிருந்ததாலும், சீதை தன்னையே அழித்துக்கொள்ள முடிவு செய்கின்றாள். அந்தச் சமயத்தில்தான் ராமதூதன் சீதையிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்கின்றான். இந்தக் காட்சிதான் சுந்தரகாண்டத்தின் மணிமுடியான நிகழ்ச்சி. ராமாயணத்தின் அழகான பகுதி சுந்தரகாண்டம் என்றால், அந்தச் சுந்தரகாண்டத்தினுள் அழகான பகுதி அனுமன் சீதையிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் காட்சிதான். ஆதிகவியான வான்மீகி முனிவரும், கவிச்சக்கரவர்த்தி கம்பனும் பக்தியில் தோய்ந்த துளசிதாசரும் அவரவர்க்குரிய முருகியல் சுவையுடன் [Aesthetic Taste] இந்தக் காட்சியைச் சித்திரித்துள்ளார்கள். ஒவ்வொரு கவிஞனின் படைப்பிலும் உன்னதமாக விளங்கும் இப்பகுதியை இப்போது காணலாம்.

1. செந்நாய்களுக்கிடையே ஒரு மான்

வான்மீகியின் காவியத்தில், சீதையைக் கொல்ல எழுந்த தசகண்டனைத் தானியமாலி அசோகவனத்தைவிட்டு அழைத்துச் சென்ற பின்னர் சீதையைச் சுற்றிக் காவல் இருந்த அரக்கியர் தம் கைவரிசையைக் காண்பித்தனர்.

"ராவணனுடைய பரம்பரையான புலஸ்திய வம்சப் பெருமைகளைச் சொல்லி, அவனுடைய தற்போதைய செல்வாக்கை விளக்கி, அவன் விருப்பத்திற்கு இசைந்தால் ஏழாயிரம் பெண்கள் பணி செய்ய இன்ப வாழ்க்கை வாழலாம்" என்றாள் ஓர் அரக்கி.

"மனிதன்மேல் கொண்ட காதல் போதும். தேவர்களும் தொழுதேத்தும் இலங்கேசுவரன் மீது உன் இதயத்தைத் திருப்பு. இல்லாவிடில் உன் பொன்மேனி எங்களுக்கு உணவு ஆகிவிடும்" என்றாள் இன்னொரு அரக்கி.

" சீதையின் மண்ணீரலும், தசையுடன்கூடிய தோள்களும், இருதயமும், குடல்களும், கழுத்தும் சுவையானவையாயிருக்கும். இவளை வெட்டிச் சமமாகப் பங்கிட்டு உண்போம். பின்னர் நிகும்பிலைக் கோவிலுக்குச் சென்று கூத்தாடுவோம்" என்றாள் வேறொரு அரக்கி.

தன்னுடைய இனத்தினின்றும் பிரிக்கப்பட்ட பெண்மான் ஒன்று செந்நாய்களால் துன்புறுத்தப்பட்டதுபோன்று துயரப்பட்ட சீதை, சிரமபரிகாரத்திற்காக மண்ணில் விழுந்து புரளும் குதிரையைப் போன்று தரையில் விழுந்து அழுதாள். தன்னைத் துன்புறுத்திய அரக்கியரைப் பார்த்துச் சொன்னாள் சீதை :

"பாவம் தரும் உங்களுடைய சொற்களுக்கு நான் செவிசாய்க்கமாட்டேன். என் உடலை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். என் கணவன் நாடில்லாமல் இருக்கலாம்; பரிவாரங்கள் இல்லாமல் இருக்கலாம்; காட்டில் கனி, கிழங்குகளை உண்டு வாழலாம். ஆனால் சூரியனிடமிருந்து ஒளியை எப்படிப் பிரிக்கமுடியாதோ அதுபோன்றே அவரிடமிருந்து என்னையும் உங்களால் பிரிக்கமுடியாது. இந்திரனுக்குச் சசி, வசிட்டருக்கு அருந்ததி, சந்திரனுக்கு

ரோஹிணி, அகஸ்தியருக்கு லோபாமுத்திரை, ச்யவனருக்கு சுகன்யை, சத்தியவானுக்குச் சாவித்திரி, கபிலருக்கு ஸ்ரீமதி, சௌதாசருக்கு மதயந்தி, சகரருக்குக் கேசினி, நளனுக்குத் தமயந்தி. அவ்வண்ணமே ராமருக்கு நான். கதிரவன் திசைமாறினலும், விண்மீன்கள் நிலைதிரிந்தாலும் என் மனம் மாறாது. உங்கள் முயற்சி வீண். சிறிது நேரம் என்னைத் தனியே விடுங்கள்."

அரக்கியரிடம் இவ்வாறு உறுதியுடன் பேசிய சிதை, அடுத்துத் தனக்குத்தானே பேசிக்கொள்ளும்போது மனமுடைந்து தன் எண்ணங்களை வெளியிடுகின்றாள்:—

"எனது விருப்பப்படி உயிரை விடுவதற்குக் கூட எனக்கு உரிமை இல்லையே! என் நாதனைப்பிரிந்தும், அரக்கனின் கொடிய மொழிகளைக்கேட்டும்கூட என் உயிர் போகவில்லை என்றால் என் இதயம் கல்லால் ஆனதாகத் தான் இருக்கவேண்டும். நான் செய்த பாவத்தால்தான் இவ்வளவு துன்பங்களுக்கிடையே உயிருடன் இருக்கின்றேன். அதனால்தானே என்னை மீட்க ராமன் இன்னும் இங்கு வராமலிருக்கின்றார். பதினாலாயிரம் அரக்கரையும், விராதனையும் என்பொருட்டுக் கொன்ற என் நாயகன் இந்தப் பாதக அரக்கனை இன்னும் ஏன் விட்டுவைத்திருக்கின்றார்? ராம-ராவண யுத்தம் வந்தால் இந்த இலங்கை எரி உண்ணும்; இலங்கை மாந்தர்கள் நான் இப்பொழுது எவ்வாறு அழுது துடிக்கின்றேனே அவ்வாறு அலறித்துடிப்பார்கள்; இலங்கை நகரமே கணவனை இழந்த கைம்பெண் போலாகிவிடும். ஆனால், அதற்குள் தர்மத்தில் பற்றில்லாத, நரமாமிசம் தின்னும் இவ் அரக்கியர் என்னை அரக்கனின் உணவிற்காகப் பலியிட்டு விட்டால்? ஒருவேளை நான் உயிருடனிருப்பதே ராமருக்குத் தெரியாதோ? நான் இங்கிருப்பது தெரிந்திருந்தால் இந்நேரம் இங்கு வந்திருக்க வேண்டுமே? அல்லது ஒருவேளை என் பிரிவால் என் ராமனே விரசுவர்க்கம் புகுந்தாரோ? அல்லது என்னால் இனிப்பயன் இல்லை என்று என்னைத் துறந்துவிட்டாரோ? அல்லது, பூண்ட தவவேடத்திற்கு இயையப் பொறுமை மேற்கொண்டு பொல்லாத ஆயுதங்களைத் துறந்து தவவாழ்க்கையிற் புகுந்து விட்டாரோ? ஒருவேளை ராவணனால் வஞ்சிக்கப்பட்டுக் கொல்லப்பட்டாரோ? எப்படியிருப்பினும் நான் உயிர் விடுவதே எனக்கு நல்ல வழியாகத் தோன்றுகின்றது." இவ்வாறு எண்ணிக் கொண்டிருந்தாள் சீதாப்பிராட்டி.

2. வான்மீகத்தில் நிகழ்ச்சி நிரல்

சீதை தங்களிடம் கூறிய சொற்களைக் கேட்ட அரக்கியர் மனம் கொதித்தனர்; சீதையின் வார்த்தைகளைச் சிலர் ராவணனிடம் தெரிவிக்கும் பொருட்டு ஓடினார்கள். அரக்கியரிடம் பேசிவிட்டுச் சீதை தன் எண்ணத்தைச் செயல்படுத்த முனைவதற்கு முன் அந்த அரக்கியரிடம் திரிசடை தன் கனவுச் செய்தியைச் சொல்லி அவர்களை அடக்கும் பகுதி வான்மீகத்தில் வருகின்றது. இக்கனவுபற்றி ஏற்கனவே நாம் பார்த்து விட்டோமாதலால் [IV: 17] சீதையின் நிலையைத் தொடர்ந்து இப்போது கவனிக்கலாம். கம்பனில் திரிசடையின் கனவு சீதையிடம் மட்டும் சொல்லப் படுவதாகவும், ராவணன்-சீதை சந்திப்பிற்கு முன்பே இது நிகழ்ந்து விடுவதாகவும் முன்னர்க் கண்டோம். வான்மீகத்தில் 22வது சர்க்கத்துடன் ராவணன் சீதையை மிரட்டி விட்டுச் சென்றுவிடுகின்றான். 23வது சர்க்கம் அரக்கியர் சீதையை மிரட்டுவதைக் கூறுகின்றது. 24, 25, 26வது சர்க்கங்களில் அரக்கியரின் மிரட்டலும், சீதையின் பதிலும், அந்தப் பதிலில் அவள் உயிர்துறக்க முடிவு செய்ததும் தெரிவிக்கப்படுகின்றன. 26 வது சர்க்கத்தில் புலம்பத் தொடங்கிய சீதை, அதனுடைய தொடர்ச்சியாக 28வது சர்க்கத்தில்தான் மீண்டும் தன் நிலைக்கு வருந்தி உயிர் நீக்க முயல்கின்றாள். இடையேயுள்ள 27வது சர்க்கம் அரக்கியரில் சிலர் சீதையின் பேச்சை ராவணனிடம் தெரிவிக்கப்போவதாகவும், திரிசடை அரக்கியரை அடக்கித் தன் கனவைச் சொல்வதாகவும் அமைகின்றது. இந்த 27வது சர்க்கத்தின் முடிவில், திரிசடை, சீதையின் மேனியில் இடக்கண், தோள், முதலிய அவயவங்கள் துடிக்கின்றனவென்றும், அவள் அமர்ந்திருந்த இடத்திலிருக்கும் மரக்கிளையிலுள்ள ஒரு பறவை இனிமையாகப் பாடுவது அவளுக்கு ஏதோ நல்ல செய்தி விரைவில் கிடைக்கப் போவதை அறிவுறுத்துகிறது என்

றும் கூறுகின்றாள். 28வது சர்க்கம் ஆரம்பத்தில் ராவணனுடைய கொடிய வார்த்தைகளைக் கேட்ட சீதை மனம் வருந்தி, சிங்கத்தின் கையில் அகப்பட்ட பெண் யானைக்குட்டி போல் நடுநடுங்கினாள் என்றும், நடுக்காட்டில் துணையின்றி விடப்பட்ட இளம் பெண்போன்று புலம்பினாள் என்றும் முனிவர் கூறுகின்றார். இந்தச் சர்க்கத்தின் தலைப்பு, சீதை "தலைப் பின்னலினால் உரி போட்டுக்கொள்ள நினைத்தல்" என்று காணப்படுகின்றது. இச்சர்க்கத்தில் சீதை மீண்டும் தன் இதய வேதனைகளை வெளிப்படுத்துவதாக வருகின்றது. சோகம் ததும்பும் சீதையின் இச்சொற்களைப் படிக்கும் போது கல்மனமும் உருகும்:

"விதிக்கப்பட்ட காலத்திலல்லாது மரணம் வராது என்பது சான்றோர் வாக்கு. அதனால் தான் போலும் இவ்வளவு கஷ்டங்களை நான் அனுபவித்தும்கூட மரணம் என்னிடம் நெருங்கவில்லை! நானே என் உயிரைப் போக்கிக்கொள்வதே சிறந்தது. உயிருடன் இருந்தால், கருப்பையில் சிக்கிய குழந்தையைத் துண்டம் துண்டமாக வெட்டி வெளியே எடுப்பது போன்று என்னை இந்த அரக்கியர் கொல்லப் போகின்றார்கள். பெரும் புயலில் சிக்கிய மரக்கலம் போல் நான் நிலைகுலைந்து நிற்கின்றேன். மான் வடிவம் எடுத்து வந்த அரக்கனால் இருவரும் கொல்லப்பட்டிருக்க வேண்டும். ஆண் சிங்கங்களான சகோதரர்கள் இருவரையும் எமனிடம் அனுப்பிய பாவி நான்......

"கணவனே தெய்வம் என்று தொழுது வாழ்ந்த எனக்கு ஏன் இந்த முடிவு? நன்றி கெட்டவர்க்குச் செய்யும் உபகாரம் போல் என் தர்மம், தவம் இவை பயன்படாமல் போய் விட்டனவே! விஷமும், கூரிய வாளும் எனக்கு இங்குக் கிடைக்க வழியில்லை. எனவே என்னுடைய சடையின் துணைகொண்டே இப்பொழுதே எமன் உலகுக்குப் போகிறேன்."

இவ்வாறு புலம்பிய சீதைக்குச் சில நற்சகுனங்கள் தோன்றின என்ற செய்தியுடன் 28வது சர்க்கம் முடிவடைகின்றது.

29வது சர்க்கத்தில் சீதையிடம் தோன்றிய நற்சகுனங்கள் விவரிக்கப்படுகின்றன. "மீன்களால் அசைக்கப்பட்ட தாமரை மலர்போல் சீதையின் இடக்கண் துடித்தது. தானம் செய்பவரைச் சுற்றிலும் அண்டிப் பிழைப்பவர்கள் சூழ்ந்திருப்பது போன்று சீதையிடம் பல நற்சகுனங்கள் தோன்றின. அவளுடைய முகம் ராகுவின் பிடியிலிருந்து விடுபட்ட சந்திரன் போன்று ஒளி வீசியது. காற்றாலும் வெயிலாலும் வாடி உலர்ந்து முளையாமற்போன விதை, மழை வந்தால் எவ்வாறு புத்துயிர் பெற்றுச் செழித்து வளருமோ அது போன்று சீதை மகிழ்ச்சியடைந்தாள்." முனிவர் பெருமானின் இவ் உவமைகளைப் படித்துப் படித்து ரசிக்கலாம். இயற்கையோடு இயைந்த அற்புதமான உவமைகள்! இவற்றைக் கம்பனும் வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்கின்றான். [காட்சிப் படலம், 3, 10].

30வது சர்க்கத்தில் சீதையிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் முறை பற்றி அனுமன் யோசிக்கின்றான். 31வது சர்க்கத்தில் அனுமன் ராமகாதையைச் சீதைக்குமட்டும் கேட்கும் வண்ணம் பாடுகின்றான். 32வது சர்க்கத்தில் சீதை அனுமனைப் பார்க்கின்றாள். 33வது சர்க்கம் அனுமன்–சீதை உரையாடலை விவரிக்கின்றது. இனி, இக்கதைப் போக்கினைச் சிறிது விரிவாக ஆராய்வோம்.

3. அனுமன் பாடிய ராமகாதை

சிம்சுபா மரத்தினடியில் நின்றிருந்த சீதையின் எண்ணத்தை அறிந்துகொண்ட அனுமன் அவளுடைய கவனத்தைத் தன்பால் ஈர்க்க என்ன செய்யலாம் என்று யோசிக்கின்றான்:

'ராவணன்போன்று தூயமொழியில் பேசினால் சீதை என்னையும் அரக்கன் என்று நினைத்துவிடக்கூடும். எனவே, சாதாரண மனிதர்கள் மொழியிலேயே பேசுவது நல்லது. அரக்கன் என்று என்னைச் சீதை நினைத்துவிட்டால் கூச்சலிடுவாள். அரக்கியர் விழித்துக் கொள்வர்; கலவரம் ஏற்படும்; நாம் வந்த காரியம் தடைப்படும். இந்த எண்ணத்துடன் சீதை நின்றிருந்த சிம்சுபா மரத்தின் கிளையில் அமர்ந்துகொண்டு ராமபிரானின் வரலாற்றை இனிமையாகப் பாடத் துவங்குகின்றான். தசரதனின் முன்னோர்களின் பெருமை, இராம இலக்குவர், சீதை வனம் வந்தது, ராமனும் இலக்குவனும் சுக்ரீவனுடன் நட்புக்கொண்டது, தற்போது அனுமன் சீதையைக் கண்டது முதலிய செய்திகளையெல்லாம் மெல்லிய குரலில் சீதைக்குக்

கேட்கும்வண்ணம் பாடுகின்றான் அனுமன்.

ராமகாதையைச் செவிமடுத்த சீதைக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பயத்துடன், முகத்தில் படிந்திருந்த கூந்தலை விலக்கி விட்டுக் குரல் வந்த திசை நோக்கிச் சிம்சுபா மரத்தின்மேல் பார்வையைச் செலுத்தினாள்; மற்ற பக்கங்களிலும் தன் மருண்ட பார்வையை ஓடவிட்டாள். இந்தத் திகைப்புக்கு இடையேயும் அவள் மனதிற்குள் 'நான் இப்போது கேட்டது உண்மையாக ஆகட்டும்' என்ற எண்ணம் நிறைந்து துடிக்கும் அவள் மலர் இதழ்களின் மூலம் வெளிப்பட்டது. அவள் பார்த்த சிம்சுபா மரத்தின் கிளையொன்றில் உதயகிரியிலிருக்கும் சூரியனைப் போன்றவரும் கிளை இடுக்கில் மறைந்துகொண்டிருப்பவரும், வெள்ளை ஆடை உடுத்தியவரும், மின்னல் தொகுதிபோல் பிங்கள நிறத்தவரும், உருக்கி விட்ட தங்கம் போன்ற கண்களையுடையவரும், மலர்ந்த அசோக மலர்களின் கூட்டம்போன்று அழகிய மேனியையுடையவரும், அடக்கமே உருவானவரும் ஆகிய மாருதியைக் கண்டாள். அவளுடைய உள்ளக் கிளர்ச்சியை ஒரு 'தனி மொழி'—Soliloquy—மூலம் விளக்க முற்படுகின்றார். சீதை தனக்குத்தானே பேசிக்கொள்கின்றாள்:

"சாஸ்திரங்களினால் அபசகுனம் என்று விளக்கப்பட்ட விகார உருவமுடைய குரங்கை நான் பார்க்கும்படி நேர்ந்துவிட்டது. என் கணவனும், இலக்குவனும், தந்தையும் நலமாக இருக்கட்டும். நான் காண்பது கனவு இல்லை. ராமனைப் பிரிந்த எனக்கு உறக்கம் இல்லையாதலால் கனவு தோன்ற வழியில்லை. எப்பொழுதும் ராம சிந்தனையுடன் இருப்பதால் ராமன் கதையைக் காதில் கேட்டது போன்ற மனப்பிரமையாக இருக்குமோ இது? ஆனால் குரங்கின் வடிவத்தை நான் கண்ணால் கண்டுகொண்டிருக்கின்றேனே! மேலும் அக்குரங்கு பேசியதையும் கேட்டேனே! இந்திரனுக்கும், பிருகஸ்பதிக்கும், பிரம்மாவுக்கும், அக்னிக்கும் நமஸ்காரம்! இந்த வானரன் சொன்னவையெல்லாம் உண்மையாக ஆகட்டும்!"

தான் சொல்லிய கதையினால் சீதை ஓரளவு மனம் சாந்தமடைந்திருக்கின்றாள் என்று அறிந்துகொண்ட அனுமன், மரத்திலிருந்து இறங்கி, சீதையை அணுகி, அடக்கத்துடனும், வாடிய முகத்துடனும், அவள் காலில் விழுந்து, வணங்கி, எழுந்து, கூப்பிய கரங்களுடன் அவளிடம் மேலும் பேசலுற்றான்:

"மாதர்குலத்திலகமே! தூய்மையே வடிவெடுத்த மாதரசி! கசங்கியிருக்கும் பட்டாடை உடுத்தியிருக்கும் மங்கையே! மரத்தின் கிளையைப் பற்றிக்கொண்டு நிற்கும் நீர் யார்? தாமரை மலர்போன்ற உம் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பெருகி வருவதன் காரணம் என்ன? தேவர், அசுரர், நாகர், கந்தருவர், யட்சர், கின்னரர், ருத்திரர், வசுக்கள் இவருள் எக்குலத்தைச் சேர்ந்தவர் நீர்? தேவதைபோன்று தோற்றமளிக்கும் நீர் சந்திரனை விட்டுப் பிரிந்து மண்ணுலகு வந்த மாண்புடைய ரோஹிணி தேவியா? அல்லது ஊடல் கொண்டு வசிட்டரை வருந்தும்படி விட்டு விட்டு வந்த அருந்ததியா? உம்முடைய குலம் எது? சுற்றம் யார்? துயர்க்கடலில் மூழ்கியுள்ள உம்முடைய செயல்களிலிருந்து நீர் தேவலோகத்துப் பெண்ணாகத் தெரியவில்லை. அழுதலும், பெருமூச்செறிதலும், உம் பாதங்கள் பூமியைத் தொட்டுக் கொண்டிருத்தலும், ஓர் உத்தமனின் நாமத்தையே உம்முடைய வாய் உச்சரித்துக் கொண்டிருப்பதும் நீர் இந்நிலவுலகத்து நங்கையே என்பதை உறுதிப்படுத்துகின்றன. உம்முடைய தோற்றத்திலிருந்தும், செயல்களிலிருந்தும் நீர் ஓர் அரசர் குல மங்கை என்று தெரிகின்றது. அரக்கர் கோன் ராவணனால் சிறையெடுக்கப்பட்ட சீதா தேவியாக நீர் இருந்தால் எனக்குத் தெளிவாக எடுத்துச் சொல்வீராக! அதனால் உமக்கு எல்லா நலன்களும் ஏற்படப்போகின்றன. உம் அழகோ மனித இனத்தில் காணமுடியாதது! உம் உருவம் தவநெறியுடன் பொலிகின்றது! உம் மனத்துயரமோ சொல்லில் அடங்காதது! எனவே நீர் நிச்சயமாக ராமபிரான் தேவியாகத்தான் இருக்கவேண்டும்!"

அனுமன் சீதையிடம் கூறிய முதல் வார்த்தைகள் இவை. தான் பிறந்தது. வளர்ந்தது, மணம் முடித்தது, கானகம் வந்து ராவணனால் கவரப்பட்டு இன்னும் இரண்டு மாதங்களில் கொல்லப்படப்போவது முதலியவற்றைச்சீதை அனுமனிடம் தெரிவிக்கின்றாள்.

அமரநாத யாத்திரை

(120ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

சேஷநாக், பஹல்காமிலிருந்து 18 மைல் தூரத்தில் 11,130 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள பெரிய ஏரியின் முன் பரந்துள்ள சமவெளியில்தான் யாத்ரிகர்கள் கூடாரம் அமைத்துத் தங்கவேண்டியுள்ளது.

அமரநாதன் அருளால் காலநிலை எங்களுக்கு ஒத்தாசையாக இருந்தது. வெயில் கடுமையாக இல்லாமலும், மழை பொழியாமலும் இருந்தன. பஹல்காமிலிருந்து எங்கும் தங்காமல் வந்ததாலும், மலைச் சிகரத்தில் சிரமத்துடன் ஏறியதாலும், பகல் முழுவதும் சரியான உணவு இல்லாததாலும், மலைப்பகுதியின் குளிர்காற்றினாலும் எல்லாரும் மிகக் களைப்படைந்து சேஷநாக்கை எப்போது அடைவோம் என்ற எண்ணம் கொண்டிருந்தோம். மெதுவாகச் சென்று 11,500 அடி உயரமுள்ள சஜ்பால் சிகரம் ஏறி இறங்கி 12,500 அடி உயரமுள்ள வாவ்ஜன் என்ற இடத்தை அடைந்தோம். அந்த மலையின் பின் சரிவில் சேஷநாக் உள்ளது. நடந்து வந்தவர்களில் இருவர் இனி நடக்கமுடியாது எனப் படுத்துவிட்டனர். தெய்வச் செயலாக அங்கே வந்த இரண்டு குதிரைகளுக்கு ரூ. 20 வாடகை பேசி அவர்களை ஏற்றி அனுப்பினோம்.

சேஷநாக்

சேஷநாக்கை முதலில் அடைந்தவர்கள் 6 மணிக்குச் சேர்ந்தார்கள். டிராவல் கம்பனியைச் சேர்ந்த சமையல்காரர்கள் சமையல் சாமான்களோடு எங்களுடன் வந்ததால் இரவில் சிற்றுண்டி தயாரித்து அளித்தார்கள். அனைவரும் மிகவும் களைப்படைந்து இருந்ததால் பலபேர் சாப்பிடவில்லை. முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்ததால் அனைவருக்கும் கூடாரமும், கட்டிலும், ரசாய்களும் வசதியாகக் கிடைத்தன. மழை இல்லாமல் இருந்ததால் நன்கு உறங்கி ஓய்வு எடுத்துக்கொள்ள முடிந்தது. பௌர்ணமி சமயமானதால் இரவில் வெண்ணிலவின் ஒளியில் பனி படர்ந்த மலை உச்சிகள் பளிங்கெனத் திகழ்கின்ற காட்சி கவினுடன் விளங்கியது. அங்குச் சேஷநாக் என்ற ஏரி பெரியதாக உள்ளது. சுற்றிலும் உள்ள மலைகளினின்று வரும்ஊற்றுக்கள் வந்து தேங்கி அது சமுத்திரம்போன்று காட்சி அளிக்கின்றது. நீர் நீல நிறமாகத் தெரிகிறது. தெளிவான நீரில் மலைச் சிகரங்களின் நிழல்கள் ஐந்துதலை நாகம் போன்று காட்சி அளிக்கின்றன. அந்த ஏரி ஜலத்தின் மீதுபட்டு வீசும் காற்று சேஷநாக் என்ற பெயருக்கு ஏற்றாற் போன்று விஷம் போன்று உடலில் பாய்கிறது. ரசாய் என்பது 3 அங்குல கனமுள்ள சிறிய மெத்தை ஆகும். கீழே ஒன்று போட்டு மேலே ஒன்று போர்த்திக்கொண்டதால் குளிர் எங்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை என்றாலும் வெப்பப் பிரதேசத்தில் இருந்து சென்றுள்ள எங்களை இங்குக் குளிரின் கொடுமை ஓரளவு உணரச் செய்தது.

யாத்ரிகர்களுக்காக இரண்டு மாதங்களுக்குச் சாதாரணச் சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. தனியார் கூடாரங்கள் சில இங்கு வாடகைக்குத் தருகிறார்கள். கூட்டத்தை அனுசரித்து வாடகை ரூ. 5-00 முதல் ரூ. 50-00 வரை வசூலிக்கிறார்கள். குதிரைக்காகவும் குதிரைக்காரர்களுக்காகவும் நான்கு தகர ஷெட்டுகள் அரசினர் கட்டி வைத்திருக்கிறார்கள்.

25ஆம் தேதி காலை 5 மணிக்கு எழுந்தோம். விடியற்காலை 4 மணிக்கே வெளிச்சம் ஏற்பட்டு விடுகிறது. காலைக் கடன்களை முடித்துக் கொண்டோம். குடிநீர்க் குழாய்கள் ஆங்காங்கு அரசினரால் அமைக்கப்பட்டுள்ளன. சுத்தமான நீராக இருந்தபோதிலும் வெந்நீரைத் தவிர வேறு ஒன்றையும் பயன்படுத்த முடிவதில்லை. வெந்நீர் அங்குச் சிற்றுண்டிச் சாலைகளில் விலைக்குக் கொடுக்கிறார்கள். முகம் கழுவமட்டும் கிடைக்குமேயொழிய குளிக்க நீர் கிடைக்காது. ஒரு பிளாஸ்க் வெந்நீர் ரூ. 1-00 ஆகும்.

காலையில் எழுந்திருப்பதற்குப் பலர் சிரமப்பட்டார்கள். ஒரேயடியாகப் பதினெட்டுமைல் மலைப் பயணத்தினால் சிரமமடைந்தவர்கள் சிலர் சந்தன்வாரியில் தங்கி வந்திருக்கவேண்டு

மென முறையிட்டார்கள். பல பேருக்குச் சளி, இருமல், ஜுரம் போன்ற சிறு உபாதிகள் ஏற்பட்டன. கையில் கொண்டுசென்றிருந்த மருந்து மாத்திரை வகைகள் அங்கு நன்கு உபயோகமாக இருந்தன. சிறிதுநேரம் பிரார்த்தனை செய்தோம். “இங்கு இறைவனைத் தவிர வேறு துணை இல்லை. முழு மன உறுதியுடன் சென்றால் ஸ்ரீ அமரநாதன் அருளால் தரிசனம் செய்ய முடியும். இதுவரை மழை பொழியாமலும் எந்த இடையூறும் இல்லாமலிருந்ததே ஸ்ரீ அமரநாதன் நமக்கு அருள்புரிந்த வருவதற்கான அறிகுறியல்லவா” என்று கூறி உற்சாகப்படுத்தினோம். காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு ‘ஸ்ரீ அமர்நாத் கீ ஜே’ என்ற கோஷத்துடன் புறப்பட்டோம்.

முதல் நாள் மலைப் பிரயாண அனுபவத்தை மனதில் கொண்டு இங்கு ஒவ்வொருவரும் பிளாஸ்கில் வெந்நீர், தோளில் தொங்கவிடும் பையில் பிஸ்கட், சாக்லெட் போன்றவற்றை எடுத்துக் கொண்டனர். வழியில் மழை பொழிந்தால் என்ன செய்வது என எண்ணிச் சிலர் மழைக்கோட்டு அணிந்து சென்றனர். சிலர் மடித்துப் பையில் வைத்திருந்தனர். கம்பள ஆடைகளின் முழு உபயோகம் இங்கேதான் ஏற்படுகிறது. தலையில் குரங்கு குல்லாயும், உடல்மீது முழுக்கைக் கம்பளிச் சட்டையும், கைகளுக்கு உறையும், கால்களுக்குக் காலுறையும் கேன்வாஸும் கையில் தடியுடனும் பலர் புறப்பட்ட காட்சி யாரையும் எளிதில் அடையாளம் தெரிந்துகொள்ள முடியாத அளவில் இருந்தது. எல்லாரும் ஓரளவு மன உற்சாகத்துடனும், உறுதியுடனும் புறப்பட ஆயத்தமானோம்.

குதிரைகளும், குதிரைக்காரர்களும் இந்தப் பயணத்தில் பழக்கப்பட்டிருந்த போதிலும் அன்று காலையில் அவர்கள் தயார் செய்து கொண்டு வருவதற்குச் சிறிது நேரம் எடுத்துக்கொண்டார்கள். தங்கள் குதிரையில் வந்தவர்களிடம் இனம் வாங்கிக் கொண்டுதான் புறப்பட்டார்கள். அவர்கள் தங்களுடன் கொண்டு வந்த ஆட்டா மாவைக்கொண்டு ரொட்டி தயார் செய்து சாப்பிடுகிறார்கள். கடையில் தேநீர் வாங்கிக் குடிக்கிறார்கள். நம்முடைய உணவை அவர்கள் விரும்புவதில்லை.

எல்லாவற்றையும் சரி செய்து கொண்டு 7 மணிக்குப் புறப்பட்டோம். சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் ஓரளவு சமமான பாதையில் சென்றோம். அதன் பிறகு மஹாகுணம் என்கின்ற அமரநாத யாத்திரையின் மிக உயரமான பகுதி தென்பட்டது. இதன் உயரம் 14,500 அடி. இதைக் கண்டவுடன் முந்திய நாள் அனுபவத்தினை ஒட்டிச் சிறிது மனத்தளர்ச்சி ஏற்பட்டது. இருப்பினும் அமரநாதனைக் காணவேண்டும் என்ற அவா ஒன்றே எங்களை முன்னேக்கி இழுத்துச் சென்றது

சந்தன்வாரிவரை அதிகமாகவும் அங்கிருந்து சேஷநாக் வரை அங்கொன்றும் இங்கொன்றுமாக மரங்கள் காணப்படுகின்றன. சேஷநாக்கிற்கு மேல் பனிமலைகளைத் தவிரச் செடி கொடிகள் எதுவுமே காண முடிவதில்லை.

மஹாகுனஸ் மலைமீது ஏற்றத்தில் செல்லும் போது சிரமப்பட்டு ஏறவேண்டியிருப்பதால் உடல் உஷ்ணமடைந்து கம்பளி உடைகளை ஒவ்வொன்றாகக் கழற்ற வேண்டி வந்தது. உயரப் போகப் போகக் காற்றின் அழுத்தம் குறைவாக இருந்ததால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டது. மேலே ஏற வேண்டியிருப்பதால் மூக்கினால் சுவாசிப்பது போதாமல் வாயினாலும் சுவாசிக்க வேண்டிய அவசியம் எல்லாருக்கும் ஏற்பட்டது. இத்துடன் இரண்டு நாட்களாக வழக்கமான உணவு இல்லாததாலும், மிகக் குளிரான சீதோஷ்ண நிலை இருந்ததாலும், முதல் நாளே அதிகச் சிரமப்பட்டிருந்ததாலும் அங்குச் சிரமம் உச்சநிலையடைந்தது. நுரையீரல்கள் பலவீனமாக உள்ளவர்களுக்கு மூச்சு விடுவதில் அதிகச் சிரமம் ஏற்படுகின்றது. குதிரைகளும் வாயைத் திறந்து மூச்சு விடுகின்றன; மிகுந்த சிரமப்பட்டு ஏறுகின்றன; அடிக்கடி நின்று விடுகின்றன. குதிரைக்காரன் உடன் வந்து ஓட்டினால்தான் மேலும் செல்லுகின்றன. குதிரைமேல் ஏறிச் செல்பவர்களுக்கும் இங்குச் சிரமம் அதிகமாகத்தான் இருக்கிறது. தண்டியைத் தூக்குபவர்களும் ஏற்றத்தில் சிரமப்படுகிறார்கள். ஆங்காங்கே கீழே இறக்கி வைத்து விடுகிறார்கள். அதனால் தண்டியில் செல்வோருக்கும் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படுகிறது. இந்த இடத்தில் அதிக நேரம் நிற்கக்கூடாது. உடனடியாகக் கடந்து

விடவேண்டும். ஆவணிப் பௌர்ணமியின் போது அதிக எண்ணிக்கையில் யாத்திரிகர்கள் வருவதால் அரசினர் மருத்துவர்களை வைத்துப் பிராணவாயு தருவதற்கும், முடியாதவர்களுக்கு உதவி செய்யவும் ஏற்பாடு செய்கிறார்கள்; மற்றநாட்களில் இந்தவசதிகள் இல்லை.

உச்சியை அடைந்த பிறகு பஞ்சதரணியை நோக்கி இறக்கம் ஆரம்பிக்கிறது. இதுவரை மேல்நோக்கியே சென்றுகொண்டிருந்தபோது உடல் முன்னேக்கிச் சாய்ந்தும் கால்கள் மேலே தூக்கியும் இருந்தநிலை இப்போது மாற்றம் பெறுகின்றது. பின்னேக்கிச் சாய்ந்து செல்வதில் அவ்வளவு கஷ்டம் இல்லை.

புஷ்பத்ரி என்னும் இடத்தில் சிறிது அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டோம். ஓரளவு சிறுசிறு புற்கள் அடர்ந்து உள்ளதால் குதிரைகளை நீண்டநேரம் மேய விட்டுவிடுகிறார்கள். இங்கு நன்கு சுவாசிக்க இயலுகிறது. இதன் உயரம் 12,500 அடிதான். இங்குச் சிற்றுண்டிச் சாலைகள் இருப்பதால் தாகசாந்தி செய்துகொள்ளவும் வசதி இருக்கிறது.

சேஷநாக்கிலிருந்து பஞ்சதரணி 8 மைல் தொலைவில் உள்ளது. இதுவரை 4 மைல்கள் கடந்துவிட்டோம். இன்னும் 4 மைல்கள் உள்ளன. இறக்கமான வழியாக இருந்ததாலும் ஏற்றத்தைத் தாண்டிவிட்டதாலும் மனதில் ஒரு தெம்பு உண்டாகிறது. சேஷநாக்வரை ஆற்றங்கரையை ஒட்டி வந்ததுபோன்று இங்குப் பஞ்சதரணி ஆற்றங்கரையை ஒட்டிப் பாதை செல்கிறது. பல இடங்களில் மரப்பாலங்கள் மூலம் பல ஓடைகளைக் கடந்து செல்கின்றோம். பகல் ஒரு மணிக்கெல்லாம் பஞ்சதரணியை அடைந்தோம்.

பஞ்சதரணி

பஞ்சதரணி 11,500 அடி உயரத்தில் உள்ளது. இது உயர்ந்த சிகரங்களுக்கிடையில் உள்ள பரந்த பள்ளத்தாக்கு ஆகும். இங்கு ஐந்து நதிகள் வந்து ஒன்று சேருகின்றன. மலைச்சிகரங்கள் வெண்பனியால் மூடப்பட்டு வெள்ளி மலைகள்போன்று கண்ணுக்குச் சிறந்த விருந்தாக அமைகின்றன. இவைகளைக் காணும்போதே யாத்திரையின் கஷ்டம் பாதிக்குமேல் பறந்தோடிவிடுகின்றது. பஞ்சதரணியிலேயே ஒருவிதத் தெய்வீக அமைதியும் இனிமையும் அவரவர் மனப் பண்பாட்டிற்கு ஏற்ப உணரமுடிகின்றன. பஞ்சதரணி நதியில் சிலர் ஜில்லென்ற நீரில் மெல்லெனக் குளித்தோம். குளிக்கும்போதே களைப்பெல்லாம் நீங்கி, புத்துணர்ச்சி உண்டாகிறது. வழி நடந்தபிரயாணக் களைப்பையெல்லாம் மறந்து அமரநாதனைக் காணவேண்டுமென்ற அவா ஒன்றே எல்லார் உள்ளத்திலும் ஓங்கி நின்றது.

பஞ்சதரணி ஆற்றங்கரையில் அணி அணியாகக் கூடாரங்கள் அமைத்திருந்தனர். அனைவரும் பிற்பகலும்,இரவு முழுவதிலும் நன்கு ஓய்வெடுத்துக்கொண்டோம். எங்கள் குழுவுடன் வந்திருந்த சமையல் ஆட்கள் நண்பகல் உணவுக்குச் சாதம், ரசம் தயாரித்தனர். பிற்பகல் 3 மணி அளவில் அனைவரும் உணவு உட்கொண்டோம். எமது குழுவில் இரு அன்பர்கள் குதிரைமூலம் உடனே அமரநாதம் சென்று தரிசனம் செய்து மாலைக்குள் திரும்பி வந்து சேர்ந்துவிட்டனர். சந்தன்வாரி, சேஷநாக்கைப் போலவே இங்கும் சில சிற்றுண்டிச்சாலைகளும், கூடாரங்களும் இரண்டுமாத காலத்திற்காக அமைத்திருக்கிறார்கள். குதிரைகளும், குதிரைக்காரர்களும் தங்குதற்குத் தகரக்கூரை வேய்ந்த ஷெட்டுகள் அரசினரால் அமைக்கப்பட்டுள்ளன. சந்தன்வாரி, சேஷநாக்கைவிட இங்குதான் வசதியாகவும், அமைதி, இனிமை, கவர்ச்சி மிகுந்ததாகவும் காணப்படுகிறது. காலத்தையும் மறந்து இருக்கக்கூடிய சூழ்நிலை இங்கு உள்ளது.

ஸ்ரீ அமரநாதர் தரிசனம்

26ஆம் தேதி உள்ளமும் உடலும் ஓய்வு பெற்ற பின் புது உற்சாகத்துடன் அமரநாதனைத் தரிசிக்கப்போகிறோம் என்ற ஆர்வத்துடன் எல்லாரும் அதிகாலையிலேயே எழுந்தோம். காலைக் கடன்களை முடித்துவிட்டுச் சிறு பிரார்த்தனை செய்தோம். சிற்றுண்டி அருந்திவிட்டு அமரநாதர் குகையை நோக்கிப் புறப்பட்டோம். பஞ்சதரணியிலிருந்து குகை 4 மைல் தூரத்தில் உள்ளது. பாதை நதிக்கரையிலேயே மிகவும் குறுகியதாகவும், வளைவுகள் அதிகம் உள்ளதாகவும் இருக்கிறது. பல இடங்களில் பனிப்பாறைகள்மேல் செல்ல வேண்டியிருந்தது. அன்று அமரநாதனைத் தரிசனம் செய்து பஞ்சதரணி திரும்பி வந்து இரவு

தங்குவதற்குச் சேஷநாக் போய்ச் சேரவேண்டி யிருந்ததால் நடந்து வந்தவர்கள் எல்லாரும் பஞ்சதரணியில் குதிரைகளை அமர்த்திக் கொண்டு புறப்பட்டோம்.

பாதை மிகக் குறுகியதாக ஆற்றங்கரைச் சரிவில் அமைந்திருந்ததால் எப்போது யாருச்கு என்ன விபத்து ஏற்படும் என எண்ண முடியாதபடி இருந்தது. இப்போது எல்லாருடைய உள்ளமும் அமரநாதனை எண்ணித் துதித்தது. அவனையே நம்பிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. சிலர் கண்களை மூடிக் கொண்டே குதிரைகளில் சென்றார்கள். முழுவதும் இறைவனையே நம்பிப் போகக்கூடிய நிர்ப்பந்தத்தினால் ஒவ்வொருவரும் தாமாகவே மற்ற எல்லாவற்றையும் மறந்து செல்லக்கூடிய சூழ்நிலை இங்கு ஏற்படுகிறது. இது இமய மலை யாத்திரையில் எல்லார் உள்ளத்திலும் ஏற்படுகின்ற பெரிய பயன் ஆகும். வாழ்வில் இதற்கு முன் கண்டிராத பனிப்பிரதேசத்தின் வழியே சென்றுகொண்டிருக்கிறோம். சரணாகதி தத்துவத்தை இங்கேதான் உணர முடிகிறது. 'அவன் கையில் பிள்ளையாக' மாறிவிடுகிறோம்.

பனியால் உதடு வெடித்தும், சரியான உணவு, உறக்கமின்றியும், பஞ்சதரணிவரை மலையின் கரடு முரடான ஒற்றையடிப் பாதையில் ஒவ்வொரு அடியாகத் தம் முயற்சியால் ஊர்ந்து வந்த யாத்ரிகர்களில் சிலர் நோய் வாய்ப்பட்டு மேல்நோக்கிச் செல்ல மனமின்றி இடையிலேயே தங்கிவிடுவதும் உண்டு. அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற மணிவாசகரின் வாக்கின் பொருளை அறிய இங்கு வாய்ப்புக் கிட்டுகிறது. தளர்வுற்ற நம் நிலையைக் கண்ட குதிரைக்காரர்கள் சிலர் (பெரும்பாலும் முஸ்லீம்கள்) குருவின் பொறுப்பை ஏற்று, 'பாபா, பகவான் கா நாம்லோ, ஆகே சலோ, தோடி துர்பர் அமர் நாத்ஜீ ஹைம் உடோ, சலோ' (ஐயா, இறைவனின் திருநாமத்தைச் சொல்லுங்கள். இதோ, இன்னும் சிறிது தூரத்தில்தான் அமர நாத்ஜி இருக்கிறார். செல்வோம் வாருங்கள். என்று உற்சாகப்படுத்துகிறார்கள்.) இன்னும் சறுக்கல் நிறைந்த பனிப்பாறைகளிலும்,பல்லாயிரம் அடி உயரத்தில் மலைச்சரிவுகளில் குறுகிய பாதைவழியே செல்லும்போது 'பாபா, பகவான் கா நாம் லோ' (ஐயா, இறைவனின் நாமத்தை ஜபியுங்கள்) என்று குருமூர்த்தத்தில் வந்தகுதிரைக்காரர் குரல் கொடுப்பார். உடலை மறக்க, சுற்றுப்புறச் சூழ்நிலையை மறக்க, எதிர்ப்படும் ஆபத்துக்களை மறக்க, அகண்ட நாம ஜபம் எவ்வளவு அருந்துணையாய் அமைகிறது என்பதை வாழ்வில் அறிந்துகொள்ள அமரநாதர் குகையை அணுகும் யாத்ரிகர்களுக்கு ஓர் அரிய வாய்ப்புக் கிட்டுகிறது. சொற்றுணை வேதியன் சோதி வானவனின் நாமம் நமக்கு நற்றுணையாய் அமைய நாம் அவனுடைய குகையை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். உடல் காற்றில் மிதப்பதைப் போன்ற உணர்ச்சி! காற்றடிக்கும் திசை நோக்கிப் பறந்து செல்லும் பஞ்சு போன்ற மனநிலை! சுமார் 2,500 மைல் தொலைவிலிருந்து எந்த அமரநாதரைத் தரிசிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த உடலைச் சுமந்து வந்தோமோ அதன் பணி முடிந்து விட்டதைப் போன்ற உணர்வு மேலிடுகிறது! ஆம், அன்னமய கோசத்தையும், பிராணமய கோசத்தையும், மனோமய கோசத்தையும், விஞ்ஞானமய கோசத்தையும் தாண்டி விட்டோம்! 'போலோ, அமர் நாத்ஜீக்கு ஜய்' என்று உற்சாகமாக முழக்குகிறார் குதிரைக்காரராக வந்த குருநாதர். ஆம், உண்மை. முன்பு தென்னவன் பிரமராயனுக்காக, குதிரைக்காரனாகப் பாண்டிய மன்னனிடம் வந்தவர்தாமே. (தொடரும்)

செய்திகள்

நிகழ்பவை:

ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று மாலை 3மணிக்குமேல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் கோடை விடுமுறைக்காக அவரவர்கள் ஊருக்குப் புறப்படுவார்கள்.

ஏப்ரல் 30, மே 1, 2, 3, 4 தேதிகளில் கோவை அவனாசி ரோட்டிலுள்ள பிரசிடெண்ட்ஹாலில் கல்லூரி மாணவர்களுக்கு ஸ்ரீமத் அசலானந்த சுவாமிகள் முகாம் ஒன்று நடாத்துவார்கள்.

3-5-81 ஞாயிற்றுக்கிழமையன்று விருதுநகர் அருப்புக்கோட்டைரோட்டிலுள்ள V.M. ஞானசபாபதி-சரஸ்வதியம்மாள் சேரடீஸ் கல்யாண மண்டபத்தில் ஸ்ரீமத் பரானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை ரூ.	16-00
திருவாசகம்	பிரசார விலை ...	14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
இராமாயணம்	,, ...	5-00
தினசரி தியானம்	,, —	3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,, —	3-00
கர்மயோக விளக்கம்	—	10-00
ஞானயோக விளக்கம்	—	8-00
ராஜயோக விளக்கம்	—	8-00
பக்தியோக விளக்கம்	—	6-00
பரமஹம்சரின் பெருமை	—	6-00
விவேகானந்த விவரணம்	—	4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	—	4-00
விவேகானந்த உபநிஷதம்	—	4-00
கடவுளின் வடிவங்கள்	—	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	—	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	—	2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	—	2-00
கண்ணன் என்னும் கடவுள்	—	2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை —	3-50
பரிபூரணானந்தம்	ஷை ...	3-00
சின்மயானந்த குரு	ஷை —	3-00
ஆனந்தமானபரம்	ஷை ...	3-00
சுகவாரி	ஷை ...	3-00
மௌனகுரு வணக்கம்	ஷை ...	3-00
எங்குநிறைகின்றபொருள்	ஷை —	2-50
பரசிவ வணக்கம்	ஷை ...	1-00
பஜனைப் பாடல்கள்	—	2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்) —	1-50
விபீஷணன் சரணாகதி	ஷை —	1-50
பரமஹம்சர் பாமாலை	—	1-50
சந்நியாசி	—	1-25
இறைவணக்கம்	—	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	—	1-00
சகோதரி நிவேதிதை	—	1-00
காயத்ரீ	—	1-00
இராவண தத்துவம்	—	1-00
வாலி மோட்சம்	(நாடகம்) —	1-00
தவப்புதல்வர்கள்	(நாடகம்) —	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்) —	1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்) —	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	—	1-00
ப்ரஹ்லாதன்	(நாடகம்) ரூ.	1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்) —	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	—	0-80
நன்மக்களைப் பெறுதல்	—	0-80
நோய்க்கு இடம் கொடேல்	...	0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்) ...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	—	0-75
*ஆத்ம சக்தி	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	...	0-60
*ஆலய வழிபாடு	...	0-75
*சூரிய நாராயணன்	...	0-50
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	—	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
சைவன் யார்?	...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி	—	0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	—	0-40
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
The Bhagavad Gita (10th Imp.)	...	20-00
Sri Lalitambika Sahasranama Stotram	...	10-00
The Indian National Education	—	8-00
Ramakrishna Lives Vedanta	—	8-00
Facets of Brahman or The Hindu Gods	—	5-00
Daily Divine Digest (DELUXE)	—	4-50
Daily Divine Digest (Ordinary)	—	2-50
Mahabharata (with plastic cover)	—	4-50
Ramayana	(do) —	4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bahagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	—	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	—	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	—	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	—	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரீக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம்-4

*1981*ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் *26, 27* ஞாயிறு திங்கள் ஆகிய இரு தினங்களில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்களால்

கர்நாடக மாநிலம் மாதேசுவரன் மலையில் அந்தர்யோகம் நடாத்தப்பெறும். பாலாறு செல்வதற்குச் சேலம் ஜில்லா மேட்டூர் தாலுகாவிற்கு அருகிலுள்ள கொளத்தூரிலிருந்து வேனோ, லாரியோ கிடைக்கும். பாலாற்றிலிருந்து காலை *7-30*க்கும், மாலை *2-30*க்கும் மாதேசுவரன்மலைக்குப் பஸ் புறப்படுகிறது. மேலும் பஸ் வசதி விபரம் வேண்டுபவர்கள் Br. கிருஷ்ணன் அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் Br. கிருஷ்ணன், ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம், சின்ன தண்டா P.O., கொளத்தூர் (Via) சேலம் ஜில்லா என்ற விலாசதாரரிடமோ அல்லது N. அண்ணையன், சன்மார்க்க சங்கம், மேச்சேரி P. O., சேலம் ஜில்லா என்ற விலாசதாரரிடமோ நபர் ஒன்றுக்கு ரூபாய் இருபது வீதம் M. O. மூலமோ, நேரிலோ செலுத்திப் பதிவு செய்து அனுமதிகார்டு பெற்றுக்கொண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி மாலை *6-00* மணிக்குள் மாதேசுவரன் மலைக்குப் படுக்கை வசதியுடன் வந்துசேரவேண்டும். கலந்துகொள்ளாதவர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணி வரை
துயில் எழுந்திருத்தல்	4-30	
நாம ஜபம்	5-00	5-30
ஆசனம், நீராடல்	5-30	7-00
தியானம்	7-00	7-45
சிற்றுண்டி	7-45	8-45
உபந்யாசம்	8-45	9-45
மௌனம்	9-45	10-30
பஜனை	10-30	11-15
ஆலயவழிபாடு. அர்ச்சனை, ஆரதி	11-15	12-15

மாலை

	மணிமுதல்	மணிவரை
உணவு, ஓய்வு	1-00	3-15
உபந்யாசம்	3-15	4-15
வாசிப்பு	4-15	4-45
பானம், உலாவல், நீராடல்முதலியன	4-45	6-15
அர்ச்சனை	6-15	7-15
தியானம்	7-15	7-45
உணவு	7-45	8-45
சத் சம்பாஷணை	8-45	9-30
நித்திரை	9-30	

ஒகேனக்கல்லில் அந்தர்யோகம்

*1981*ஆம் ஆண்டு மே மாதம் *8*ஆம் தேதி காலை *4-30* மணியிலிருந்து இரவு *9-30* மணிவரையில் மேலே கண்டுள்ள வாழ்க்கை முறைப்படி ஒருநாள் அந்தர்யோகம் திருப்பராய்த்துறை தபோவனம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்களால்** நடாத்தப்பெறும்.

தர்மபுரியிலிருந்து முப்பது மைல் தூரத்தில் இயற்கை அழகும், காவேரி அருவியாக விழும் அமைப்பும் அமைந்துள்ள ஒகேனக்கல் உள்ளது. தர்மபுரியிலிருந்து ஒகேனக்கல் போகப் பஸ்போக்குவரத்து உண்டு. அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் படுக்கை வசதியுடன் மே மாதம் *7* ஆம் தேதி மாலை *6* மணிக்குள் ஒகேனக்கல் வந்துசேரவேண்டும். இதில் தாய்மார்கள் கலந்துகொள்ள அனுமதி இல்லை. இதில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ரூபாய் பத்து V. சோமு, *50* F. அப்பாவு நகர், *636 701*, தர்மபுரி என்ற விலாசத்துக்கு M.O. மூலமோ. நேரிலோ தொகையைச் செலுத்தி மே மாதம் 3ஆம் தேதிக்குள் பதிவு செய்து அனுமதிகார்டு பெற்றுக் கொள்ளவேண்டும்.

Edited by SWAMI NITHYANANDA.

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi D'